# பள்ளிக்கல்வித் துறை

## வேலூர் மாவட்டம்

# பத்தாம் வகுப்பு- தமிழ்




**க. முனுசாமி** MA., M.Sc., M.Phil., MCA., B .Ed.,

முதன்மை கல்வி அலுவலர்

வேலூர் மாவட்டம்

# முதன்மைக் கல்வி அலுவலரின் வாழ்த்துச் செய்தி



அன்புடையீர் வணக்கம்,

அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள் மார்ச் 2023 – பத்தாம் வகுப்பு பொது தேர்வில் சாதனை புரிய இருக்கும் அனைத்து அரசு / நிதி உதவி / தனியார் , உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

"வாய்ப்புக்காக காத்திராதே வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்" – அப்துல் கலாம்

இக்கையேடு மாணவச் செல்வங்கள் தேர்வில் சாதனை புரிய வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கையேட்டில் முக்கிய வினாக்களின் தொகுப்பு தனித்தனியாக மதிப்பெண் வாரியாக பிரித்து தரப்பட்டுள்ளது . தேர்ச்சி மட்டுமே நோக்கமாக இல்லாமல் அனைத்து மாணவர்களும் குறைந்த பட்சமாக (40/ 75) மதிப்பெண் வாங்கும் அளவிற்கு மாணவ / மாணவியரின் நலன் கருதி தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவச் செல்வங்கள் கையேட்டினை முழுமையாகப் புரிந்து கொண்டு , படித்து நிறைவான மதிப்பெண் பெற்று வேலூர் மாவட்டத்தின் தேர்ச்சி விழுக்காட்டினை உயர்த்தி நம் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்போம்.

**க. முனுசாமி., MA.,MSc.,M.Phil.,MCA.,B.Ed.,**
முதன்மை கல்வி அலுவலர்
வேலூர் மாவட்டம்.

## மாணவர்களுக்கான கற்றல் குறிப்பு

- ❖ பகுதி - I –ல் 15 ஒருமதிப்பெண் வினாக்கள் உள்ளதால், நாளொன்றுக்கு 20 வினாக்கள் வீதம் தொடர்ந்து 15 நாள்கள் பயிற்சி எடுத்தால்
(வினாவையும் விடையையும் புரிந்துகொண்டு படிக்க) முழு மதிப்பெண்களையும் பெறலாம்.
  - ➢ இவற்றுள் பாடல் வினாவிற்கு 4 மதிப்பெண்கள் உள்ளது. ஆதலால் பாடப்புத்தகத்தில் உள்ள செய்யுள் பகுதிகளில், ஆசிரியர் பெயர், நூற்பெயர், பிரித்து எழுதுக, இலக்கணக்குறிப்பு, சொற்பொருள், மோனை, எதுகை முதலியவற்றை படித்தால் முழு மதிப்பெண்களையும் பெறலாம்.
- ❖ பகுதி - II – பிரிவு - 1ல் 4 இரு மதிப்பெண் வினாக்கள் எழுத வெண்டும்.
(இதில் செய்யுள் குறுவினா, உரைநடை குறுவினா, திருக்குறள் மனப்பாடப்பகுதி, விடைக்கேற்ற வினா அமைத்தல் ஆகியன அடங்கும்.
  - ➢ திருக்குறள் மனப்பாடப்பகுதி, விடைக்கேற்ற வினா ஆகியவற்றை நன்கு பயிற்சி எடுத்தல் வேண்டும்.
- ❖ பகுதி - II – பிரிவு - 2ல் 5 இரு மதிப்பெண் வினாக்கள் எழுத வெண்டும்.
(இதில் இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சி ஆகியன அடங்கும்.)
  - ➢ கலைச்சொல், அகராதியைக்காண்க, பகுபதம், தனித்தொடராக எழுதுக, தொடர்களை இணைத்து எழுதுக ஆகியவற்றை நன்கு பயிற்சி எடுத்தல் வேண்டும்.
- ❖ பகுதி – III – பிரிவு – 1ல் 2 மூன்று மதிப்பெண் வினாக்கள் எழுத வேண்டும்.
(இதில் உரைநடை சிறுவினா மற்றும் உரைப்பத்தி வினாவிடை அடங்கும்)
  - ➢ உரைப்பத்தி வினாவிடையைச் சரியாக எழுத பயிற்சி எடுத்தல் வேண்டும்.
- ❖ பகுதி – III – பிரிவு – 2ல் 2 மூன்று மதிப்பெண் வினாக்கள் எழுத வேண்டும்.
(இதில் செய்யுள் மற்றும் செய்யுள் மனப்பாடப்பகுதி அடங்கும்)
  - ➢ மனப்பாடப்பகுதியை நன்கு பயிற்சி எடுத்தல் வேண்டும்.
- ❖ பகுதி – III – பிரிவு – 3ல் 2 மூன்று மதிப்பெண் வினாக்கள் எழுத வேண்டும்.
(இதில் அலகிடுதல், அணி, பாவின் பொதுவிலக்கணம், இலக்கண சிறுவினா ஆகியன அடங்கும்)
  - ➢ அலகிடுதல், அணி, பாவின் பொதுவிலக்கணம் ஆகியவற்றை நன்கு பயிற்சி எடுத்தல் வேண்டும்.
- ❖ பகுதி – IV – பிரிவு – 1ல் 5 ஐந்து மதிப்பெண் வினாக்கள் எழுத வேண்டும்.
(இதில் செய்யுள் நெடுவினா, படிவம், கடிதம், மொழிபெயர்ப்பு , காட்சியைக் கண்டு கவினுற எழுதுக முதலியன அடங்கும்)
  - ➢ படிவம், கடிதம், மொழிபெயர்ப்பு , காட்சியைக் கண்டு கவினுற எழுதுக ஆகியவற்றை நன்கு பயிற்சி எடுத்தல் வேண்டும்.
- ❖ பகுதி - V - 3 எட்டு மதிப்பெண் வினாக்கள் எழுத வேண்டும்.
(இதில் உரைநடை நெடுவினா, துணைப்பாடம், கட்டுரை ஆகியன அடங்கும்)
  - ➢ துணைப்பாடம், கட்டுரை ஆகியவற்றை நன்கு பயிற்சி எடுத்தல் வேண்டும்.

பொருளடக்கம்


| பகுதி | பிரிவு | பொதுத்தேர்வு வினா எண்கள் | தலைப்பு | மதிப்பெண்கள் | கையேட்டில் வினா எண் | கையேட்டில் பக்க எண் |
|---|---|---|---|---|---|---|
| I | 1 | 1-11 | உரிய விடை, | 11 | 1-223 | 5-22 |
| | | 12-15 | பாடல் வினாவிடை | 4 | 1-10 | 22-26 |
| II | 1 | 16-21 | திருக்குறள் மனப்பாடம் | 2 | 1-10 | 27 |
| | | | விடைக்கேற்ற வினா | 2 | 1-12 | 27,28 |
| | | | செய்யுள், உரைநடை - குறுவினாக்கள் | 4 | 1-48 | 29-33 |
| | 2 | 22-28 | இலக்கணம் குறுவினா, மொழிப்பயிற்சி | 6 | 1-56 | 33-43 |
| | | | கலைச்சொல், அகராதி காண்க | 2 | | 43,44 |
| | | | பகுபதம் | 2 | | 44,45 |
| III | 1 | 29-31 | உரைப்பத்தி வனாவிடை | 3 | 1-8 | 45-48 |
| | | | உரைநடை சிறுவினா | 3 | 1-7 | 48-51 |
| | 2 | 32-34 | மனப்பாடம் | 3 | | 51-53 |
| | | | செய்யுள் சிறுவினா | 3 | 1-14 | 53-56 |
| | 3 | 35-37 | அணி | | 1-9 | 57-59 |
| | | | இலக்கணம் சிறுவினா | | 1-14 | 59-63 |
| | | | அலகிடுதல் | | | 63-65 |
| | | | பாவின் பொதுவிலக்கணம் | 6 | | 65,66 |
| IV | | 38-42 | மொழிபெயர்ப்பு | 5 | 1-12 | 66-69 |
| | | | கடிதம் | 5 | 1-9 | 69-74 |
| | | | காட்சியைக் கவினுற எழுத்து | 5 | 1-11 | 74-78 |
| | | | மொழிப்பயிற்சி | 5 | | |
| | | | படிவம் | 5 | 1-4 | 79-81 |
| V | | 43-45 | உரைநடை நெடுவினா, துணைப்பாடம் | 16 | 1-15 | 81-91 |
| | | | பா நயம் | | | 91-93 |
| | | | கட்டுரை | 8 | 1-5 | 93-97 |

## பத்தாம் வகுப்பு – தமிழ் – மெல்லக் கற்போருக்கான கற்றல் குறிப்பேடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (வினாக்கள் 1-11)**

1. சாகும் போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் என்று பாடியவர் ----------- ஆவார்.

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் **ஆ) க.சச்சிதானந்தன்**
இ) பாரதியார் ஈ) நப்பூதனார்

2. பெருஞ்சித்திரனார் அவர்களின் இயற்பெயர் என்ன?

அ) **துரைமாணிக்கம்** ஆ) கனகசபை
இ) சுப்பையா ஈ) சுப்பிரமணி

3. பின்வருவனவற்றுள் எது பெருஞ்சித்திரனார் அவர்களின் படைப்பு அல்ல ?

அ) உலகியல் நூறு ஆ) பாவியக்கொத்து
இ) **மாங்கனி** ஈ) மகபுகுவஞ்சி

4. பின்வருவனவற்றுள் எது பெருஞ்சித்திரனார் அவர்களின் படைப்பு அல்ல ?

அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை எண்பது ஈ) **குறுஞ்சிதிட்டு**

5. தென்மொழி, தமிழ்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை ஊட்டியவர் யார்?

அ) **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** **ஆ)** க.சச்சிதானந்தன்
இ) பாரதியார் ஈ) நப்பூதனார்

6. நாடும் மொழியும் நமது இரு கண்கள் என்று கூறியவர் யார்?

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) க.சச்சிதானந்தன்
இ) **பாரதியார்** ஈ) நப்பூதனார்

7. தட்டு என்பதற்கு இணையானத் தமிழ்ச்சொல் ----------- ஆகும்.

அ) **தட்டை** ஆ) கழி இ) அடி ஈ) கழை

8. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் ---------.

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) ஜி.யூ. போப்
இ) **கால்டுவெல்** ஈ) வீரமாமுனிவர்

9. திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, --------- வரிசை, தமிழ் அல்லாத பிற மொழிகளில் இல்லை.

அ) **ஒரு பொருள் பல சொல்** ஆ) பலபொருள் ஒரு சொல்
இ) ஒன்றொழிப் பொதுச்சொல் ஈ) ஓரெழுத்து ஒருமொழி

10. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார்?

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் **ஆ) தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்**
இ) க. அப்பாத்துரையார் ஈ) தமிழழகனார்

11. மொழிஞாயிறு என்றழைக்கப்படுபவர் யார்?

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் **ஆ) தேவநேயப் பாவாணர்.**
இ) க. அப்பாத்துரையார் ஈ) தமிழழகனார்

12. மெத்த அணிகலன்களாக தமிழழகனார் குறிப்பிடும் நூல் ------------ ஆகும்.

அ) ஐஞ்சிறுகாப்பியங்கள் **ஆ) ஐம்பெருங்காப்பியங்கள்**
இ) சங்க இலக்கியம் ஈ) பக்தி இலக்கியம்

13. தமிழழகனாரின் சிறப்புப்பெயர் ----------- ஆகும்.

அ) கவிமணி　　　　ஆ) மொழிஞாயிறு

**இ) சந்தக்கவிமணி**　　　　ஈ) பாவலரேறு

14. சண்முக சுந்தரம் என்பது யாருடைய இயற்பெயர்?

அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்　　　　ஆ) தேவநேயப் பாவாணார்.

இ) க. அப்பாத்துரையார்　　　　**ஈ) தமிழழகனார்**

15. சார்பெழுத்துகள் --------------- வகைப்படும்

அ) 2　　**ஆ) 10**　　இ) 12　　ஈ) 18

16. உயிரளபெடை ------------- வகைப்படும்.

அ) 2　　**ஆ) 3**　　இ) 5　　ஈ) 5

17. சூடு – இச்சொல் ------------ தொழிற்பெயர் ஆகும்.

அ) தொழிற்பெயர்　　　　ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

இ) எதிர்மறைத் தொழிற்பெயர்　　　　**ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்**

18. இவற்றுள் முத்னிலைத் தொழிற்பெயரைத் தெரிவு செய்க.

அ) கெடுதல்　　**ஆ) கெடு**　　இ) கேடு　　ஈ) செல்லாமை

19. செய்யுளில் ஓசை குறையாதவிடத்தும் இனிமையான ஓசைக்காக வரும் அளபெடை --------------- அளபெடை ஆகும்.

அ) **இன்னிசை**　　　　ஆ) சொல்லிசை

இ) இசைநிறை　　　　ஈ) ஒற்றளபெடை

20. அளபெடை என்பதற்கு ------------ என்பது பொருள்.

அ) குறுகி ஒலித்தல்　　　　**ஆ) நீண்டு ஒலித்தல்**

இ) திரிதல்　　　　ஈ) ஓசை மாறுபடாது ஒலித்தல்

21. மொழி -------------- வகைப்படும்.

அ) 2　　**ஆ) 3**　　இ) 4　　ஈ) 5

22. ஒற்றளபெடையாக வரும் எழுத்துகளின் எண்ணிக்கை -------------.

அ) 8　　ஆ) 9　　இ) 10　　**ஈ) 11**

23. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது-----

அ) வணிக கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) **வணிக கப்பல்களும் அணிகலன்களும்**

24. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது---------

அ) இலையும் சருகும்　　　　ஆ)தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும்　　　　**ஈ) சருகும் சண்டும்**

25. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.------

அ) எந்+தமிழ்+நா　　　　ஆ) எந்த+தமிழ்+நா

**இ) எம்+தமிழ்+நா**　　　　ஈ) எந்தம்+தமிழ்+நா

26. 'கேட்டாவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடர் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே---------------

அ) பாடிய; கேட்டவர்   ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர் ; பாடிய   **ஈ) பாடல் ; கேட்டவர்**

27. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ---------.

அ) குலை வகை   **ஆ)மணி வகை**   இ) கொழுந்து வகை   ஈ) இலை வகை

28. 'வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில் ஆயுள் பெருக்கம் உண்டாம்' – இப்பாடல் அடிகளுக்கு உரியவர்

அ) இளங்கோவடிகள்   ஆ) கம்பர்

**இ) ஔவையார்**   ஈ) திருமூலர்

29. திருமூலர் இயற்றிய நூல் ------------

**அ) திருமந்திரம்**   ஆ) திருவாசகம்

இ) திருப்பாவை   ஈ) சிலப்பதிக்காரம்

30. மூச்சிப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியவர் -

அ) இளங்கோவடிகள்   ஆ) கம்பர்

இ) ஔவையார்   **ஈ) திருமூலர்**

31. கிழக்கிலிருந்து வீசும் காற்று ------------

**அ) கொண்டல்**   ஆ) வாடை   இ) தென்றல்   ஈ) கோடை

32. மேற்கிலிருந்து வீசும் காற்று ------------

அ) கொண்டல்   ஆ) வாடை   இ) தென்றல்   **ஈ) கோடை**

33. வடக்கிலிருந்து வீசும் காற்று ------------

அ) கொண்டல்   **ஆ) வாடை**   இ) தென்றல்   ஈ) கோடை

34. தெற்கிலிருந்து வீசும் காற்று ------------

அ) கொண்டல்   ஆ) வாடை   இ) **தென்றல்**   ஈ) கோடை

35. 'வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்' – இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் -

அ) புறநானூறு   ஆ) தென்றல் விடு தூது

**இ) சிலப்பதிகாரம்**   ஈ) நற்றிணை

36. 'நந்தமிழும் தண்பொருநை நன்னதியும் சேர் பொருப்பில் செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' - இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

அ) புறநானூறு   **ஆ) தென்றல் விடு தூது**

இ) சிலப்பதிகாரம்   ஈ) நற்றிணை

37. 'வளி மிகின் வலி இல்லை' என்று கூறியவர்-------

இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

அ) இளங்கோவடிகள்   ஆ) கம்பர்

இ) ஔவையார்   **ஈ) ஐயூர் முடவனார்**

38. . 'வளி மிகின் வலி இல்லை' இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

**அ) புறநானூறு**   ஆ) தென்றல் விடு தூது

இ) சிலப்பதிகாரம்   ஈ) நற்றிணை

39. ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலம் -------

அ) வடகிழக்கு பருவக்காலம் ஆ) தென்கிழக்கு பருவக்காலம்

இ) வடமேற்கு பருவக்காலம் **ஈ) தென்மேற்கு பருவக்காலம்**

40. அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலம் -------

**அ) வடகிழக்கு பருவக்காலம்** ஆ) தென்கிழக்கு பருவக்காலம்

இ) வடமேற்கு பருவக்காலம் ஈ) தென்மேற்கு பருவக்காலம்

41. ஒரு மனிதன் ஒரு மணித்துளிக்கு வெளியிடும் கார்பன் டை ஆக்சைடின் அளவு---

அ) 10 முதல் 18 வரை ஆ) 11 முதல் 16 வரை

**இ) 12 முதல் 18 வரை** ஈ) 11 முதல் 18 வரை

42. உலக காற்று நாள் --------

**அ) ஜூன் 15** ஆ) ஜூன் 12 இ) ஜூலை 15 ஈ) ஜூலை 12

43. 'நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா' யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர்

**இ) பாரதியார்** ஈ) ஐயூர் முடவனார்

44. சிந்துக்குத் தந்தை யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர்

இ) ஔவையார் **ஈ) பாரதியார்**

45. பாட்டுக்கொரு புலவன் யார்?

அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) ஔவையார் **ஈ) பாரதியார்**

46. புதிய ஆத்திசூடியை இயற்றியவர் யார்?

அ) நக்கீரர் ஆ) கம்பர் இ) ஔவையார் **ஈ) பாரதியார்**

47. முல்லைப்பாட்டை இயற்றியவர் யார்?

அ) இளங்கோவடிகள் **ஆ) நப்பூதனார்** இ) ஔவையார் ஈ) பாரதியார்

48. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் -------------

**அ) முல்லைப்பாட்டு** ஆ) மதுரைக்காஞ்சி

இ) நெடுநல்வாடை ஈ) திருமுருகாற்றுப்படை

49. முல்லைப்பாட்டு ------------- அடிகளைக் கொண்டது

**அ) 103** ஆ) 105 இ) 150 ஈ) 400

50. காலம் காட்டும் இடைநிலைகள் தொக்கி நிற்கும் பெயரெச்சம் --------------.

அ) வேற்றுமைத்தொகை **ஆ) வினைத்தொகை**

இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

51. காலங்கரந்த பெயரெச்சம் ----------

அ) வேற்றுமைத்தொகை **ஆ) வினைத்தொகை**

இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

52. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை **ஆ) மோனை, எதுகை**

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

53. செய்தி 1 – ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஐ உலகக்காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது எனக்கு பெருமையே.

செய்தி 3 – காற்றின் ஆற்றலைக் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1,2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி **ஈ) செய்தி 1,3 ஆகியன சரி**

54. ”பாடு இமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு உணர்த்தும் அறிவியல் செய்தி -------.

அ) **கடல் நீர் ஆவியாகி மேகமாதல்** ஆ) கடல் நீர் குளிர்ச்சியடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் **ஈ)** கடல் நீர் கொந்தளித்தல்

55. 'பெரிய மீசை' சிரித்தார் – வண்ணச்சொல்லுக்கான தொகையின் வகை------

அ) வேற்றுமைத்தொகை ஆ) **அன்மொழித்தொகை**

இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

56. 'தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' - இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

அ) புறநானூறு ஆ) தென்றல் விடு தூது

இ) **சிலப்பதிகாரம்** ஈ) நற்றிணை

57. 'அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்' - இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

அ) புறநானூறு ஆ) தென்றல் விடு தூது

இ) சிலப்பதிகாரம் **ஈ) நற்றிணை**

58. 'பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ' - இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

அ) புறநானூறு **ஆ) குறுந்தொகை**

இ) சிலப்பதிகாரம் ஈ) நற்றிணை

59. 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' - இப்பாடல் அடி இடம்பெற்றுள்ள நூல் ---

அ) **கொன்றை வேந்தன்** ஆ) குறுந்தொகை

இ) சிலப்பதிகாரம் ஈ) நற்றிணை

60. காசிக்காண்டம் – இந்நூலை எழுதியவர்?

அ) இளங்கோவடிகள் ஆ) நப்பூதனார்

**இ) அதிவீர ராமப்பாண்டியன்** ஈ) பாரதியார்

61. வெற்றிவேற்கை என்று அழைக்கப்படும் நூல் -------------

அ) புறநானூறு ஆ) குறுந்தொகை

**இ) நறுந்தொகை** ஈ) நற்றிணை

62. சீவலமாறன் என்று அழைக்கப்படுபவர்-------------

அ) இளங்கோவடிகள் ஆ) நப்பூதனார்

இ) **அதிவீர ராமப்பாண்டியன்** ஈ) பாரதியார்

63. மலைபடுகடாம் – இந்நூலை எழுதியவர்?

**அ) பெருங்கௌசிகனார்** ஆ) நப்பூதனார்

இ) அதிவீர ராமப்பாண்டியன் ஈ) பாரதியார்

64. மலைபடுகடாம் – இந்நூலின் வேறுபெயர்------------

அ) முல்லைப்பாட்டு ஆ) மதுரைக்காஞ்சி

இ) நெடுநல்வாடை **ஈ) கூத்தராற்றுப்படை**

65. பின் வருவனவற்றுள் முறையானத் தொடர் எது?

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**ஈ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

66. ‘சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி’ என்னும் அடியில் பாக்கம் என்பது ------

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் **ஈ) சிற்றூர்**

67. அறிஞருக்கு நூல் , அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ----------

**அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

68. காசிக்காண்டம் என்பது -----------

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

**இ) காசி நகரத்தின் பெருமையைக் குறிக்கும் நூல்**

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

69. ’ விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்’ என்கிறது புறநானூறு . இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை---------

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) **இன்மையிலும் விருந்து**

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து.

70. 'உனதருளே பார்ப்பன் அடியேனே ' - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் **ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ)நோ யாளியிடம் மருத்துவர்

71. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

தலைப்பு : செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காட்டுகிறது.

**அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.**

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்புகொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப் புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

72. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசை யும்' என் னும் தொடர் எதனை க் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் **ஈ) வானத்தையும் பேரொலியையும்**

73. குலசேகர ஆழ்வார் 'வித்துவக் கோட்டம்மா' என் று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார். இத்தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ) இட வழுவமைதி, மர பு வழுவமைதி

**இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**

ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

74. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ)சீலா இ) குலா **ஈ) இலா**

75. இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள்

அ) வாட்சன் ஆ) பெப்பர் **இ) வேர்டுஸ்மித்** ஈ) இலா

76. 'மீளாத்துயர்' இத்தொடரில் உள்ள இலக்கணக் குறிப்பை எழுதுக.

அ) எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை

இ) **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** ஈ) பண்புத்தொகை

77. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்று சொன்னவர்.....

அ) பாரதி ஆ) **மணவை முஸ்தபா** இ) கவிமணி ஈ) ம.போ.சி

78. மொழிபெயர்த்தல் என்னும் தொடரை முதன்முதலில் குறிப்பிட்டவர்?

அ) **தொல்காப்பியர்** ஆ) தண்டி இ) நன்னூலார் ஈ) மணவை முஸ்தபா

79. "சதம்" என்பதன் பொருள்.

அ) பத்து **ஆ) நூறு** இ) ஆயிரம் ஈ) பத்தாயிரம்

80. "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை" என்று யார் யாரிடம் கூறினான்?

அ) கபிலரிடம் குசேலப் பாண்டியன்

ஆ) இடைக்காடனாரிடம் குசேல பாண்டியன்

**இ) இறைவனிடம் குசேல பாண்டியன்**

ஈ) குசேல பாண்டியனிடம் இடைகாடனார்

81. "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்" – இப்பாடலில் பயின்று வரும் பொருள்கோள்.

அ. ஆற்றுநீர் பொருள்கோள் ஆ) நேர் நிரல்நிறைப் பொருள்கோள்

இ) கொண்டுகூட்டு பொருள்கோள் **ஈ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்**

82. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.

**அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது**

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

83. அருந்துணை என்பதைப் பிரித்தால் ……………..

**அ) அருமை + துணை** ஆ) அரு + துணை

இ) அருந்து + உணை ஈ) அருமை + உணை

84. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது ……. வினா.
"அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது …… விடை.

அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை

**இ) அறியா வினா, சுட்டு விடை** ஈ) கொளல் வினா, இனமொழி விடை

85. " அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி, மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் **இ) கல்வி** ஈ) இலக்கியம்

86. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் …. இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் …….

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் **ஈ) மன்னன், இறைவன்**

87. சமூகப் பண்பாட்டுத் தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவது ----------------.

அ) கரகாட்டம் **ஆ) நிகழ்கலை**

இ) ஒயிலாட்டம் ஈ)மயிலாட்டம்

88. மரபார்ந்த கலை------------.

அ) காவடியாட்டம் ஆ) தேவராட்டம்

இ) ஒயிலாட்டம் **ஈ) கரகாட்டம்**

89. " நீரற வறியாக் கரகத்து " என்ற பாடலடி இடம்பெறும் நூல்-------------.

அ) அகநானூறு **ஆ) புறநானூறு** இ) பரிபாடல் ஈ) நற்றிணை

90. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி---------------.

அ) **தேவதுந்துபி** ஆ) நையாண்டி இ) நாதசுரம் ஈ) பறை

91. பொய்க்கால் குதிரை ஆட்டம் கேரளாவில்----- என்று அழைக்கப்படுகிறது.

அ) **குதிரைக்களி** ஆ) புரவி ஆட்டம் இ) கச்சி கொடி ஈ) கும்பாட்டம்

92. "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் " என்றவர்------------.

அ) ம. பொ. சி ஆ) **ந .முத்துசாமி** இ) திரு.வி. க ஈ) உமா மகேஸ்வரி

93. 'இராச சோழன் தெரு ' -------------- உள்ளது.

அ) சிங்கப்பூரில் **ஆ) கோலாலம்பூரில்** இ) மதுரையில் ஈ) இலங்கையில்

94. 'கற்பாவை ' கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்

**அ) உமா மகேஸ்வரி** ஆ) ம.பொ.சிவஞானம்

இ) ந.முத்துசாமி ஈ) குமரகுருபரர்

95. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி---------------------

அ) ஜால்ரா **ஆ) பறை** இ) உறுமி ஈ) தவில்

96. சூழி என்பது------------------

அ) **தலையில் அணிவது** ஆ) நெற்றியில் அணிவது

இ) காலில் அணிவது ஈ) இடையில் அணிவது

97. சிற்றிலக்கிய எண்ணிக்கை

அ) 86 ஆ) 51 **இ) 96** ஈ) 91

98. செங்கீரைப் பருவம்------------------- முதல்------------- வரை

அ) 3 மாதம் 4 மாதம் வரை **ஆ) 5 மாதம் 6 மாதம் வரை**

இ) 7 மாதம் 8 மாதம் வரை ஈ) 1 மாதம் 2 மாதம் வரை

99. பிள்ளைத்தமிழ் வகை------------------

அ) 10 ஆ) 7 **இ) 2** ஈ) 3

100. "பைம்பொன்சும்பிய தொந்தி யொடுஞ் சிறு பண்டி சரிந்தாட" இவ்வடியில் பண்டி என்பதன் பொருள்-------------------

அ) தலை ஆ) கால் **இ) வயிறு** ஈ) கண்

101. கம்பராமாயணம் ------------------காண்டம் உடையது.

அ) 7 **ஆ) 6** இ) 5 ஈ) 8

102. மலர்கள் தரையில் நழுவும் எப்போது ?

அ) அள்ளி முகர்ந்தால் **ஆ) தளரப் பிணைத்தால்**

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

103. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சிப்புரிவதால்

**ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

104. -------------------உடைய மனமே மலரைத் தொடுக்கும்.

**அ) நுண்மை** ஆ) திண்மை இ) வன்மை ஈ)கடமை

105. குளிர்காலத்தைப் பொழுதாக கொண்ட நிலங்கள்

அ) முல்லை , குறிஞ்சி , மருதம் நிலங்கள்

ஆ) குறிஞ்சி , பாலை , நெய்தல் நிலங்கள்

**இ) குறிஞ்சி , மருதம் , நெய்தல் நிலங்கள்**

ஈ) மருதம் , நெய்தல் , பாலை நிலங்கள்.

106. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது ?

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது

**இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது**

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

107. கரகாட்டத்தை கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினை எது ?

அ) கரகாட்டம் என்றால் என்ன ?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை ?

**ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?**

108. கவிதையில் ---------------------ஐ கருப்பொருள் பின்னணியில் அமைத்து பாடுவது நம் மரபு.

அ) இறைச்சி **ஆ) உரிப்பொருள்** இ) உள்ளுறை ஈ) முதற்பொருள்

109. ஒரு நாளின் ஆறு கூறுகள்-------------------

**அ) சிறுபொழுது** ஆ) பெறும் பொழுது

இ) நிலமும் பொழுதும் ஈ) அ, இ மட்டும்

110. ஐப்பசி , கார்த்திகை என்பது--------------- காலம்

**அ) குளிர்காலம்** ஆ) இளவேனில் இ) முதுவேனில் ஈ) கார்காலம்

111. முல்லை நில பறை ------------

அ) மீன்கோட்பறை **ஆ)ஏறுகோட்பறை** இ) தொண்டகம் ஈ) துடி

112. மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும். மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே

**அ) திருப்பதியும் திருத்தணியும்** ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

113. சுதேசி கப்பல் நிறுவனத்தினை தொடங்கியவர்

அ) திரு.வி.க ஆ) ம.பொ.சி **இ) வ.உ.சி** ஈ) . ஈ. வெ.ரா

114. அறிவு விளக்கம் பெறுவதற்கான வழிகள் -----------------

**அ) கல்வி - கேள்வி** ஆ) துணிவு - பணிவு

இ) அறம் - மறம் ஈ) படித்தல்

115. ம . பொ . சிவஞானம் தனது உயரிய சொத்தாக கருதியது------------------

அ) பதவி ஆ) பொருள் **இ) நூல்கள்** ஈ) பட்டம்

116. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது---------------

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் **ஈ) சிலப்பதிகாரம்**

117. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கியவர்-----

அ) விநாயகம் ஆ) ரஷித்

**இ) ம.பொ.சிவஞானம்** ஈ) மங்கலக்கிழார்

118. தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியை துறந்தவர் ---------------

அ) காமராஜர் **ஆ) இராஜாஜி** இ) அண்ணா ஈ) எம்.ஜி. ஆர்

119. மொழி அடிப்படையில் முதன் முதல் பிரிந்த மாநிலம்--------------------

**அ) ஆந்திரா** ஆ) தமிழ்நாடு இ) கேரளா ஈ) குஜராத்

120. கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் இணைய பாடுபட்டவர் ----------------

அ) ந.முத்துசாமி **ஆ) மார்ஷல்.ஏ.நேசமணி**

இ) மு.கருணாநிதி ஈ) எவரும் இல்லை

121. ம.பொ.சிவஞானத்தின் தன் வரலாற்று நூல்.

**அ) எனது போராட்டம்** ஆ) என் சரிதம்

இ) எனது சரித்திரம் ஈ) என் போராட்டம்

122. சிலம்பு செல்வர் ------------------

அ) இளங்கோவடிகல் **ஆ) ம .பொ. சிவஞானம்**

இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) நச்சினார்க்கினியர்

123. பொன் ஏர் பூட்டும் திங்கள் ----------------

அ) ஆவணி ஆ) ஆடி **இ)சித்திரை** ஈ) தை

124. "கிராம ஊழியன்" என்ற இதழின் ஆசிரியர் -------------------

அ) திரு.வி.க **ஆ) கு.ப.ராஜகோபாலன்**

இ) அயோத்திதாசன் ஈ) ஈ.வெ.ரா

125. கல் இலக்கியமாய் அமைவது --------------------

**அ) மெய்க்கீர்த்தி** ஆ) கல்வெட்டு இ) செப்பேடு ஈ) நடுகல்

126. "திருபுவனச் சக்கரவர்த்தி " என்ற பட்டம் சூடியவர் -------------

அ) முதலாம் இராசராசன் **ஆ) இரண்டாம் இராசராசன்**

இ) முதலாம் ராசேந்திரன் ஈ) இரண்டாம் ராசேந்திரன்

127. மூவேந்தர் பற்றிய செய்திகளை கூறும் பெருங்காப்பியம்----------

அ) வளையாபதி ஆ) குண்டலகேசி

**இ) சிலப்பதிகாரம்** ஈ) மணிமேகலை

128. சிலப்பதிகாரம் -------------- காண்டம் கொண்டது

**அ) 3** ஆ) 6 இ) 2 ஈ) 4

129. "அடிகள் நீரே அருளுக " என்றவர் -------------

**அ) சீத்தலைச் சாத்தனார்** ஆ) இளங்கோவடிகள்

இ) திருவள்ளுவர் ஈ) சேக்கிழார்

130. ஒருதலைக் காமம் ---------------

அ) பெருங்கதை **ஆ) கைக்கிளை** இ) பெருந்திணை ஈ) எவையும் இல்லை

131. கல்வி , வீரம் , செல்வம் , புகழ் , கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது ------- திணை

அ) பொதுவியல் **ஆ) பாடாண்** இ) வெட்சி ஈ) நொச்சி

132. கோட்டையைக் காத்தல் -------------------- திணை .

**அ) நொச்சி** ஆ) வஞ்சி இ) காஞ்சி ஈ) தும்பை

133. "கவிதை வாழ்க்கையின் திறனாய்வு " என்றவர் ----------------

**அ) ஆர்னால்டு** ஆ) எல்லிஸ் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

134. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்றவர் --------

அ) நச்செல்லையார் **ஆ) ஔவையார்**

இ) காக்கை பாடினி ஈ) வெள்ளி வீதியார்

135. புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை -----

**அ) மெய்க்கீர்த்தி** ஆ) நடுகல் இ) செப்பேடு ஈ) ஓவியம்

136. காளைகளை ஒட்டிக் **கடுகிச்செல்** முன்பு --------------. இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன ?

**அ) விரைந்து செல்** ஆ) மெதுவாக செல்

இ) மறைந்து செல் ஈ) கூடிச்செல்

137. "**மண்ணுள் வினைஞரும்** மண்ணீட்டு ஆளரும் " இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன ?

அ) சிற்பி **ஆ) ஓவியர்** இ) நெய்பவர் ஈ) எண்ணெய்விற்போர்

138. ஐம்பெரும் காப்பியம் முறைவைப்பு முறையை குறிப்பிடும் நூல் --------------

**அ) திருத்தணிகையுலா** ஆ) மூவருலா இ) அந்தாதி ஈ) கலிங்கத்துப்பரணி

139. "பாய்ச்சல் " என்னும் கதையின் ஆசிரியர் ------------------

அ) சுரதா ஆ) மீரா **இ) சா.கந்தசாமி** ஈ) அ.கா.பெருமாள்

140. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு , மண் , ஏர் , மாடு ஆ) மண் , மாடு , ஏர் , உழவு

**இ) உழவு , ஏர் , மண் , மாடு** ஈ) ஏர் , உழவு , மாடு , மண்

141. "தன் நாட்டு மக்களுக்கு தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தி தொடர் உணர்த்தும் பொருள்.

அ) மேம்பட்ட நிர்வாக திறன் பெற்றவர்

ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

**ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்.**

142. இருநாட்டு அரசர்களும் தும்பை பூவைச்சூடி போரிடுவதன் காரணம் ---------- .

அ) நாட்டை கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

**இ) வலிமையை நிலைநாட்டல்** ஈ) கோட்டையை முற்றுகையிடல்

143. ஆநிரை கவர்தல் ------------------ திணை

**அ) வெட்சி** ஆ) கரந்தை இ) நொச்சி ஈ) தும்பை

144. வாகை என்பது --------------------

அ) தோல்வி ஆ) மாலை **இ) வெற்றி** ஈ) போர்

145. மண்ணாசை கருதி போர் செய்தல் ---------------------- திணை

**அ) வஞ்சி** ஆ) காஞ்சி இ) தும்பை ஈ) பாடாண்

146. மெய்க்கீர்த்தி என்ற பெயர் --------------------- காலத்தில் வந்தது

அ) சேரன் **ஆ) சோழன்** இ) பாண்டியன் ஈ) பல்லவன்

147. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) **கூவிளம் தேமா மலர்** ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா நாள் ஈ) புளிமா தேமா பிறப்பு

148. மேன்மை தரும் அறம் என்பது---------.

**அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

149. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன் சேரலாதன் **ஆ) அதியன் பெருஞ்சாத்தன்**

இ) பேகன் கிள்ளி வளவன் உ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி

150. சங்க இலக்கிய அறங்கள் இயல்பானவை. 'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று கூறியவர் யார்?

**அ) அர்னால்டு** ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) ஜி.யு. போப் ஈ) மாங்குடி மருதனார்

151. இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆய் அல்லன் என்று ஆய் அன்டிரனைப் பாராட்டியவர் யார்?

அ) ஊன்பொதி பசுங்குடையார் ஆ) மாங்குடி மருதனார்

இ) ஆவூர் மூலங்கிழார் **ஈ) ஏணிச்சேரி முடமோசியார்**

152. சங்கப்பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் யாரை முதன்மைப்படுத்தி கூறப்பட்டுள்ளன ?

**அ) அரசர்கள்** ஆ) அமைச்சர்கள் இ) புலவர்கள் ஈ) வள்ளல்கள்

153. அரசர்கள் அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியவர் யார்?

அ) ஆவூர் மூலங்கிழார் ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) மாங்குடி மருதனார் **ஈ) ஊன்பொதி பசுங்குடையார்**

154. நன்றும் தீதும் ஆய்தலும், அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்று கூறும் நூல் எது?

அ) அகநானூறு ஆ) புறநானூறு **இ) மதுரைக்காஞ்சி** ஈ) பட்டினப்பாலை

155. செம்மை சான்ற காவிதி மாக்கள் என்று அமைச்சர்களை கூறும் புலவர் யார்?

அ) ஏணிச்சேரி முடமோசியார் **ஆ) மாங்குடிமருதனார்**

இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) ஊன்பொதி பசுங்குடையார்

156. 'எரியார் எறிதல் யாவணது எறிந்தார் எதிர்சென்று எறிதலும் செல்லான்' என்று குறிப்பிடும் நூல்?

அ) அகநானூறு **ஆ) புறநானூறு** இ) மதுரைக்காஞ்சி ஈ) பட்டினப்பாலை

157. 'செல்வத்தின் பயனே ஈதல்' எனக் குறிப்பிடும் நூல் --------.

அ) அகநானூறு ஆ) பட்டினப்பாலை இ) மதுரைக்காஞ்சி **ஈ) புறநானூறு**

158. "இல்லோர் ஒக்கல் தலைவன்" "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்படுபவர் யார்?

அ) அரசர்கள் ஆ) அமைச்சர்கள் இ) புலவர்கள் **ஈ) வள்ளல்கள்**

159. வழங்குவதற்குப் பொருள் உள்ளதா என்று கூடப் பார்க்காமல் கொடுப்பவர் யார்?

**அ) பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தன்** ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) மாங்குடி மருதனார்

160. உதவி செய்தலை உதவி ஆண்மை என்று கூறியவர்

**அ) ஈழத்துப் பூதன்தேவனார்** ஆ) ஏணிச்சேரி முடமோசியார்

இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) மாங்குடி மருதனார்

161. வாய்மையை பிழையா நல் மொழி என்று குறிப்பிடும் நூல்

அ) அகநானூறு ஆ) புறநானூறு **இ) நற்றிணை** ஈ) பட்டினப்பாலை

162. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

**இ) இடையறாது அறப்பணி செய்தலை** ஈ) வண்ணம் பூசுவதை

163. கோடை வயல், மீட்சி விண்ணப்பம் கவிதைத் தொகுப்புகளின் ஆசிரியர்

அ) கண்ணதாசன் ஆ) ஜெயகாந்தன்

**இ) தி.சோ.வேணுகோபாலன்** ஈ) புதுமைப்பித்தன்

164. எழுத்து காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர்

**அ) தி.சோ.வேணுகோபாலன்** ஆ) ஜெயகாந்தன்

இ) கண்ணதாசன் ஈ) புதுமைப்பித்தன்

165. தி.சோ.வேணுகோபாலன் பிறந்த ஊர்

**அ) திருவையாறு** ஆ) சிறுகூடல்பட்டி இ) உறுவையாறு ஈ) தஞ்சாவூர்

166. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்------

**அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

167. கண்ணதாசன் இயற்பெயர்

அ) தி.சோ.வேணுகோபாலன் **ஆ) முத்தையா**

இ) எத்திராசு ஈ) ராஜநாராயணன்

168. கண்ணதாசனின் பிறந்த ஊர்

அ) திருவையாறு **ஆ) சிறுகூடல்பட்டி**

இ) உறுவையாறு ஈ) தஞ்சாவூர்

169. சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்

அ) புதுமைப்பித்தன் ஆ) ஜெயகாந்தன்

இ) தி.சோ.வேணுகோபாலன் **ஈ) கண்ணதாசன்**

170. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்

அ) புதுமைப்பித்தன் **ஆ) கண்ணதாசன்**

இ) தி.சோ.வேணுகோபாலன் ஈ) ஜெயகாந்தன்

171. 'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' என்று கூறியவர்

அ) புதுமைப்பித்தன் **ஆ) கண்ணதாசன்**

இ) தி.சோ.வேணுகோபாலன் ஈ) ஜெயகாந்தன்

172. ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது

அ) குறிஞ்சி ஆ) மூங்கில் **இ) பிரம்ம கமலம்** ஈ) சண்பகம்

173. தலைமுறைக்கு ஒரு முறை மட்டுமே மலர்வது

அ) குறிஞ்சி **ஆ) மூங்கில்** இ) பிரம்ம கமலம் ஈ) சண்பகம்

174. உழன்று பேதை வாழ்வு வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள் என்று கூறியவர்

அ) பூரணர் **ஆ) ராமானுஜர்** இ) முதலியாண்டான் ஈ) கூரேசர்

175. சௌமிய நாராயணன் யாரிடம் அடைக்கலம் படுத்தப்பட்டார்

அ) பூரணர் ஆ) கூரேசர் இ) முதலியாண்டான் **ஈ) ராமானுஜர்**

176. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்

அ) வெண்பா **ஆ) அகவற்பா** இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

177. யாப்பின் உறுப்புகள் ---------- வகைப்படும்

அ) ஐந்து **ஆ) ஆறு** இ) ஏழு ஈ) எட்டு

178. வெண்பாவிற்குரிய ஓசை

**அ) செப்பலோசை** ஆ) அகவலோசை இ)துள்ளலோசை ஈ) தூங்கலோசை

179. திருக்குறளும் நாலடியாரும் -------- பாவால் அமைந்துள்ளன

**அ) வெண்பா** ஆ)ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

180. ஆசிரியப்பாவிற்கு உரிய ஓசை

அ) செப்பலோசை **ஆ) அகவலோசை** இ)துள்ளலோசை ஈ) தூங்கலோசை

181. இலக்கணக் கட்டுக்கோப்புக் குறைவாகவும் கவிதை வெளியீட்டுக்கு எளிதாகவும் இருப்பது

அ) வெண்பா **ஆ)ஆசிரியப்பா** இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

182. செய்யுளில் இடையிடையே உயர்ந்து வருவது

அ) செப்பலோசை ஆ) அகவலோசை **இ)துள்ளலோசை** ஈ) தூங்கலோசை

183. கலிப்பாவிற்கு உரிய ஓசை

அ) செப்பலோசை ஆ) அகவலோசை **இ)துள்ளலோசை** ஈ) தூங்கலோசை

184. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை

அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ)துள்ளலோசை **ஈ) தூங்கலோசை**

185. வெண்பா -------- வகைப்படும்

அ) 3 ஆ)4 **இ) 5** ஈ) 6

186. ஆசிரியப்பா வகைப்படும்

அ) 3 **ஆ)4** இ) 5 ஈ) 6

187. 2 அடி முதல் 12 அடி வரை அமையும் பாவகை

**அ) வெண்பா** ஆ)ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

188. மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கு ஏற்ப அமையும் பாவகை

அ) வெண்பா **ஆ)ஆசிரியப்பா** இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

189. இருவர் உரையாடுவது போன்ற ஓசை

**அ) செப்பலோசை** ஆ) அகவலோசை இ)துள்ளலோசை ஈ) தூங்கலோசை

190. ஒருவர் பேசுதல் மற்றும் சொற்பொழிவாற்றுவது போன்ற ஓசை

அ) செப்பலோசை **ஆ) அகவலோசை** இ)துள்ளலோசை ஈ) தூங்கலோசை

191. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

**ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

192. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

**ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

193. ஜெயகாந்தன் உன்னைப் போல் ஒருவன் திரைப்படத்திற்காக பெற்ற விருது

**அ) குடியரசுத் தலைவர் விருது** ஆ) சாகித்ய அகாதெமி விருது

இ) ஞானபீட விருது ஈ) தாமரைத்திரு விருது.

194. ஜெயகாந்தனின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினம்

அ) சுந்தர காண்டம் ஆ) பாரீசுக்குப் போ

இ) உன்னைப் போல் ஒருவன் **ஈ) சில நேரங்களில் சில மனிதர்கள்**

195. நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச்செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் இவைகள்தாம் ஜெயகாந்தன் என்று கூறியவர்

அ) அசோகமித்திரன் **ஆ) கா. செல்லப்பன்**

இ) சி.சு.செல்லப்பா ஈ) ம.பொ.சிவஞானம்

196. "ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்" என்று கூறியவர்

அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன்

**இ) ஜெயகாந்தன்** ஈ) ம.பொ.சிவஞானம்

197. "எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் ஏழை கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும் பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் பழைய மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்" என்று ஜெயகாந்தனால் பாராட்டப் பெற்றவர்

அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன்

**இ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்** ஈ) ம.பொ.சிவஞானம்

198. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே என்று கூறியவர்

அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன்

**இ) ஜெயகாந்தன்** ஈ) ம.பொ.சிவஞானம்

199. சிறுகதை மன்னன் என அழைக்கப்படுபவர்

அ) அசோகமித்திரன் ஆ) கா. செல்லப்பன்

**இ) ஜெயகாந்தன்** ஈ) ம.பொ.சிவஞானம்

200. ஜெயகாந்தன் தர்க்கத்திற்கு அப்பால் சிறுகதை அமைந்த தொகுப்பு

அ) குருபீடம் **ஆ) யுகசந்தி** இ) ஒருபிடி சோறு ஈ) உண்மை சுடும்

201. "இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்..." - இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை **ஈ) தலையில் கல் சுமப்பது**

202. கவிஞர் நாகூர் ரூமியின் இயற்பெயர்

அ) முகமது நபி ஆ) அப்துல் ரகுமான்

**இ) முகமது ரஃபி** ஈ) சந்தா சாகிப்

203. கப்பலுக்குப் போன மச்சான் என்னும் நாவலை எழுதியவர்

அ) முகமது நபி ஆ) அப்துல் ரகுமான்

இ) சந்தா சாகிப் **ஈ) முகமது ரஃபி**

204. ----------- மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது.

அ) தொழிலாளர் ஆ) முதலாலிகள் **இ) சித்தாள்** ஈ) மற்றவர்கள்

205. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ------ ,--------- வேண்டினார்

**அ) கருணையன் எலிசபெத்துக்காக** ஆ) எலிசபெத் தமக்காக

இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக

206. கிறித்துவிற்கு முன் தோன்றியவர்

அ) யுதாசு ஆ) மத்தேயு இ) யோக்கோபு **ஈ) திருமுழுக்கு யோவான்**

207. திருமுழுக்கு யோவானுக்கு வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இட்ட பெயர்

அ) யுதாசு **ஆ) கருணையன்** இ) யோக்கோபு ஈ) திருமுழுக்கு யோவான்

208. கருணையன் தாயார் யார்?

**அ) எலிசபெத்** ஆ) மரியன்னை இ) தூய மேரி ஈ) இலியா ராணி

209. வீரமா முனிவருக்கு இஸ்மத் சன்யாசி என்னும் பட்டத்தை வழங்கியவர்

**அ) சந்தாசாகிப்** ஆ) மத்தேயு இ) யோக்கோபு ஈ) திருமுழுக்கு யோவான்

210. இஸ்மத் சன்யாசி என்னும் சொல்லின் பொருள்

அ) அருளுடையவர் ஆ) முனிவர் இ) அன்பானவர் **ஈ) தூய துறவி**

211. வீரமாமுனிவரின் இயற்பெயர்

அ)திருமுழுக்கு யோவான் **ஆ)கான்சுடான்சு ஜோசப் பெசுகி**

இ)கருணையன் ஈ) யோக்கோபு

212. தமிழின் முதல் அகராதி

அ) பேரகராதி **ஆ) சதுரகராதி**

இ) கலைக்களஞ்சிய அகராதி ஈ) அகராதி நிகண்டு

213. அசும்பு - பொருள் கூறுக

அ) மலை **ஆ) நிலம்** இ) காடு ஈ) கிளை

214. இலக்கண குறிப்புத் தருக- காய்மணி

அ) பண்புத்தொகை ஆ) உம்மைத்தொகை

**இ) வினைத்தொகை** ஈ) உவமைத்தொகை

215. ஒருவன் இருக்கிறான் கதை அமைந்த சிறுகதைத்தொகுப்பு

அ) ஒருபிடிசோறு ஆ) யுகசந்தி

இ) ஜெயகாந்தன் கதைகள் **ஈ) கு. அழகிரிசாமி சிறுகதைகள்**

216. கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர்

அ) கி.ராஜநாராயணன் ஆ) ஜெயகாந்தன்

**இ) கு அழகிரிசாமி** ஈ) புதுமைப்பித்தன்

217. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் **இ) உருவகம்** ஈ) தீவகம்

218. ------- க்கு அழகு செய்து சுவையை உண்டாக்கும் அணிகள்

அ) உரைநடை **ஆ) செய்யுள்** இ) இலக்கணம் ஈ) துணைப்பாடம்

219. இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது

அ) தன்மையணி ஆ) தீவக அணி

இ) நிரல்நிறை அணி **ஈ) தற்குறிப்பேற்றயணி**

220. தீவகம் என்னும் சொல்லின் பொருள்

**அ) விளக்கு** ஆ) நெருப்பு இ) காற்று ஈ) வெம்மை

221. ஓரிடத்தில் நின்ற சொல் செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்தி பொருள் தருவது

அ) தன்மையணி **ஆ) தீவக அணி**

இ) நிரல்நிறை அணி ஈ) தற்குறிப்பேற்றயணி

222. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள் கொள்வது

அ) தன்மையணி ஆ) தீவக அணி

**இ) நிரல்நிறை அணி** ஈ) தற்குறிப்பேற்றயணி

223. எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத்தன்மை அமையப் பாடுவது

**அ) தன்மையணி** ஆ) தீவக அணி

இ) நிரல்நிறை அணி ஈ) தற்குறிப்பேற்றயணி

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க . (வினாக்கள் 12-15)**

**1.** "செந்தமிழே ! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை

எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?

முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்

விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும் "

**1.** இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ)**கனிச்சாறு** ஆ)கொய்யாக்கனி

இ)சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

**2.** இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ)கம்பர் ஆ)இளங்கோவடிகள்

இ)கண்ணதாசன் **ஈ) பெருஞ்சித்திரனார்.**

3. செந்தமிழே – இலக்கணக்குறிப்புத் தருக.

அ)எண்ணும்மை ஆ)வினைமுற்று

இ)பெயரெச்சம் **ஈ) பண்புத்தொகை**

4. எந்தமிழ்நா – பிரித்து எழுதுக.

அ)எந்+தமிழ்+நா ஆ) எந்தமிழ்+நா

**இ) எம்+தமிழ்+நா** ஈ) எம்+ தமிழ்நா

2. தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

அ)**கனிச்சாறு** ஆ)கொய்யாக்கனி

இ)சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

2. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ)கம்பர் ஆ)இளங்கோவடிகள்

இ)கண்ணதாசன் **ஈ) பெருஞ்சித்திரனார்.**

3. இன்னறும் – இலக்கணக்குறிப்புத் தருக.

அ)எண்ணும்மை ஆ)வினைமுற்று

இ)பெயரெச்சம் **ஈ) பண்புத்தொகை**

4. எண்தொகையே – பிரித்து எழுதுக.

அ)எண் + தொகையே ஆ)எண்தொகை + யே

இ)என் + தொகையே **ஈ) எட்டு + தொகையே**

3. விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருகஎன உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

அ)**காசிக்காண்டம்** ஆ)கொய்யாக்கனி

இ)சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்

2. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ)கம்பர் ஆ)இளங்கோவடிகள்

இ)கண்ணதாசன் **ஈ) அதிவீரராம பாண்டியர்**

3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைகளை எழுதுக.

**அ) விருந்தினனாக – திருந்துற** ஆ) விருந்தினனாக – வியத்தல்

இ) பொருந்து – அருகுற ஈ)பரிந்துநன் - முகமன்

4. உரைத்தல் – இலக்கணக்குறிப்புத் தருக.

அ)எண்ணும்மை ஆ)வினைமுற்று இ)பெயரெச்சம் ஈ)**தொழிற்பெயர்**

4. உறங்குகின்ற கும்பகன்ன ! உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்குகின்றது ! இன்று காண்; எழுந்திராய் ! எழுந்திராய் !
கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,
உறங்குவாய் , உறங்குவாய் ! இனிக் கிடந்து உறங்குவாய் !

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) **கம்பர்** ஆ)இளங்கோவடிகள்

இ) கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

2. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ?

அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி

இ) சிலப்பதிகாரம் **ஈ) கம்பராமாயணம்**

3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள சீர் மோனை சொற்களை குறிப்பிடுக.

அ) **உறங்குகின்ற - உங்கள்** ஆ) உறங்குகின்ற - இறங்குகின்றது

இ) உறங்குகின்ற - உறங்குவாய் ஈ) உறங்குவாய் - கிடந்து

4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகை சொற்களை எழுதுக .

அ) உறங்குகின்ற - உங்கள் ஆ) உறங்குகின்ற - கும்பக்கன்ன

இ) **உறங்குகின்ற - உறங்குவாய்** ஈ) உறங்குவாய் - கிடந்து

5. **' மாய'** என்பதன் பொருள் தருக .

அ) திறமையான ஆ) **பொய்யான**

இ) உண்மையான ஈ) நிறைவான

5. வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) **கம்பர்** ஆ)இளங்கோவடிகள்

இ)கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

2. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ?

அ)காசிக்காண்டம் ஆ)கொய்யாக்கனி

இ)சிலப்பதிகாரம் **ஈ) கம்பராமாயணம்**

3. " வண்மை " என்பதன் பொருள் தருக.

அ) **கொடை** ஆ)வலிமை இ) வாய்ப்பு ஈ) திறமை

4. " திண்மை " என்பதன் பொருள் தருக. **வலிமை**

அ) கொடை ஆ)**வலிமை**

இ) வாய்ப்பு ஈ) திறமை

6. " வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்

பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும் " .

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

   அ) கம்பர் ஆ)**இளங்கோவடிகள்**

   இ) கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

2. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் ?

   அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி

   **இ) சிலப்பதிகாரம்** ஈ) கம்பராமாயணம்

3. வண்ணமும் சுண்ணமும் - இலக்கணம் தருக

   அ) **எண்ணும்மை** ஆ) வினைமுற்று

   இ) பெயரெச்சம் ஈ) தொழிற்பெயர்

4. விரை என்பதன் பொருள்-

   அ) மனம் ஆ) **மணம்** இ) உள்ளம் ஈ) மேகம்

7. " முதல்மழை விழுந்ததும் மேல்மண் பதமாகிவிட்டது
வெள்ளி முளைத்திடுது , விரைந்து போ நண்பா !
காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!
பொன் ஏர் தொழுது , புலன் வழிபட்டு
மாட்டைப் பூட்டி காட்டைக் கீறுவோம் " .

1. இப்பாடலின் ஆசிரியர் யார் ?

   அ) கம்பர் ஆ) **கு.ப.ராஜகோபாலன்**

   இ) கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

2. இப்பாடல் இடம்பெறும் நூல் ?

   அ) காசிக்காண்டம் ஆ)கொய்யாக்கனி

   **இ) ஏர் புதிதா?** ஈ) கம்பராமாயணம்

3. விளிச்சொல்லை எழுதுக.

   அ) விழுந்ததும் ஆ) தொழுது **இ) நண்பா** ஈ) கடுகிச்செல்

4. "கடுகி " பொருள் காண்க

   அ) மனம் ஆ) **விரைந்து** இ) உள்ளம் ஈ) மேகம்

8. மாற்றம் எனது மானிடத் தத்துவம் ;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை !
தலைவர் மாறுவர் ; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம் !

1. இப்பாடலின் ஆசிரியர்

   அ)பாரதிதாசன் ஆ) **கண்ணதாசன்** இ)வாணிதாசன் ஈ) முடியரசன்

2. இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ)கோடை வயல் ஆ) **கண்ணதாசன் கவிதைகள்**

இ)தேம்பாவணி ஈ) மீட்சி விண்ணப்பம்

3. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக

அ) மாற்றம் – தத்துவம் ஆ) மாறும் - மகத்துவம்

இ) தீமை – நன்மை ஈ) **மாற்றம் – மாறும்**

4. பொருள் தருக – மகத்துவம்

அ) நன்மை ஆ) **பெருமை** இ) ஏற்றம் ஈ) மாற்றம்

9. நவமணி வடக்க யில்போல்
நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
துணர்அணிச் சுனைகள் தோறும்
உவமணி கானம்கொல் என்று
ஒலித்து அழுவ போன்றே

1. இப்பாடலின் ஆசிரியர்

அ)பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) **வீரமாமுனிவர்** ஈ) முடியரசன்

2. இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ)கோடை வயல் ஆ) கண்ணதாசன் கவிதைகள்

இ)**தேம்பாவணி** ஈ) மீட்சி விண்ணப்பம்

3. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக

அ)**நவமணி – தவமணி** ஆ)நவமணி - நல்லறப்

இ)உவமணி - சுனைகள் ஈ)படலை –மார்பன்

4. பொருள் தருக : படலை

அ) துன்பம் ஆ) **மாலை** இ) மலர்கள் ஈ) வண்டு

10. "பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

1. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?

அ)கோடை வயல் ஆ) கண்ணதாசன் கவிதைகள்

இ)**சிலப்பதிகாரம்** ஈ) மீட்சி விண்ணப்பம்

2. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

அ)**பட்டினும் – பருத்தி** ஆ)பட்டினும் - கட்டு

இ)பகர்வனர் – திரிதரு ஈ) பருத்தி - காருகர்

3. இப்பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.

அ)பட்டினும் – பருத்தி ஆ)**பட்டினும் - கட்டு**

இ)பகர்வனர் – திரிதரு ஈ) பருத்தி – காருகர்

4. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

அ)பட்டு - மயிர் ஆ)தூசு - துகிர்

இ)முத்து - பவளம் ஈ) **ஆரம் - அகில்**

**பகுதி II - பிரிவு 1 (செய்யுள், உரைநடை)**

**குறுகிய விடையளிக்க (இரு மதிப்பெண் வினாக்கள் 16-21) திருக்குறள்**

1. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்ப தறிவு.
2. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
   நல்லார் தொடர்கை விடல்.
3. பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
   கண்ணோட்டம் இல்லாத கண்.
4. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
   பெருமை முயற்சி தரும்.
5. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
   இன்மை புகுத்தி விடும்.
6. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
   பொருளல்ல தில்லை பொருள்.
7. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
   றுண்டாகச் செய்வான் வினை.
8. குற்றம் இலானாய்க் குடிசெய்து வாழ்வானைச்
   சுற்றமாச் சுற்றும் உலகு.
9. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
   தியற்கை அறிந்து செயல்.
10. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
    இன்மையே இன்னா தது.

**விடைகேற்ற வினாக்கள் அமைக்க**

1. பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்**றே** கரகாட்டம்.
   பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று எது ?
2. நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தபட்டு வரும் கலையே தெருக்கூத்து.
   நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தபட்டு வரும் கலை எது ?
3. கரகாட்டத்தின் துணை ஆட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது
   கரகாட்டத்தின் துணை ஆட்டம் எது ?
4. பிள்ளை தமிழ் **இரண்டு** வகைப்படும்.
   பிள்ளை தமிழ் **எத்தனை** வகைப்படும்?
5. கம்பராமாயணப்பாடல்கள் **சந்தநயம்** மிக்கவை.
   கம்பராமாயணப்பாடல்கள் **எந்தநயம்** மிக்கவை?
6. 1948 ஆகஸ்டு எட்டாம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க புனித **நாளாகும்**.
   இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்க தக்க புனிதநாள் எது?
7. இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காக போராடியவர் மார்ஷல் ஏ நேசமணி ஆவார்.
   இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காக போராடியவர் **யார்** ?
8. இராஜாஜி அவர்கள் தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியை துறந்தார்.
   **யார்** தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியை துறந்தார்? (அல்லது)

தலைநகர் காக்க தன் முதலமைச்சர் பதவியை துறந்தவர் **யார்** ?

9. <u>**உழுவோர்**</u> உலகத்தார்க்கு அச்சாணி எனப் போற்றபட்டனர்.
   **யார்** உலகத்தார்க்கு அச்சாணி எனப் போற்றபட்டனர்?
10. <u>மெய்க்கீர்த்தி</u> கல் இலக்கியமாய் அமைந்தது.
    **எவை** கல் இலக்கியமாய் அமைந்தது?
11. <u>முதலாம் இராசராசன்</u> காலம் தொட்டு மெய்க்கீர்த்திகன் கல்லில் வடிக்கப்பட்டன.
    **யாருடைய** காலம் தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன?
12. இளங்கோவடிகள் <u>**சேர**</u> மரபைச்சார்ந்தவர்.
    இளங்கோவடிகள் <u>எந்த</u> மரபைச் சார்ந்தவர்?

**செய்யுள் மற்றும் உரைநடை குறுவினாக்கள்**

1. **மண்ணும் சிலம்பே! மணிமேகலை வடிவே! முன்னும் நினைவால் முடித்தாழ வாழ்த்துவமே! இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

   சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

2. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**
   - அக்காலத்தில் நம் முன்னோர், உடலுக்குத் தேவையான ஆற்றலை பழங்களை உண்பதன் மூலம் பெற்றனர்.
   - ஆனால் இக்காலத்திலோ பழங்கள் (பழம்+கள்) உண்பதன் மூலம் பெறுகின்றனர்.

3. <u>**நச்சப் படாதாவன்**</u> **செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

   விரும்பப்படாதவன் (பிறருக்கு உதவி செய்யாததால் யாராலும் விரும்பப்படாதவன்)

4. **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.**
   - விருந்தினராக வந்தவரை வியந்துரைத்தல்
   - நல்சொற்களைப் பேசுதல்;
   - முகமலர்ச்சியுடன் பேசுதல்;
   - எழுந்து நிற்றல்,
   - அவருடன் தொடர்புடைய செய்திகளைக் கூறி மகிழச் செய்தல்,

5. **’இறடிப் பொம்மல் பெறுகுவிர்’ இத்தொடர் உணர்த்தும் பொருள் எழுதுக.**
   சிற்றூருக்கு ச் சென்றால் அங்கு வெந்த மாமிசத்தின் பொரியலையும், தினைச் சோற்றையும் உணவாக பெறுவீர்கள்.

6. **முல்லை நிலத்தில் இருந்தும் மருத நிலத்தில் இருந்தும் கிடைக்கும் உணவு பொருள்கள் யாவை?**
   - முல்லை நிலத்துக்குரிய உணவுப் பொருள்கள் - வரகரிசி சோறும், சாமையும், (சிறுதானியம்) காட்டில் கிடைக்கும் உணவுப் பொருட்களான பழங்கள் மற்றும் பால் தொடர்பான உணவுப் பொருள்கள்.
   - மருதநிலத்து உணவுப் பொருள்கள் - செந்நெல் சோறும், வெண்ணெல் சோறும், நிலத்தில் பயிரிடும் காய்கறிகள், கீரைகள், பழங்கள் முதலியனவும்.

7. **தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு குத்தி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கிய செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**

- விருந்தோம்பலுக்கு செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்று கிடையாது. மனம்தான் இன்றியமையாதது. ஏனெனில், தமிழர்களின் வாழ்வில் விருந்தோம்பல் ஒரு அங்கமாக உள்ளது. இன்று பள்ளியில் ஒரு மாணவனுக்கு உணவு இல்லாத பட்சத்தில் பிற மாணவர்கள் தாங்கள் கொண்டு வந்த உணவினைப் பகிர்ந்து உண்கின்றனர்.
- பள்ளியில் தொடங்கும் இந்த பண்பு கல்லூரிகளிலும் அலுவலகங்களிலும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. மேலும் , செல்வம் உள்ள பலரும் தாங்கள் செல்வத்தைச் சேகரிப்பதில் தான் குறிக்கோளாக உள்ளனர். எவரும் பிறருக்குக் கொடுப்பதில்லை. அவ்வாறு இருக்கையில் செல்வம் என்று விருந்தோம்பலை தீர்மானிக்கும் என்பது மூடத்தனம். விருந்தோம்பலுக்கு மனம் மட்டுமே தேவை. கொடுக்கவேண்டும் என்ற உள்ளம் யாரிடத்தில் உள்ளதோ அவர்கள் மட்டுமே விருந்தோம்பல் பணிகளை மேற்கொள்ள முடியும்.

**8. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

- உயிரைவிட சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் – உயிரினும் ஓம்பப் படும்
- ஊரின் நடுவில் நச்சுமரம் காய்த்தது போன்றது – நடு ஊருள் நச்சுமரம் காய்த்தற்று
- ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் - ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

**9. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் தானியங்கிக் கதவுகள்.
- செயற்கை நுண்ணறிவால் இயங்கும் திறன்பேசிகள்.

**10. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

- இத்தொடர், கோடை விடுமுறையில் 'செல்வேன்' என அமைதல் வேண்டும்.
- அவ்வாறு அமையாததால் கால வழுவாயிற்று. எனினும் உறுதிப் பொருள் கருதி கால வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

- மருத்துவர், தன்னைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது தம்மீது கொண்ட அன்பின் காரணமாகவே என நோயாளிக் கருதுகிறார்.
- அந்த அன்பும் மருத்துவத்தின் மீதான நம்பிக்கையும் அவர் நோயைக் குணமாக்குகிறது.

**12. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்தும்
- உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல்களாகப் பரிபாடல் குறிப்பிடுகிறது,

**13. 'வேர்டுஸ்மித்' என்றால் என்ன?**

- இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருளுக்கு 'வேர்டுஸ்மித்' என்று பெயர்
- இது தகவல்களைக் கொடுத்ததுமே அழகானக் கட்டுரையைச் சில நொடிகளிலேயே உருவாக்கிவிடும்.

**14. செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?**

- செயற்கை நுண்ணறிவு என்பது,
- ஒரு மென்பொருளையோ அல்லது கணினி செயல்திட்ட வரைவையோ குறிக்கும்.

**15. செயற்கை நுண்ணறிவுத் திறனுக்குச் சில சான்றுகள் தருக.**

- வணிக வளாகங்களில் நாம் சென்றவுடன் கதவு தானே திறத்தல்.
- அறையில் மூலையில் பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் திரும்புதல்.

**16. 'மெய்நிகர் உதவியாளர்' என்பது எது?**

- 'மெய்நிகர் உதவியாளர்' என்பது, திறன்பேசிகளில் இயங்கும் ஒரு உதவு மென்பொருள்.
- இது கண்ணுக்குப் புலப்படாமல், மனிதனைப் போல நம்முடன் உரையாடி சில உதவிகள் செய்கிறது.

**17. இலா(ELA) மென்பொருள் பற்றி எழுதுக.**

- இலா(ELA) என்பது ஒருவகை மென்பொருள்.
- இது ஒரு விநாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் உரையாடும்.
- வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குச் சேவைகளை இணையம் மூலம் அளிக்கிறது.

**18. 'பெப்பர்' என்னும் ரோபோ குறித்து எழுதுக.**

- ஜப்பான் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.
- வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்றுவகை ரோபோக்கள் கிடைக்கின்றன.

**19. குலசேகர ஆழ்வார் அன்னையாக உருவகித்துப் பாடுவது யாரை?**

- குலசேகர ஆழ்வார் அன்னையாக உருவகித்துப் பாடுவது
- வித்துவக்கோட்டு இறைவனான உய்யவந்த பெருமாளை.

**20. இடைக்காடனார் இறைவனிடம் சினந்து கூறியது யாது?**

- இடைக்காடனார் இறைவனிடம், பாண்டியன் என்னை இகழவில்லை.
- சொல்லின் வடிவாக உன் இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான் என்று சினத்துடன் கூறினார்.

**21. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்" – இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?**

- கழிந்த பெரும் கேள்வியினான் : **குசேலப் பாண்டியன்**
- காதல்மிகு கேண்மையினான் : **இடைக்காடனார்**

22. **செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழுக்கத் தொடர்களாக்குக.**

- கற்போம் கற்போம் கல்வியைக் கற்போம்
- அருளினைப் பெருக்கக் கல்வி கற்போம்
- அறிவினைத் திருத்தக் கல்வி கற்போம்
- மயக்கம் அகற்றக் கல்வி கற்போம்

**23. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.**

- விரும்பும் மொழி : **தெலுங்கு**
- காரணம் : **தமிழுக்கு அடுத்து அதிக மக்கள் பேசும் மொழி.**
  **தமிழொடு தொடர்புடைய மொழி.**

**24. "கரப்பிடும்பை இல்லார்" – இத்தொடரிலன் பொருள் கூறுக**

- தன்னிடம் உள்ள பொருளை பிறர்க்கு கொடுக்கும் நல்லாரை காணின் வறுமை விலகும்

**25. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எண்ணி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?**

- எள்ளி நகையாடாமல் கொடுக்க வேண்டும்.
- அப்போது , இரப்பவர் உள்ளம் மகிழும்.

**26. கூரான ஆயுதம் எது என்று செந்நாப் போதகர் கூருகிறார்? ஏன் என்பதை விளக்குக?**

- உழைப்பால் கிடைத்த ஊதியம்.
- அதுவே, எப்பொழுதும் நிலையானது.

**27. உறங்குகின்ற கும்பகர்ண எழுந்திராய் ! எழுந்திராய் !**
**காலதூதர் கையிலே உறங்குவாய் ! உறங்குவாய் !**
**கும்பகர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்க சொல்லுகிறார்கள் ?**

- உம்முடைய பொய்யான வாழ்வு இன்று முதல் இறங்க தொடங்கிவிட்டது .
- கால தூதர் கையில் உறங்க சொல்லுகிறார்கள்.

**28. நேற்று நான் பார்த்த அர்ச்சுணன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனைகளையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிந்தேன் என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயர் கூற்றாக எழுதுக?**

- **முன்தினம்** தான்பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

**29. பாசவர் , வாசவர் , பல்நிண விலைஞர் , உமணர்-- சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ?**

| | |
|---|---|
| பாசவர் | - வெற்றிலை விற்பவர் |
| வாசவர் | - நறுமணம் விற்பவர் |
| பல்நிண விலைஞர் | - பல வகை இறைச்சி விற்பவர் |
| உமணர் | - உப்பு விற்பவர் |

**30. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது ?**

- மன்னர்களின் வரலாற்று நிகழ்வுகளை அறியவும் ,
- அவை,அழியாமல் இருப்பதற்கு கல்லிலும் செதுக்கினர்.

**31. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்கு சான்று தருக.**

- வறுமை வாட்டியது.

- அறிவுப் பசி தூண்டியது
- வயிற்றுப் பசியோடு பழைய புத்தகம் வாங்கி படித்தார்.

**32. " உரைப்பாட்டு மடை " - குறிப்பு எழுதுக**

உரைநடையில் அமைந்திருக்கும் பாட்டு .

**33. ஏழு சுரங்கள் யாவை ?**

ஸ, ரி, க, ம, ப, த, நி.

**34. ஏழு இசைகள் யாவை ?**

குரல், தாரம் , உழை , துத்தம் , இளி , கைக்கிளை , விளரி

**35. சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.**

- மலர்தான் இங்கு உலகம் .
- உலகத்தை மலரின் தண்டுகள் தாங்குவதே உள்ளழகு.

**36. பொருள் தருக :**

| | |
|---|---|
| தால் | - தாலாட்டு |
| உழுவை | - புலி |
| அகவுதல் | - ஒலித்தல் |
| ஏந்தெழில் | - மிகுந்த அழகு |
| அணிமை | - அண்மை |

**37. குறிப்பு வரைக. – 'அவையம்'**

- அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.
- 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.
- உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**38. அறநெறிக் காலம் எது?**

- சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக் காலம் என்பர்.

**39. அறத்தின் குறியீடுகளாக போற்றப்பட்டன எவை?**

- செங்கோல்
- வெண்கொற்றக்குடை

**40. அரசனின் கடமைகளாக சங்க இலக்கியங்கள் கூறுவன யாவை ?**

- நீர்நிலை பெருக்குதல்
- நிலவளம் காணுதல்
- உணவு உற்பத்தியை பெருக்குதல்
- உணவினை அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்தல்

**41. தமிழரின் போர் அறம் குறித்து எழுதுக.**

- தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சீறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.
- தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்று புறநானூற்றில் ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

**42. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?**

- ❖ காலக் கழுதை கட்டெறும்பானது என்பது காலம் மாறி வயது முதிர்தலைக் குறிக்கிறது. வயது முதிர்ந்தாலும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார் ஆசிரியர் .
- ❖ வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை கொண்டு சாளரத்தின் கதவுகளை சுத்தம் செய்வது போல காலக்கழுதை கட்டெறும்பான பின்பும் அறப்பணி ஓயாது தொடர்கிறது.

**43. வாளித் தண்ணீர்,** சாயக் **குவளை, கந்தைத் துணி,** கட்டைத் **தூரிகை**

**இச்சொற்களை தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.**

- ❖ வீட்டின் சுவர் சன்னல் போன்றவற்றில் அழுக்கு மற்றும் கரையான் படிவதைத் தடுக்க வாளித் தண்ணீர் கொண்டு சுவரையும் ஜன்னலையும் நன்கு கழுவ வேண்டும். பிறகு கந்தை துணியால் நன்கு துடைத்து விட வேண்டும் .
- ❖ மூன்றாவதாக குவளையில் உள்ள சாயத்தை கட்டை தூரிகை கொண்டு சாயம் பூசி புதுப்பிக்க வேண்டும் .

**44. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை ?**

- ❖ குடியரசுத் தலைவர் விருது
- ❖ சாகித்ய அகாதெமி விருது
- ❖ சோவியத் நாட்டு விருது
- ❖ ஞானபீட விருது , தாமரைத்திரு விருது

**45. ஜெயகாந்தனின் சிறுகதை தொகுப்பு சிலவற்றை எழுதுக.**

- ❖ குருபீடம் , யுகசந்தி , ஒரு பிடி சோறு , உண்மை சுடும்

**46. ஜெயகாந்தனின் புதினங்கள் நான்கினை எழுதுக .**

- ❖ பாரிசுக்கு போ , சுந்தரகாண்டம் , உன்னைப்போல் ஒருவன் , கங்கை எங்கே போகிறாள்.

**47. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?**

- ❖ பணம், பட்டம், பதவி, பொருள் ஆகியவற்றால் மற்றவர்களை மதிக்காமல் வாழ்பவர்களைத் தலைக்கனம் பிடித்தவர்கள் என்கிறார்.
- ❖ எப்போதும் பசி, பட்டினி, வறுமை என்றிருக்கும் சித்தாள் தன் தலையில் சுமையைத் தூக்கிச் செல்வதால் மட்டுமே வாழ்க்கை நடைபெறும் என்று சித்தாளின் வாழ்வைப் பற்றி கூறுகிறார்.

**48. நாகூர் ரூமியின் கவிதைத் தொகுப்புகளை எழுதுக?**

- ❖ நதியின் கால்கள் , ஏழாவது சுவை , சொல்லாத சொல் , "சித்தாளின் மனச்சுமைகள்.

## பிரிவு 2 (வினா எண் 22-28)

## (இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சி குறுவினாக்கள்)

**1. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?**

- ❖ பாரதியார் கவிஞர் - எழுவாய், பெயர்ச்சொல் பயனிலை
- ❖ நூலகம் சென்றார் - எழுவாய், வினைமுற்று பயனிலை
- ❖ அவர் யார் - எழுவாய், வினா பயனிலை

**2. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கியக்**

**கோடிஉண் டாயினும் இல் – இக்குறளில் வரும் அளபெடையை எடுத்து எழுதுக.**

- கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் – இன்னிசை அளபெடை

3. **'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்கு தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடர் ஆகும்?**
   - சிரித்து சிரித்துப் பேசினார்.
4. **வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்துக.**
   - வேம் + கை = வேவுகின்ற கை – இது தொடர் மொழி. (ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வருவது) (அல்லது) வேங்கை பாய்ந்தது.
   - வேங்கை என்பது தனித்து நின்று மரத்தையும்,
   - வேங்கை என்னும் அதே சொல், வேம் + கை என்று பிரிந்து நின்று வேவுகின்ற கை என்ற பொருளையும் தருகிறது. எனவே, அது பொதுமொழி.
   - (அதாவது, ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அதே சொல் பிரிவு பட்டு நின்று வேறொரு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவாக வருவது பொது மொழி ஆகும்.)
5. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
   **ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
   **ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. - மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரில் உள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**
   - ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன என்பது சரி.
   - ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன என்பதும் சரி. ஆனால்,
   - ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன என்பது தவறு. ஏனெனில், தாறில்தான் சீப்பு இருக்கும். மாறாக சீப்பில் தாறு இருக்காது.
6. **'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்' - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.**
   - உடுப்பதூஉம் உண்பதூஉம் என்னும் சொற்கள் இன்னிசை அளபெடை சொற்கள் ஆகும்.
7. **"சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.**
   - சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்கும்.
   - புதியவர்களைப் பார்த்துக் குரைக்குமே தவிர கடிக்காது.
8. **வழுவமைதி என்றால் என்ன?**
   - இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.
   - இவ்வழுவை ஏதேனும் ஒரு காரணம் கருதி ஏற்றுக் கொள்வது வழுவமைதி.
9. **வழுவமைதி எத்தனை வகைப்படும் அவை யாவை?**
   - வழுவமைதி ஐந்து வகைப்படும்.
   - அவை, திணை, பால், இடம், காலம், மரபு என்பனவாகும்.

10. **வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

❖ வினா ஆறு வகைப்படும்.

❖ அவை, அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்பனவாகும்.

11. **விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

❖ விடை எட்டு வகைப்படும்.

❖ அவை, சுட்டு, மறை, நேர், ஏவல், வினா எதிர் வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பனவாகும்.

12. **பொருள்கோள் என்றால் என்ன?**

❖ பொருள்கோள் என்பது,

❖ செய்யுளில் உள்ள தொடர்களைப் பொருளுக்கு ஏற்றவகையில் இணைத்தோ, மாற்றியோ பொருள் கொள்வதாகும்.

13. **பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

❖ பொருள்கோள் எட்டு வகைப்படும்.

❖ அவை, ஆற்றுநீர், மொழிமாற்று, நிரல்நிறை, பூட்டுவில், தாப்பிசை, அளைமறிபாப்பு, அடிமறிமாற்று, கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பனவாகும்.

14. **இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ.. இருக்கிறதே சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?**

**மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.**

❖ எந்தப் பக்கம் இருக்கிறது? : **அறியா வினா**

❖ அந்த வழி : **சுட்டு விடை**

❖ மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? : **ஐய வினா**

15. **“தஞ்சம் எளியர் பகைக்கு” – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக**

| **சீர்** | **அசை** | **வாய்பாடு** |
|---|---|---|
| தஞ்/சம் | நேர்+நேர் | தேமா |
| எளி/யர் | நிரை+நேர் | புளிமா |
| பகைக்/கு | நிறைபு | பிறப்பு |

16. **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளை திருத்தி எழுதுக?**

(அ) உழவர்கள் <u>மலையில்</u> உழுதனர்

**விடை** : உழவர்கள் **வயலில்** உழுதனர்

(ஆ) முல்லை பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்கு சென்றனர்

**விடை** : **தாழை , நெய்தல்** பூவைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்கு சென்றனர்

17. **காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழை கால மாலையில் சூடாக உண்ண சுவை மிகுந்து இருக்கும் – இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் , கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக**

**முதற்பொருள்**

நிலம் - முல்லை (காடு)

பொழுது - பெரும்பொழுது – மழைகாலம்,கார்காலம்

சிறுபொழுது – மாலை

**கருப்பொருள்**

உணவு – வரகு

**18. அன்பின் ஐந்திணைகளை எழுதுக ?**

குறிஞ்சி , முல்லை மருதம் , நெய்தல் , பாலை.

**19. முதற்பொருள் என்பன யாவை?**

நிலம் மற்றும் பொழுது.

**20. கருப்பொருள் என்றால் என்ன ?**

ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள் , விலங்கு , பூ , நீர் போன்றவை .

21. **ஐவகைத்திணைகளின் சிறு பொழுதுகளை எழுதுக?**

| **திணை** | | **சிறுபொழுது** |
|---|---|---|
| குறிஞ்சி , | - | யாமம் |
| முல்லை | - | மாலை |
| மருதம் | - | வைகறை |
| நெய்தல் | - | எற்பாடு |
| பாலை | - | நண்பகல் |

**22. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.** (தனிச்சொற்றொடராக மாற்றுக)

ஓடிக்கொண்டிருக்கும் மின்விசிறி சட்டென நின்றது,. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

**23. 'கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க .**

**உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது' அ) அடி எதுகை எடுத்து எழுதுக ஆ)இலக்கண குறிப்பு எழுதுக**

அ) அடி எதுகை - கொ<u>ள்</u>வோர் , உ<u>ள்</u>வாய்

ஆ) இலக்கண குறிப்பு - கொள்க, குறைக்க - வியங்கோள் வினைமுற்றுகள்

**24. யாப்பின் உறுப்புகள் யாவை?**

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறு வகைப்படும்.

**25. நால்வகைப் பாக்கள் யாவை ?**

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என பாக்கள் நான்கு வகைப்படும்.

**26. வெண்பாவின் வகைகள் யாவை?**

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்று ஐந்து வகைப்படும்.

**27. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை ?**

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்று நான்கு வகைப்படும்.

**28. வினைமுற்றுறை வினையாலணையும் பெயராக மாற்றிக் தொடர்களை இணைத்து எழுதுக**

- கலையரங்கத்தில் எனக்காக காத்து இருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

  கலையரங்கத்தில் எனக்காகக் **காத்திருந்தவரை** அழைத்து வாருங்கள்.
- ஊட்ட மிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
  ஊட்ட மிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
- நேற்று என்னை சந்தித்தார். அவர் என் நண்பர்.
  நேற்று என்னை சந்தித்தவர் என் நண்பர்.
- பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

  பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார்.

**29. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.**

**இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| | |
|---|---|
| அறிந்தது | - அறிதல் |
| அறியாதது | - அறியாமை |
| புரிந்தது | - புரிதல் |
| புரியாதது | - புரியாமை |
| தெரிந்தது | - தெரிதல் |
| தெரியாதது | - தெரியாமை |
| பிறந்தது | - பிறத்தல் |
| பிறவாதது | - பிறவாமை. |

30. **புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| வெட்சி | - கரந்தை |
| வஞ்சி | - காஞ்சி |
| நொச்சி | - உழிஞை |
| தும்பை | - வாகை |

**31. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.**

- புறத்திணை - வஞ்சித்திணை , (மண்ணாசைக் கருதி, போர் செய்தல்)
- அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டை கைப்பற்ற வஞ்சிப்பூ சூடிப் போருக்குச் செல்லுதல்.
  "வாடா வஞ்சி............................

32. **மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை?**

நொச்சி, உழிஞை

33. **புறத்திணைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

- பன்னிரண்டு வகைப்படும்.

❖ வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் , பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை.

**34. தீவக அணியின் வகைகள் யாவை ?**

❖ தீவக அணி மூன்று வகைப்படும்.
❖ அவையாவன: முதல் நிலைத் தீவகம் , இடைநிலைத் தீவகம் , கடை நிலைத் தீவகம்.

**35. தன்மை அணியின் வகைகளை எழுதுக.**

❖ தன்மையணி நான்கு வகைப்படும்.
❖ பொருள் தன்மை அணி
❖ குணத் தன்மையணி
❖ சாதித் தன்மை அணி
❖ தொழிற் தன்மையணி

**36. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது ?**

❖ இப்பாடலில் நிரல் நிறை அணி பயின்று வந்துள்ளது .
❖ சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**37. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.**

❖ குறள் வெண்பா வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டு அடிகளால் வரும் முதல் அடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் வரும்.
❖ எடுத்துக்காட்டு: அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

**38. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக**

வஞ்சிப்பாவிற்கு தூங்கல் ஓசையும் கலிப்பாவிற்கு துள்ளல் ஓசையும் உரிய ஓசைகளாகும்.

**39. பிறமொழி சொற்களைத் தமிழ் சொற்களாக மாற்றி எழுதுக. (ப எண் : 150)**

| பிறமொழிச்சொற்கள் | தமிழ் சொல் |
|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக்கட்டி |
| யூஸ் | பயன் |
| வெயிட் | எடை |
| ஆன்சர் | விடை |
| ஈக்வலாக | சமமாக |
| எக்ஸ்பெரிமென்ட் | பரிசோதனை |
| ரிப்பிட் | திரும்பவும் |
| ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் |

**40. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக**

சிலை, சீலை - சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருக்கிறார்கள்

தொடு, தோடு - காதில் உள்ள தோடை கையால் தொடு

மடு, மாடு - மலை மடுவில் ஆடு மேய்ந்தது

மலை, மாலை - மாலை நேரத்தில் அதிகமான மேகம் மலையில் தவழும்

வளி, வாளி - வளியை வாளியில் அடக்க முடியாது.

விடு, வீடு - கீழான பண்பை விடு; உன் வீடு நல்லறம் பூணும்.

**41. பழமொழிகளை நிறைவு செய்க.**

உப்பில்லாப் **பண்டம் குப்பையிலே**

ஒரு பானை **சோற்றுக்கு ஒரு சோறு பதம்**

உப்பிட்டவரை **உள்ளளவும் நினை**

விருந்தும் **மருந்தும் மூன்று நாட்களுக்கு மட்டும்**

அளவுக்கு **மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு**

**42. சொற்களை இணைத்து புதிய சொற்களை உருவாக்குக**

**(தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பூ).**

பூவிலங்கு, தேன்மழை, தேன்பூ, விண்மழை, மணிமேகலை, வான்மழை, பூமழை, செய்தேன்,

**43. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

**”தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை**
**தேரும் சிலப்பதி காறமதை**
**ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்**
**ஓதி யுனர்ந்தின் புருவோமே”**

”தேனிலே ஊறிய செந்தமிழின் – சுவை
தோரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே”

**44. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களை கண்டுபிடித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| கல் | - குவியல் | (கற்குவியல்) |
| பழம் | - குலை | (பழக்குலை) |
| புல் | - கட்டு | (புற்கட்டு) |
| ஆடு | - மந்தை | (ஆட்டுமந்தை) |

**வல்லின ஒற்றை இட் டும் நீக்கியும் எழுதுக.**

1. **காகத்திற்கு காது உண்டா? அதற்கு காது கேட்குமா?**

காகத்திற்குக் காது உண்டா? அதற்குக் காது கேட்குமா?

2. **எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும்.**

எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித் துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்ற படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு. காதுக் கேட்கும்.

3. **பறவைகளுக்கு பார்த்தல், கேட்ட ல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறை வாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.**

பறவைகளுக்குப் பார்த்தல், கேட்ட ல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வு_ குறை வாகவும் நுகர்தல் உணர்வு இல்லையென்றேக் கூறலாம்.

**45. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

(இயற்கை – செயற்கை - பாதைத் தெரியாத இயற்கைக் காடுகளில்பயணிக்கச் செயற்கைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.)

- கொடு – கோடு - அளவுகோள் கொடு. கோடு வரைய வேண்டும்.
- கொள் – கோள் - கோள்களை அறிந்து கொள்.
- சிறு – சீறு - சிறு பாம்பு, சீறுவதை பார்.
- தான் – தாம் - கண்ணன் தான் செய்ததாக, தாமே ஒப்புக்கொண்டான்
- விதி – வீதி - வீதிதோறும் நூலகம் அமைத்தால், நாட்டின் தலைவிதி மாறிவிடும்.

**46. குறிப்பைப் பயன்படுத்தி விடைதருக. (*குறிப்பு – எதிர்மறையான சொற்கள்)***

- மீளாத் துயர் - **மீண்ட இன்பம்**
- கொடுத்துச் சிவந்த - **கொடாது சிவக்காத**
- மறைத்துக் காட்டு - **வெளிப்படுத்தி மறை**
- அருகில் அமர்க - **தூரத்தில் செல்க**
- பெரியவரின் அமைதி - **சிறியவரின் ஆர்ப்பாட்டம்**
- புயலுக்குப் பின் - **தென்றலுக்கு முன்**

**47. கலவைச் சொற்றொடராக மாற்றுக.**

(கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்).

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

**48. தொடர் சொற்றொடராக மாற்றுக)**

**இன்னாசியர் புத்தகங்களை வாரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.**

இன்னாசியார் புத்தகங்களை வாரிசைப்படுத்தினார்; அடுக்கிவைத்தார்;

கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

**49. பின்வரும் தொடர்களுக்கு, பொருத்தமான தொடர்அமைக்க**

- வரப்போகிறேன் - நான் வரப்போகிறேன்.
- கொஞ்சம் அதிகம் - கொஞ்சம் அதிகமாக உண்டேன்.
- இல்லாமல் இருக்கிறது - மனிதநேயம் இல்லாமல் இருக்கிறது.
- முன்னுக்குப் பின் - திருடன் முன்னுக்குப்பின் பேசுவான்.
- மறக்க நினைக்கிறேன் - தீயவற்றை மறக்க நினைக்கிறேன்.

**50. தொகைச் சொற்களை பிரித்து எழுது. தமிழ் எண்ணுரு தருக. (ப.எண்) 180**

| **தொகைச்சொல்** | **பிரித்தல்** | **தமிழ் எண்ணுரு** |
|---|---|---|
| மூவேந்தர் | மூன்று + வேந்தர் | (3) மூன்று - ௩ |
| நாற்றிசை | நான்கு + திசை | (4) நான்கு - ௪ |
| முத்தமிழ் | மூன்று + தமிழ் | (3) மூன்று - ௩ |
| இருதிணை | இரண்டு + திணை | (2) இரண்டு - ௨ |
| முப்பால் | மூன்று + பால் | (3) மூன்று – ௩ |

| | | |
|---|---|---|
| ஐந்திணை | ஐந்து + திணை | (5) ஐந்து - ரு |
| நானிலம் | நான்கு + நிலம் | (4) நான்கு - ச |
| அறுசுவை | ஆறு + சுவை | (6) ஆறு - சு |
| பத்துப்பாட்டு | பத்து + பாட்டு | (10) பத்து - க0 |
| எட்டுத்தொகை | எட்டு + தொகை | (8) எட்டு - அ |

**51. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக**

| **ஊர்ப்பெயர்** | **மரூஉ** |
|---|---|
| தஞ்சாவூர் | - தஞ்சை |
| திருச்சிராப்பள்ளி | - திருச்சி |
| திருநெல்வேலி | - நெல்லை |
| உதகமண்டலம் | - உதகை |
| கும்பகோணம் | - குடந்தை |
| சைதாப்பேட்டை | - சைதை |
| மயிலாப்பூர் | - மயிலை |
| புதுச்சேரி | - புதுவை |
| புதுக்கோட்டை | - புதுகை |
| கோயம்புத்தூர் | - கோவை |
| நாகப்பட்டினம் | - நாகை |
| மன்னார்குடி | - மன்னை |

**52. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

**(அரசால் நிறுவப்படும் கட்டடங்களில் சிலைகளில் நிறுவியவர் பெயர் நிறுவப்பட்ட காலம் நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள் இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும்)**

**அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியர் பெயர்** நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்தியவை. அதுபோலவே கோவில்களும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம் பெற்றிருக்கும்.

**53. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

- வானம் கருக்கத் தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.
- அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் மலர்ந்தது.
- கருணை மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
- கண்ணுக்கு முழுமையாக இருக்கும் பசுமை புல்வெளிக்கு கதிரவனின் கதிர் வெயில் பரவிக்கிடக்கிறது.
- வெயிலில் அலையாதே: உடல் கருத்து விடும்.

**54. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

(தங்கும், மரவீடு, மரம்வீடு, அவிழும், தங்கும், தோற்பவை, விருது, தோற்பாவை, கவிழும், விருந்து)

- விரட்டாதீர்கள் - பறவைக்கு மரம்வீடு
- வெட்டாதீர்கள் கண்ட மனிதருக்கு அவைதரும் மரவீடு
- காலை ஒளியினில் மலரிதழ் அவிழும்
- சோலைப் பூவினை வண்டினம் கவிழும்
- மலை முகட்டில் மேகம் தங்கும் அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் தயங்கும்.
- வாழ்க்கையில் தோற்பவை மீண்டும் வெல்லும் - இதைத் தத்துவமாய் தோற்பாவை கூத்து சொல்லும்.
- தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே விருது அதில் வரும் காசு குறைந்தாலும் அது வேயவர் விருந்து.

**55. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு. அதற்குரிய காரணமும் உண்டு இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

- நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு
- நான் எழுதுவதற்கு ஒரு காரணம் உண்டு

56. **பொருத்தமான நிறுத்தற் குறியீகளை இடுக**

**சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி, வெற்பன், மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன் கொல்லி எனவும், வெற்பன் எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர். இதற்கு சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**கலைச்சொற்கள் தருக**

| | | | |
|---|---|---|---|
| Aesthetics | அழகியல் | Artifacts | கலைப்படைப்புகள் |
| Terminology | கலைச்சொல் | Myth | தொன்மம் |
| Classical literature | செவ்விலக்கியம் | Epic literature | காப்பிய இலக்கியம் |
| Devotional literature | பக்தி இலக்கியம் | Ancient literature | பண்டைய இலக்கியம் |
| Regional literature | வட்டார இலக்கியம் | Folk literature | நாட்டுபுற இலக்கியம் |
| Storm | புயல் | Land breeze | நிலக்காற்று |
| Tornado | சூறாவளி | Sea breeze | கடற்காற்று |
| Tempest | பெருங்காற்று | Whirl wind | சுழல் காற்று |
| Vowel | உயிரெழுத்து | consonant | மெய்யெழுத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Homo graph | - | ஒப்பெழுத்து | Monolingual | - | ஒரு மொழி |
| Conversation | - | உரையாடல் | Discussion | - | கலந்துரையாடல் |
| Nanotechnology | - | மீநுண்தொழில்நுட்பம் | | | |
| Space Technology | - | விண்வெளித் தொழில்நுட்பம் | | | |
| Biotechnology | - | உயிரித் தொழில்நுட்பம் | | | |
| Cosmic rays | - | விண்வெளிக் கதிர்கள் | | | |
| Ultraviolet rays | - | புற ஊதாக் கதிர்கள் | Infrared rays | - | அகச்சிவப்புக் கதிர்கள் |
| Consulate | - | துணைத்தூதரகம் | Patent | - | காப்புரிமை |
| Document | - | ஆவணம் | Guild | - | வணிகக்குழு |
| Irrigation | - | பாசனம் | Territory | - | நிலப்பகுதி |
| Humanism | - | மனிதநேயம் | | | |
| Cultural Boundaries | - | பண்பாட்டு எல்லை | Cabinet | - | அமைச்சரவை |
| Cultural values | - | பண்பாட்டு விழுமியங்கள் | Belief | - | நம்பிக்கை |
| Philosopher | - | மெய்யியலாளர் | Renaissance | - | மறுமலர்ச்சி |
| Revivalism | - | மீட்டுருவாக்கம் | | | |

**அகராதியைக் கண்டு பொருள் எழுதுக**

| | | | |
|---|---|---|---|
| ஊண் | - உணவு | திணை | - ஒழுக்கம், நிலப்பிரிவு |
| ஊன் | - இறைச்சி, உடம்பு | தினை | - சிறுதானியம் |
| அண்ணம் | - மேல்வாய் | வெல்லம் | - இனிப்புப் பொருள் |
| அன்னம் | - சோறு, ஒருவகை பறவை | வெள்ளம் | - நீர்ப்பெருக்கு |

| | | |
|---|---|---|
| அகன்சுடர் | - | உயர்ந்த தீபம் |
| கட்புள் | - | விழித்திருக்கும் பறவை |
| திருவில் | - | வானவில் |
| ஆர்கலி | - | கடல், மழை, பறவை |
| கொடுவாய் | - | ஆயுதங்களில் வளைந்த வாய், ஒரு வகை மீன் |
| அடவி | - | காடு |
| அவல் | - | பள்ளம், விளைநிலம், குளம் |
| சுவல் | - | மேட்டு நிலம், தோள், கழுத்து |
| செறு | - | வயல், பாத்தி, செய் |
| பழனம் | - | பொய்கை, மருத நிலம், சேற்று நிலம், பொது நிலம் |
| புறவு | - | காடு, முல்லைநிலம், புறா, முல்லைக்கொடி |
| அவிர்தல் | - | ஒளிர்தல், விரிதல் |
| அழல் | - | நெருப்பு, வெப்பம் |
| உவா | - | நிறைந்த, கடல், முழுநிலவு |
| கங்குல் | - | இரவு, இருள் |
| கனலி | - | நெருப்பு, சூரியன் |

| | | |
|---|---|---|
| மன்றல் | - | திருமணம், |
| அடிச்சுவடு | - | காலடியின் அடையாளம் |
| அகராதி | - | அகரமுதலி |
| தூவல் | - | மழை, இறகு, பேனா, ஓவியம் |
| மருள் | - | மயக்கம், வியப்பு |
| மிரியல் | - | மிளகு |
| வருத்தணை | - | பெருக்குதல் |
| அதசி | - | சணல் |
| துரிஞ்சில் | - | வௌவால் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | | |
|---|---|---|
| வந்தனன் | = | வா(வ)+த்(ந்)+த்+அன்+அன் |
| வா | = | பகுதி |
| வா(வ) | = | வா, வ என குறுகியது (விகாரப்பட்டது) |
| த் | = | சந்தி |
| த்(ந்) | = | த், ந் ஆகத் திரிந்தது ( விகாரப்பட்டது) |
| த் | = | இறந்தகால இடைநிலை |
| அன் | = | சாரியை |
| அன் | = | படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி. |

**கவனிக்க.**

- பகுபத உறுப்பிலக்கணம் செய்ய கொடுக்கப்படும் சொல் தனி வினைச்சொல்லாகத்தான் இருக்கும். அதாவது, வினைமுற்றுகள், வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர்
- முதலில் கொடுக்கப்பட்ட சொல்லின் இலக்கணத்தைப் பார்க்க வேண்டும். ஏனெனில் பிரிப்பதற்கும் விகுதி அமைப்பதற்கும் அதுவே அடிப்படை.
- அடுத்து காலத்தைப் பார்க்க வேண்டும். ஏனெனில் பிரிக்கும் போது நிகழ்கால சொல் அல்லாத பிற சொல் வந்தால் பகுதி அமைத்து மெய்யும் உயிருமாகப் பிரிக்க வேண்டும்(பொதுவாக) . ( இருப்பினும் இலக்கணம் உணர்த்தும் விகுதி அடிப்படையில் விகுதி வரவேண்டுமாதலால் அதற்குத் தகுந்தாற்போல் பிரிக்க வேண்டும்.)
- நிகழ்கால சொல் வந்தால் பகுதி அமைத்து, நிகழ்கால இடைநிலை அமைத்து, விகுதி அமைக்க வேண்டும். மாறாக மெய்யும் உயிருமாகப் பிரிக்கக்கூடாது.
- தொழிற்பெயர் காலம் காட்டாது. ஆதலால் தொழிற்பெயரில் காலம் காட்டும் இடைநிலை வரக்கூடாது. அதற்கு மாற்றாக சந்தியோ எழுத்துப்பேரோ வரும்.
- தொழிற்பெயர் அல்லாத பிற சொற்களில் ஒரு 'த்' வந்தால் அது இடைநிலை. இரண்டு 'த்' வந்தால் முதலில் இருப்பது சந்தி, இரண்டாவதாக இருப்பது இடைநிலை.
- 'ய்' உடன்படுமெய் சந்தியாக வரும். 'வ்' எதிர்கால இடைநிலையாகவும் உடன்படுமெய் சந்தியாகவும் வரும். என்வே, 'வ்' வந்தால் கவனமாக இருக்கவும்.

- சில நேரங்களில் 'ன்' புணர்ந்து கெட்டு 'இ' மட்டும் இறந்தகால இடைநிலையாக வரும். புணர்ந்து கெட்டதை அடைப்புக்குள் காட்டவேண்டும். இ(ன்)
- சில நேரங்களில் காலம் காட்டும் இடைநிலை இல்லாமல், பகுதி ஒற்று இரட்டித்து காலத்தை காட்டும்.

(பகுபத உறுப்புகளை உங்கள் ஆசிரியரிடம் கேட்டு தெரிந்து கொள்க)

**பகுதி – III பிரிவு 1 (வினா எண் 29-37)**

**உரைப்பத்தி வினாவிடை**

1. தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தில் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

   அ. விருந்தினர் என்போர் யாவர்?

   முன்பின் அறியாத புதியவர்கள்

   ஆ. விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது?

   விருந்தே புதுமை

   இ. இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

   விருந்து

2. பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபொது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைப் பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

   அ. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

   மீண்டும் மீண்டும்

   ஆ. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

   தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.

   இ. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.

   பெய்மழை

   ஈ. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?

   நெருப்புப் பந்தை நீரில் குளிரச் செய்தல்.

   உ. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை ?

   பஞ்ச பூதங்கள்

3. . ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர்

பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் சுவதைக் காதணி கேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியேபேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.

**இப்பத்தியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

1. ஐ.நா. அவையில் செய்யப்பட்டுள்ள வசதி யாது?
   ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.
2. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
   மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது ஆகும்.
3. ‘விளக்குவது’(Interpreting) என்றால் என்ன?
   ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) எனப்படும்.
4. மொழிபெயர்ப்பாளர் எங்கு அமர்ந்திருப்பார்?
   மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் அமர்ந்திருப்பார்.
5. ‘காதணிக் கேட்பி’ எதற்குப் பயன்படுகிறது?
   அவையில் உள்ள பார்வையாளர், தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்ள பயன்படுகிறது.

4. பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காண முடிகிறது. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக்குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

அ) மரப்பாவையைப் பற்றி குறிப்பிடும் நூல்?

திருக்குறள்

ஆ) பாவை குறித்த செய்திகள் அடங்கிய இலக்கிய காலம்?

சங்ககாலம்

இ) தோற்பாவைக் கூத்தின் மாற்று வடிவங்கள் எவை?

கையுறைப்பாவைக் கூத்து, பொம்மலாட்டம்

ஈ) தோற்பாவைக் கூத்து பற்றி குறிப்பிடும் நூல்கள் எவை?

திருவாசகம், பட்டினத்தார் பாடல்

உ) இவ்வுரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக.

பாவைக்கூத்து

5. ‘தப்பு’ என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி. கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது. ‘தப்தப்’ என்று ஒலிப்பதால் அந்த ஒலியின் அடியாகத் ‘தப்பு’ எனப்பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

அ) தப்ஆட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

தப்பாட்டம், தப்பட்டை, தப்பு

ஆ) தப்பாட்ட நிகழ்வை எழுதுக.

‘தப்பு’ என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும்.

இ) ‘தப்பு’ பெயர்காரணம் தருக.

‘தப்தப்’ என்று ஒலிப்பதால் அந்த ஒலியின் அடியாகத் ‘தப்பு எனப்பெயர் பெயர் வந்தது.

ஈ) ‘தப்பு’வின் வடிவம்?

வட்ட வடிவம்

உ) இவ்வுரைப் பத்திக்கு பொருத்தமான தலைப்பு தருக.

தப்பு

6. ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

அ) இப்பத்தியில் குறிப்பிடப்படும் அருங்காட்சியகம் எங்கு அமைந்துள்ளது?

ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னா வில் அமைந்துள்ளது

ஆ) ‘முசிறி’ எந்நாட்டு துறைமுகம்?

சேர நாட்டுத் துறைமுகம்

இ) அலெக்ஸாண்டிரியா துறைமுகம் எந்த நாட்டில் உள்ளது?

எகிப்து நாடு

ஈ) பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட வணிக ஒப்பந்தம் எந்த நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது?

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டது.

7. இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப்பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார் தமிழரசர் கழகம் சென்னையிலும், திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. சித்தூர், புத்தூர், திருத்தணி ஆகிய இடங்களிலும் வடக்கெல்லைப் போராட்டத்தைத் தொடங்கியது.

அ) இந்திய மாநிலங்கள் எப்பொழுது பிரிக்கப்பட்டது?

இந்திய விடுதலைக்குப் பிறகு

ஆ) சித்தூர் மாவட்டத்தை எதனுடனும் இணைக்க விரும்பினர்?

ஆந்திர மாநிலத்துடன்

இ) வடக்கெல்லைப் போராட்டம் தொடங்கிய இடங்கள்?

சித்தூர், புத்தூர், திருத்தணி

ஈ) வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருங்கிணைத்தது யார்?

தமிழாசான் மங்கலங்கிழார்

8. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போரிலும் அறநெறிகளைப் பின்பற்றியவர் யார்?

தமிழர்

ஆ) போர் அறம் என்பது யாது?

போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சீறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

போர் அறம்

**உரைநடை சிறுவினாக்கள்**

1. **புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்க திண்டும் அமைத்தனர்.திருவிழாக்காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது. இப்படி காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.**

   திருவிழாக்காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பது சில இடங்களில் மட்டுமே காணமுடிகிறது. அவர்களும் ஒருவழியில் உறவினர்களாக இருந்தால் மட்டுமே விருந்து. காலமாற்றம், பொருளாதார சூழல், விலைவாசி உயர்வு, கொள்ளை, கொலை முதலிய காரணங்கள் இன்று விருந்தோம்பல் பண்பு மாறுவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. ஆனால், அதற்கு மாற்று வழியாக பொது இடங்களிலும் திருத்தலங்களிலும் திருவிழாக்களின்போதும் விருந்தோம்பல் பண்பு இன்றும் தொடர்கிறது. வீடுகளில் நல் நிகழ்வுகள் நடைபெறும்போது மண்டபங்களில் விருந்தோம்பல் செய்கின்றனர்.

2. **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.**

   - வாகனங்களை இயக்குவதற்கும் நிறுத்துவதற்கும் தானியங்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
   - அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம். இதுவே சுருக்கமான வழி என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறது.
   - நமது திறன் பேசியோ, கணினியோ நாம் சொல்லச் சொல்லத் தன் அகண்ட தரவுகளில் உள்ள கோடிக்கணக்கான சொற்களுடன் ஒப்பிட்டுச் சரியான சொல்லைக் கண்டுபிடிக்கிறது.
   - விடுதிகளில், வங்கிகளில் அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவையை ரோபோக்கல் அளிக்கின்றன.
   - மனிதனால் முடியும் செயல்களையும் அவன் கடினம் என்று நினைக்கும் செயல்களையும் கூட கண்டுபிடிப்புகள் செய்து விடுகின்றன. இக்கண்டுபிடிப்புகள் அனைத்தும் மனிதனை மேம்படுத்துவதாகவே அமைகின்றன.

3. **மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச , எழுத, சிந்திக்க இத்தொழில் நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனித குலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.**

   - எதிர்காலத் தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவைக் கொண்டே செயல்படுத்தப்படும்.

- எந்த ஒரு தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்துவிடுவதில்லை. 1980களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும் இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின.
- அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புவதும் ‘அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம், இதுவே சுருக்கமான வழி’ என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுவதும் செயற்கை நுண்ணறிவாலேயே நிகழ்கின்றன.
- செயற்கை நுண்ணறிவு கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது. கண் அறுவை மருத்துவம் செய்கிறது. சமைக்கிறது. சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது.
- எதிர்காலத்தில் ‘ரோபோ’விடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களை நாம் பார்க்கப்போகிறோம்.

4. **மெய்நிகர் உதவியாளர் குறித்து அறிவன யாவை?**
   - மெய்நிகர் உதவியாளர் என்பது, கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல் திறன்பேசிகளில் இயங்கும் உதவு மென்பொருள்.
   - நாம் சொல்கின்றவர்களுக்கு இது தொலைபேசி விடுக்கும். நாம் திறக்குமாறு கட்டளையிடும் செயலியைத் திறக்கும்.
   - எந்தக்கடையில் எந்தப்பொருள் விற்கும் எனச் சொல்லும்.
5. **உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?**
   - நம் வாழ்வின் ஏணிப்படியான கல்வியைக் கற்றால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.
   - நம் தாய்த் தந்தை படிக்காததால் தான் நாம் இந்த வறுமைக்கு ஆளாகியுள்ளோம். நாம் படித்துவிட்டால் இந்த வறுமை இருக்காது.
   - கல்வி கற்றால் மட்டுமே நம் வாழ்வில் வரும் பல துன்பங்களுக்குத் தீர்வு காண முடியும்.
   - இந்தப் படிப்பை முடித்துவிட்டால் அடுத்து வரும் படிப்புகளை நீ வேலைக்குச் சென்று கொண்டே கூட படிக்கலாம்.
   - எந்தச் சூழ்நிலையிலும் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கவேண்டும்.
6. **படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துக்கலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.**
   1. மயிலாட்டம் என்றால் என்ன?
      - ❖ நையாண்டி மேளம் இசைப்பர்.
      - ❖ காலில் சலங்கை கட்டி மயில்போல் ஆடுவர்.
   2. கரகாட்டம் என்றால் என்ன?
      - ❖ தலையில் கரகச்செம்பு வைத்து ஆடுவர்

❖ கரகத்தில் கிளிபொம்மை வைத்து ஆடுவர்.

7. **'தலையைக் கொடுத்தேனும் தலைநகர் காப்போம்' இடம் சுட்டிப் பொருள் தருக.**

**இடம்**: சென்னையை ஆந்திராவின் தலைநகராக மாற்ற முயற்சி செய்தனர்

**பொருள்**: சென்னை, ஆந்திராவின் தலைநகராக மாற்ற கூடாது. மீறினால், என்ன விலை கொடுக்கவும் தயார் என்பதே பொருள்.

**விளக்கம்**: ஆந்திர மாநிலம் பிரியும் பொழுது, சென்னை தமிழருக்கே உரிமையானது.

## பகுதி – III (பிரிவு 2)

**மனப்பாடம்**

**அன்னை மொழியே**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!

தென்னன் மகளே திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

**முல்லைப்பாட்டு**

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர், தாயர் "என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

- நப்பூதனார்.

**காசிக்காண்டம்**

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருகஎன உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

- அதிவீரராம பாண்டியர்

**பெருமாள் திருமொழி**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்

மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா!நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே!.

- குலசேகராழ்வார்.

**நீதிவெண்பா**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

- கா.ப. செய்குதம்பிப் பாவலர்.

**திருவிளையாடற்புராணம்.**

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

- பரஞ்சோதி முனிவர்

**காலக்கணிதம்**

மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!

- கண்ணதாசன்

**தேம்பாவணி**

நவமணி வடக்க யில்போல்
    நல்லறப் படலைப் பூட்டும்
தவமணி மார்பன் சொன்ன
    தன்னிசைக்கு இசைகள் பாடத்
துவமணி மரங்கள் தோறும்
    துணர்அணிச் சுனைகள் தோறும்

உவமணி கானம்கொல் என்று

ஒலித்து அழுவ போன்றே.

- வீரமாமுனிவர்.

**முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்**

செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்

திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வடமாடப்

பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்

பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச்சுட்டி பதிந்தாடக்

கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்

கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட

வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை

ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை

- குமரகுருபரர்.

**கம்பராமாணயம்**

தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,

கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,

தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்

வண்டுகளி னிதுபாட மருதம்வீற்றி ருக்கும்மாதோ.

வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்

பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;

மையோ? மரகதமோ? மறிகடலோ? மழைமுகிலோ?

ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.

- கம்பர்.

**சிலப்பதிகாரம்**

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்

அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை அறியா

வளம்தலை மயங்கிய நனந்தலை மருகும்;

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு

கூலம் குவித்த கூல வீதியும்;

- இளங்கோவடிகள்

1. **கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?**

- நீங்கள் செல்லும் இப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள். அங்குள்ளவர்களிடம் பகைவரைத் தண்டிக்காமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

- அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்கு போவது போலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் செல்லலாம்.
- அவர்களும் உறவினர் போலவே உங்களுடன் பழகுவர். நீண்ட வழியைக் கடந்து வந்த உங்களின் துன்பம் தீர இனிய சொற்களைக் கூறுவார்கள்.
- அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உண்ணுவீர்கள் என்று பரிசில் பெற்ற கூத்தன், பரிசில் பெறச் செல்லும் கூத்தனை ஆற்று படுத்தினான்.

**2. தமிழன்னையை வாழ்த்துவதற்காக காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?**

- அன்னை மொழியாகவும், அழகாய் அமைந்த செந்தமிழாகவும், பழமைக்குப் பழமையாய் தோன்றிய நறுங்கனியாகவும்,
- கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலக பேரரசாகவும், பாண்டிய மன்னனின் மகளாகவும்,
- திருக்குறளின் பெருமைக்கு உரியவளாகாவும், பத்துப்பாட்டாகவும், எட்டுத்தொகையாகவும், பதினெண்கீழ்க்கணக்காகவும், நிலைத்த சிலப்பதிகாரமாகவும், அழகான மணிமேகலையாகவும் உள்ளதால் தமிழே,
- உன் பொங்கி எழும் நினைவுகளால் உன்னைத் தலை பணிந்து வாழ்த்துகின்றோம் என்று பாவலரேறு வாழ்த்துகிறார்.

**3. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.**

- தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. ஐம்பெரும் காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.
- கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது . வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. அலைகளால் சங்கினைத் தடுத்து நிறுத்தி காக்கிறது.

**4. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.**

- கார்காலம் தொடங்கிவிட்டது.
- கடல் நீரை முகந்துகொண்டு மழைமேகமானது திருமாலின் நிறம் கொண்டு, மாவலி மன்னன்முன் விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் பேருருவம் கொண்டதுபோல் வளமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, பெருமழை பொழிந்தது.
- மாலைப் பொழுதில் தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரத்தைப் போக்கக் கருதிய முதுப்பெண்கள், ஊரின் புறத்தே சென்று முல்லைப் பூவுடன் நெல்லையும் சேர்த்து தூவி, தெய்வத்தைத் தொழுதனர். தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.
- அப்போது யாரோ ஒரு ஆயமகள், சிறுதாம்பு கயிற்றால் கட்டப்பட்ட, பசியால் வாடிய கன்றின் வருத்தத்தைப் போக்க நினைத்து அதனிடம் , "மிகுதியாகப் புல்லை மேய்ந்த உன் தாய், வளைந்த கத்தியை கையில் உடைய இடையர் ஓட்டி வர, இப்போது வந்துவிடுவாள். வருந்தாதே! " என்று கூறினாள்.
- அதனை நற்சொல் எனக் கொண்ட முதுப்பெண்கள் தலையிடம் சென்று, நற்சொல்லைக் கேட்டோம். அதனால் தலைவர் திரும்பி வருவது உறுதி. எனவே, உன் துயரத்தை விட்டுவிடுவாயாக என்று ஆற்றுப்படுத்தினாள்.

**5. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

- உடலில் ஏற்பட்ட புண்ணை மருத்துவர், கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என நோயாளி என நினைத்து அம்மருத்துவரை நேசிப்பது போல,
- வித்துவக்கோட்டு இறைவா நீ எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கிறேன் என ஆழ்வார் கருதுவதாக இவ்வுவமைச் சுட்டுகிறது.

**6. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.**

- இடைக்காடனார் பாடிய பாடலைக் குசேல பாண்டியன் அவமதித்தான்.
- இடைக்காடனார் கடம்பவனத்து இறைவனிடம் வேண்டி முறையிட்டார்.
- இறைவன் கடம்பவனக் கோவிலைவிட்டு வெளியேறி வையை ஆற்றின் தென்பக்கத்தில் கோவிலை உருவாக்கி, அங்கே எழுந்தருளினார்.
- இதனை அறிந்த மன்னன் யான் என்ன குற்றம் செய்தேன் ஏன் இங்கு எழுந்தருளினீர் என வருந்தினான்.
- இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றத்தைத்தவிர, வேறு எந்த குற்றமும் இல்லை என்றார்.
- தன் தவற்றை உணர்ந்த பாண்டிய மன்னன், இடைக்காடனாருக்கு மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்திச் சிறப்புச் செய்தான்.

**7. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புற பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.**

- நவீன கவிதையில் - பூவின் மென்மை, அழகு, நளினத்தன்மை பாடப்பட்டுள்ளது.
- நாட்டுப்புற பாடலில் - மென்மையான மலரை தங்கத் துரட்டியில் எடுப்பதாக பாடப்பட்டுள்ளது.
- **ஒப்பீடு:**

இரு பாடல்களிலும் பூக்களை கையாலும் நுட்பம் விளக்கப்பட்டுள்ளது.

8. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

திருவடியில் - கிண்கிணி சிலம்பு ஆடட்டும்

இடையில் - அரைஞாண் அரைவடம் ஆடட்டும்

தொந்தியுடன் - சிறுவயிறு ஆடட்டும்

நெற்றியில் - சுட்டி ஆடட்டும்

கொண்டையில் - முத்து ஆடட்டும்

வைத்தியநாதபுரி முருகனே செங்கீரை ஆடி அருள்வாய்

**9. நூலோடு - ஆசிரியரை பொருத்தி எழுதுக.**

என் கதை - நாமகக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

வேருக்கு நீர் - ராஜம் கிருஷ்ணன்

நாற்காலிக்காரர் - ந. முத்துசாமி

10. **“முதல்மழை விழுந்ததும்” என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?**

- ❖ மண் பதமாகிறது.
- ❖ சூரியன் உதித்தது.
- ❖ காளைகளை விரைவாக ஓட்டினர்.
- ❖ மண்ணை உழுதனர்.
- ❖ நாற்று வளர்ந்தது.
- ❖ கொழுவை நாட்டினர்.

**11. செங்கற்கள் அறியாது” - இடஞ்சுட்டிப் பொருள் தருக.**

**இடம்**

கவிஞர் நாகூர் ரூமி அவர்கள் எழுதிய சித்தாளு என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்**

கட்டடங்கள் உருவாவதற்குக் காரணமான சித்தாளின் மனச் சுமைகளைச் செங்கற்கள் அறிவதில்லை .

**விளக்கம்**

பல அடுக்குமாடி கட்டிடங்களை உருவாக்கி பிறருடைய கனவுகளை நனவாக்கும் சித்தாளின் சுமைகளைப் பற்றி எவரும் நினைப்பதில்லை. கற்களைச் சுமந்தால் மட்டுமே அடுத்த வேளை உணவு. அவர்களின் மனச்சுமையைச் செங்கற்களும் அறிவதில்லை மனிதர்களும் அறிவதில்லை என்று நாகூர் ரூமி சித்தாளின் வேதனையைப் புலப்படுத்துகிறார்.

**12. “காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்” உவமை உணர்த்தும் கருத்து யாது ?**

- ❖ இளம் பயிரானது வளர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்பே தூயமணி போன்று பெய்கின்ற மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்து விட்டது போல கருணையனாகிய நானும் என் தாயை இழந்து விடுகிறேன் .

**13. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

- ❖ நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்
- ❖ இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்
- ❖ உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொள்ளும் வழிவகைகளை அறியேன்
- ❖ காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்

**14. தேம்பாவணி நூல் குறிப்பு எழுதுக .**

- ❖ ஆசிரியர் – வீரமாமுனிவர்.
- ❖ தேம்பா + அணி = வாடாத மாலை.
- ❖ தேன் +பா + அணி = தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு.
- ❖ யோசேப்பினை (வளன்) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல்.
- ❖ இது 3 காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 பாடல்களையும் கொண்டுள்ளது.

## பகுதி – III (பிரிவு - 1)

### 1. உவமை அணி

**விளக்கம்**

உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, உவம **உருபு வெளிப்படையாக நின்று** ஒப்புமைத் தோன்ற வருவது உவமையணி ஆகும்.

**சான்று**

வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு.

**பொருத்தம்**

இக்குறளில் உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, **உவம உருபு வெளிப்படையாக நின்று** ஒப்புமைத் தோன்ற வருவதால் இது உவமையணி ஆகும்.

### 2. எடுத்துக்காட்டு உவமையணி

**விளக்கம்**

உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து**, உவம உருபு மறைந்து நின்று** ஒப்புமைத் தோன்ற வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**சான்று**

பண்என்னாம் பாடற் கியைபின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்

**பொருத்தம்**

உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, உவம உருபு மறைந்து நின்று ஒப்புமைத் தோன்ற வருவதால் எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

### 3 . தற்குறிப்பேற்ற அணி

**அணி விளக்கம்**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**சான்று**

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட"

**அணிப்பொருத்தம்:**

இப்பாடலில், இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறுவதால் இது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

### 4. தீவக அணியைச் சான்றுடன் விளக்குக .

**விளக்கம்**

தீவகம் – விளக்கு, அறையில் வைக்கப்பட்ட விளக்கு பல இடங்களிலும் வெளிச்சம் தருவது போல் ஓர் இடத்தில் நின்ற சொல் செய்யுளின் பல இடங்களிலும் சென்று பொருள் தருவது தீவக அணி

**சான்று**

"சேர்ந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள் இழிகுருதி
-----------------------------------------------------"

**அணிப் பொருத்தம்**

ஓர் இடத்தில் நின்ற சொல் ('சேந்தன' )செய்யுளின் பல இடங்களிலும் சென்று பொருள் தருவதால் இது தீவக அணி ஆயிற்று.

5. **நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக**

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள் கொள்வது நிரல்நிறை அணி ஆகும். (நிரல் – வரிசை, நிறை - நிறுத்துதல்)

**சான்று**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

**அணிப் பொருத்தம்**

இக்குறளில் சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி பொருள் கொள்வதால் இது நிரல் நிறை அணி ஆயிற்று.

6. **எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் அணி எது அதனைச் சான்றுடன் விளக்குக. அல்லது தன்மை நவிற்சி அணியை விளக்குக.**

**அணி வகை -** தன்மையணி

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத்தன்மை அமைய பாடுவது தன்மை அணியாகும்

**சான்று**

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்
------------------------------------------------"

**அணிப் பொருத்தம்**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத்தன்மை அமைய பாடுவதால் இது தன்மை அணியாகும்.

7. **வஞ்சப்புகழ்சி அணி**

**விளக்கம்**

புகழ்வது போல பழிப்பதும் பழிப்பது போல புகழ்வதும் வஞ்சப்புகழ்சியணி ஆகும்.

**சான்று**

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

**பொருத்தம்**

இக்குறள், புகழ்வது போல பழிப்பதால் இஃது வஞ்சப்புகழ்சியணி ஆகும்.

(மெல்லக் கற்போருக்கு இவ்வாறே பயிற்சி அளிக்கலாம்)

***8.*** **சொற்பொருள் பின்வருநிலையணி** (மீண்டும் மீண்டும் வருதல்)

**விளக்கம்**

சொல்லும் பொருளும் மீண்டும் மீண்டும் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

**சான்று**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்

**பொருத்தம்**

சொல்லும் பொருளும் மீண்டும் மீண்டும் வருவதால் இஃது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும். (தலைப்பிலேயே விளக்கம் உள்ளது)
(மெல்லக் கற்போருக்கு இவ்வாறே பயிற்சி அளிக்கலாம்)

9 . **"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்." – இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

**பயின்று வரும் பொருள்கோள் :** ஆற்றுநீர் பொருள்கோள்

**விளக்கம்:** செய்யுளின் தொடக்கம் முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப்போல நேராகப்பொருள் கொள்ளுமாறு அமைவது 'ஆற்றுநீர்ப் பொருள்கோள்' எனப்படும்.

**சான்று :** "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

**பொருள்:** முயன்றால் பலனுண்டு முயலவில்லை என்றால் பலனில்லை என குறளில் வந்த எந்த ஒரு சொல்லும் முன்பின் மாறாமல் பொருள் கொள்வதால் இது ஆற்றுநீர் பொருள்கோள் எனப்பட்டது.

**1. கவிதையைத் தொடர்க**

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தபடி
மனிதம் வேடிக்கை மட்டும்
பார்க்க பழகி விட்டது
மனிதம் தன்னை அடையாளப்படுத்த
இதைவிடுத்தும் வேண்டுமோ வேறுசூழல்

**2. 'கண்ணே கண்ணுறங்கு**
**காலையில் நீ எழும்பு**
**மாமழை பெய்கையிலே**
**பாடினேன் தாலாட்டு**
**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு' –இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

கண்ணே கண்ணுறங்கு - விளித்தொடர்
காலையில் நீ எழும்பு - வேற்றுமைத் தொடர்
மாமழை பெய்கையிலே - உரிச்சொற்றொடர்

மாம்பூவே கண்ணுறங்கு - விளித் தொடர்
பாடினேன் தாலாட்டு - வினைமுற்று த் தொடர்
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - அடுக்குத்தொடர்

**3. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**

- இன்சொல் - பண்புத்தொகை - இன்சொல் கேட்டு மகிழ்ந்தேன்
- எழுகதிர் - வினைத்தொகை - எழுகதிர் செந்நிறத்தில் இருந்தது
- கீரி பாம்பு - உம்மைத்தொகை - கீரி பாம்பு சண்டையிடுவதைக் கண்டேன்
- பூங்குழல் வந்தாள் - அன்மொழித்தொகை - பூங்குழல் வந்தாள்
- மலை வாழ்வார் - வேற்றுமைத்தொகை
  மலை வாழ்வார் இயற்கை உணவை உண்டு வாழ்வார்.
- முத்துப்பல் - உவமைத்தொகை
  நிறைமதி முத்துப்பல் தெரிய அழகாய் சிரித்தாள்.

**4. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. - இதுப்போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.**

கத்தரி நாற்று சந்தையில் விற்கக் கண்டேன்.
தென்னம்பிள்ளை வரிசையாக நடப்பட்டுள்ளது.
ஏரிக்கரையில் நட்ட பனை, மடலியை விரித்து அழகாக அசைகிறது.
வாழைக்கன்று நட்டு வைத்தால் நம் வாழ்வும் வளரும்.
நெற்பைங்கூழ் மெல்ல வளர ஆரம்பித்துவிட்டது.

**5. பாரதியின் வசன நடை - சிட்டுக்குருவி**

**சிறுதானியம் போன்ற மூக்கு ; சின்ன கண்கள் ; சின்ன தலை; வெள்ளை கழுத்து; அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளி கால்கள்; இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு, என் வீட்டில் இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் ; மற்றொன்று பெண். இதுபோன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.**

<u>மயில்</u>

அழகிய தோற்றம்; பார்க்க சலிக்காத தோற்றம்; பார்க்கப்பார்க்க வியப்பூட்டும்; அதன் அழகில் அனைவரும் மயங்குவர்; நீண்ட ஒலி எழுப்பும்; வண்ணமயமான தோகையை விரித்தாடும்; பச்சை, நீலம், மஞ்சள், கருநீலம் கலந்த ஒரு அழகிய இயற்கை ஓவியம் போல காட்சியளிக்கும். நம் நெஞ்சங்களுக்கும் ,மகிழ்வளிக்கும் மயிலின் அழகே அழகு!

**6. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்று விட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக் கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்து விட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலச்சுமித் தொட் டியிலிருந்த நீரைக் குடித்தாள். – இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.**

- வாழைத் தோப்பில் - வாழைத் தோட்டம்- மரபு வழுவமைதி
- குட்டியுடன் - கன்றுடன் - மரபு வழுவமைதி
- இலச்சுமி கூப்பிடுகிறாள்- பசு கூப்பிடுகிறது - திணை வழுவமைதி
- இதோ சென்று விட்டேன் - இதோ செல்கிறேன் - கால வழுவமைதி
- துள்ளிய குட்டியை - துள்ளிய கன்றினை - மரபு வழவமைதி
- அவனை - கன்னை - திணை வழுவமைதி
- நீயும் இவனும் - நீயும் அதுவும் - திணை வழுவமைதி
- நீரைக் குடித்தாள் - நீரைக் குடித்தது - திணை வழுவமைதி

**7. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**

***(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)***

1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ***கற்றல்***
2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை***கரு***
3. கல் சிலை ஆகுமெனில், நெல் ***சோறு*** ஆகும்.
4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ***எழுத்து***
5. மீன் இருப்பது நீரில்; தேன் இருப்பது ***பூவில்***

**8. தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி.**
**திறன்பேசியிலேயே விளையாடிக்கொண்டிருக்கும் தங்கை.**
**காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்.**
**எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி.**
**இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.**

1. குழு மனப்பான்மையை வளர்க்கும் விளையாட்டுகளை விளையாடச் செய்வேன்.
2. மனத்திற்கு இதமான பாடல்களைக் கேட்கச் செய்வேன்
3. உறவினர்கள், நண்பர்களுடன் கலந்து உறவாடச் செய்வேன்.
4. புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவேன்.

**9. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

1. கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான் .
   **அழகிய குளிர்ந்த** கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான் .
2. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
   **பயனுள்ள** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.
3. வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
   **துன்பம் நிறைந்த** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
4. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

**வாழ்க்கைக்** கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்

5. குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.

   **வீட்டுப் பாடத்தைக்** குழந்தைகள் தனித்தனியே எழுதித் தரவேண்டும்.

**10. புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.**

தார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை

பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை

சேர்ந்து அமர்ந்து ஒலிப்போன் பள்ளியுமில்லை

சோர்ந்து போகாமல் வீடமைப்போன் பொறியாளருமில்லை

வீட்டுக்கு வருமுன்னே. வருவதைக் கூறுவேன் – நான் யார்?

**விடை - காகம்**

**11. புயலின் பொது செயல்படுத்த வேண்டிய முக்கிய செயல்கள்**

- ❖ புயலின் பொது வெளியில் செல்வதைத் தவிர்ப்போம்.
- ❖ தொலைப்பேசி, தொலைக்காட்சி முதலிய மின்சாதனப் பொருள்களைத் தொடுவதைத் தவிர்ப்போம்.
- ❖ மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப் பகுதியில் குடும்பத்துடன் தங்குவோம்.
- ❖ காற்றடிப்பது நின்றாலும் வானொலி மறு அறிவிப்பு வரும்வரை விட்டைவிட்டு வெளியில் வரமாட்டோம்.
- ❖ மெழுகுவர்த்தி, தீப்பெட்டி முதலிய அவசிய பொருள்களையும் உணவு பொருள்களையும் முன்கூட்டியே வாங்கிவைப்பேன்.

**12. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.**

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ***புதையல்*** யாவும் அரசுக்கே சொந்தம் . நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் ***புதைத்தல்*** நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும் .
2. காட்டு விலங்குகளைச் ***சுடுதல்*** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ***சுட்டல்*** திருந்த உதவுகிறது.
3. காற்றின் மெல்லிய ***தொடுதல்*** பூக்கக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ***தொடுத்தல்*** பூக்கக்களை மாலையாக்குகிறது.
4. பசுமையான ***காட்சி***யைக் ***காணுதல்*** கண்ணுக்கு நல்லது.
5. பொதுவாழ்வில் ***நடித்தல்*** கூடாது. ***நடிப்பி***ல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது.

**13. புறத்திணைகளை (எ.கா) தந்து விளக்குக.**

புறத்திணைகள் 12 வகைப்படும். அவையாவன:

- ❖ வெட்சி - ஆநிரை கவர்தல்
- ❖ கரந்தை - ஆநிரை மீட்டல்
- ❖ வஞ்சி - மண்ணாசை கவர்தல்
- ❖ காஞ்சி - எதிர்த்து போரிடல்
- ❖ நொச்சி - மதில் காத்தல்
- ❖ உழிஞை - மதில் வளைத்தல்

**14. மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்

பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே

பூச்சியைக் கவரும் வண்ணங்களில்

பூக்களிடம் விழுவது மனிதர்களே

பூக்களின் மென்மை மனங்களிளே

பூமாலை சூடி மணம் மகிழும் மணமக்களே

**அலகிடுதல்**

**குறள்**

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

**அலகிடுதல்**

| எண் | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 1 | எப்/பொருள் | நேர்+நிரை | கூவிளம் |
| 2 | எத்/தன்/மைத் | நேர்+நேர்+நேர் | தேமாங்காய் |
| 3 | தா/யினும் | நேர்+நிரை | கூவிளம் |
| 4 | அப்/பொருள் | நேர்+நிரை | கூவிளம் |
| 5 | மெய்ப்/பொருள் | நேர்+நிரை | கூவிளம் |
| 6 | காண்/ப | நேர்+நேர் | தேமா |
| 7 | தறி/வு | நிரை+நேர் (நிரைபு) | பிறப்பு |

**முடிவு**

இக்குறளின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் **பிறப்பு** என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

**அலகிடுதல் தவறு இல்லாமல் எழுதுவதற்கு சில நுணுக்கங்கள்**

**நேர்**

தனிக்குறில்– **த** ,தனிக்குறில் + ஒற்று(மெய்)–**னல்**
தனிநெடில்–**கா** , தனிநெடில் + ஒற்று(மெய்)–**தாச்**

**நிரை**

இருக்குறில்–**பல**, இருக்குறில் + ஒற்று(மெய்)–**தலா்**
குறில் நெடில்–**பலா,**குறில் நெடில்+ ஒற்று(மெய்)–**கலாம்**

**கவனி**

❖ (நேர்–இதில் மெய் இல்லாமல் ஓரெழுத்தே. எனவே, மெய்யை நீக்கி **ஓரெழுத்து** வந்தால் **நேர்**

❖ நிரை–இதில் ஈரெழுத்து வந்துள்ளது. எனவே, மெய்யை நீக்கி **ஈரெழுத்து** வந்தால் **நிரை** )
**(ஒற்றெழுத்திற்கு (மெய்) மதிப்பில்லை)**

❖ அலகிடுவற்கு **நிரை**யசையே பயன்படுத்த வேண்டும். இருப்பினும் அவசரத்தில் **இருநெடிலோ நெடில்குறிலோ** வருவதை கவனிக்காமல் பிரித்துவிடுவீர்கள். எனவே, கீழே கொடுக்கப்பட்டுள்ள முறையைப் பயன்படுத்தி தவறில்லாமல் எழுதுங்கள்.

**பிரிக்கும் முறை**

1. மெய்யெழுத்து வரும் இடத்தில் கோடுபோட்டு பிரிக்க வேண்டும்,

**உம்** அங்/கும் /

2. தனி நெடிலெழுத்து (ஒற்று இல்லாமல்) வரும் இடத்தில் கோடுபோட்டு பிரிக்க வேண்டும்

**உம்** போ/ல

(நெடிலும் மெய்யும் சேர்ந்து வருமிடத்தில் இரண்டையும் சேர்த்தே கோடு போட வேண்டும். **ஒற்றைத் தனியாகப் பிரிக்கக்கூடாது.**

**உம் தாங்** /கும்)

3. எண்ணிப்பார்த்தல் வேண்டும். **ஓரெழுத்து** வந்தால் **நேர்** எனவும் **ஈரெழுத்து** வந்தால் **நிரை** எனவும் எழுத வேண்டும்.
**ஒற்றெழுத்திற்கு மதிப்பு கிடையாது. எனவே, அதை எண்ணுதல் கூடாது.)**

4. ஈரெழுத்திற்கு மேல் வந்தால் இரண்டு எழுத்து தள்ளி கோடு போட்டு **நிரை** என்று எழுத வேண்டும். மீண்டும் எண்ணிப்பார்க்க வேண்டும்.
**(இந்த வரிசை முறையை மாற்றவே கூடாது.)**

**கவனிக்க**

- **ஒற்றெழுத்திற்கு (மெய்) மதிப்பில்லை. எனவே, இரண்டு ஒற்றுகள் வந்தாலும் இரண்டையும் சேர்த்தே பிரிக்க வேண்டும்**

  உம் காழ்ப் /பு

- ***ஆய்த எழுத்தையும் ஒற்றாகவே நினைக்க வேண்டும்***

  உம் எஃ /கு

- **அடைப்புக்குள் இருக்கும் எழுத்தை அசை பிரிக்கக்கூடாது.**

  உலகத்தார்க்(கு)

**முதல் ஆறு சீர்களுக்கான வாய்பாடு**

நேர் + நேர் - தேமா
நிரை + நேர் - புளிமா
நேர் + நிரை - கூவிளம்
நிரை + நிரை - கருவிளம்
நேர் + நேர் + நேர் - தேமாங்காய்
நிரை + நேர் + நேர் - புளிமாங்காய்
நேர் + நிரை + நேர் - கூவிளங்காய்
நிரை + நிரை + நேர் - கருவிளங்காய்

**ஏழாவது சீருக்கான வாய்பாடு**

நேர் - நாள்
நிரை - மலர்
நேர் + நேர் (நேர்பு) - காசு
நிரை + நேர் (நிரைபு) - பிறப்பு

**வாய்பாட்டை எளிமையாக மனதில் வைத்துக்கொள்ள**

**இடக்கை மற்றும் வலக்கை முறையே...**

| **இடக்கை** | **வலக்கை** | **இடக்கை** | **வலக்கை** |
|---|---|---|---|
| 1<br>தே | 1<br>மா | **1**<br>நேர் | **1**<br>நேர் |
| 2<br>புளி | 1<br>மா | **2**<br>நிரை | **1**<br>நேர் |
| 2<br>கரு | 2<br>விளம் | **2**<br>நிரை | **2**<br>நிரை |
| **1**<br>கூ | 2<br>விளம் | 1<br>நேர் | **2**<br>நிரை |

- தே மா - ஒவ்வொரு விரல் விடுவதால் நேர், நேர்
  (நேர் நேர் வருமிடத்தில் தேமா எழுத வேண்டும்.)
- புளி மா - இரண்டுவிரல்கள் மற்றும் ஒருவிரல் விடுவதால் நிரை,நேர்.
  (நிரை நேர் வருமிடத்தில் புளிமா எழுத வேண்டும்.)
- கரு விளம் - இரண்டு இரண்டு விரல்கள் விடுவதால் நிரை, நிரை
  (நிரை, நிரை வருமிடத்தில் கருவிளம் எழுத வேண்டும்.)
- கூ விளம் - ஒருவிரல் மற்றும் இரண்டு விரல்கள் விடுவதால் நேர்,நிரை
  (நேர் நிரை வருமிடத்தில் கூவிளம் எழுத வேண்டும்.)
- மூன்றாவது சீர் திருக்குறளில் நேராக மட்டும் வருவதால் **மூன்றாவதாக** ஒரு **நேர்** வந்தால் அசையில் **நேர்** எழுதி வாய்பாட்டில் **காய்** என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

<u>**ஏழாவது சீரில்**</u>

| | |
|---|---|
| நாள் | இதில் ஒரு விரல் மட்டும் விடுவதால் நேர் |
| மலர் | இதில் இரண்டு விரல்களை விடுவதால் நிரை . |
| கா சு | இதில் இருகை முறையே ஒவ்வொரு விரல்களை விடுவதால் நேர், நேர் (நேர்பு) |
| பிறப் பு | இதில் இருகை முறையே இரண்டு விரல்கள் மற்றும் ஒரு விரல்கள் விடுவதால் நிரை,நேர் (நிரைபு) |

**வெண்பா பொதுவிலக்கணம்**

- அமைவு - ஈற்றடி முச்சீராகவும் ஏனையடி நாற்சீராகவும் வரும்.
- சீர் - ஆசிரிய உரிச்சீர் (மாச்சீர், விளச்சீர்), காய்ச்சீர். ( பிறச்சீர் கலவாது)
- தளை - இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை. (வேற்றுத்தளை கலவாது)
- ஓசை - செப்பலோசை
- அடி - அளவடி (நேரடி)
- அடிவரையறை - இரண்டடி சிறுமை , பன்னிரண்டடி பெருமை
- சிறப்பு - ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற நான்கனுள் ஏதேனும் ஒன்றில் முடியும்.

**ஆசிரியப்பா பொதுவிலக்கணம்**

- அமைவு - ஈற்றயலடி முச்சீராகவும் ஏனையடி நாற்சீராகவும் வரும்.
- சீர் - ஆசிரிய உரிச்சீர் (மாச்சீர், விளச்சீர்), காய்ச்சீர்.
- தளை - நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை
  (பிறத்தளைகள் கலந்து வரும். ஆனால், வஞ்சித்தளைகள் மட்டும் வாரா)
- ஓசை - அகவலோசை
- அடி - அளவடி (நேரடி)
- அடிவரையறை - மூன்றடி சிறுமை , பாடுவோனின் உள்ளக் குறிப்பு பெருமை
- சிறப்பு - ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**பகுதி – IV (வினா எண்கள் 38-42)**

**மொழிபெயர்க்க**

1. Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture . Sangam literature shows that Tamils were best in vulture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our vulture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

தமிழர் பண்பாடு

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே, என் பெயர் இளங்கோவன். நான் பத்தாம் வகுப்பு படித்துவருகிறேன். நான் நமது தமிழ் பண்பாடு குறித்து ஒரு சில சொற்கள் சொல்ல வருகின்றேன். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்தவர்கள் என்று , சங்க இலக்கியம் தெரிவிக்கின்றன. மொழிக்கு இலக்கணத்தை வரையறுத்த தமிழர்கள், வாழ்க்கையின் இலக்கணத்தையும் வரையறுத்துள்ளனர். தமிழ்பண்பாடு இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து என உலகலாவிய நிலையில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையிலும் வேரூன்றி இருக்கிறது. நமது பண்பாடு மிகவும் பழமையானது. எனினும், ஒவ்வொரு நாளும் புதிப்பிக்கப்பட்டு வருகிறது. நமது பண்பாடு பற்றி நாம் பெருமைப்படுவோம் . அனைவருக்கும் நன்றி.

2. The golden sun gets up early in the morning and stars it bright rays to fade away the dark. The milky clouds start their bantering wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

இயற்கையுடன் விடியல்

பொன்னிற சூரியன் அதிகாலையில் தோன்றிய பிரகாசமான கதிர்களைக் கொண்டு உலகை இருளைப் போக்குகிறது. மேகங்கள் அளையத் தொடங்குகின்றன. வண்ணமயமான பறவைகள் தங்கள் காலை இசையால் மகிழ்ச்சி அடைகின்றன . அழகிய பட்டாம்பூச்சிகள் மலர்களைச் சுற்றி நடனம் ஆடுகின்றன. மலர்களின் வாசனை, தென்றல் காற்றை நிரப்புகிறது. காற்று எல்லா இடங்களிலும் வீசி மகிழ்ச்சியூட்டுகிறது.

3. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela

நீங்கள் ஒரு மொழியில் மனிதரிடம் பேசினால், அது அவரின் அறிவைச் சென்றடைவதால் அவர் புரிந்துகொள்வார். நீங்கள் அவருடைய சொந்த மொழியில் பேசினால், அது அவருடைய இதயத்தைத் தொடும். – நெல்சன் மண்டேலா.

4. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown

மொழி என்பது பண்பாட்டின் வழிகாட்டி. அது மக்கள் எங்கே இருந்து வந்தார்கள், எங்கே செல்கிறார்கள் என்பதைக் கூறும். – ரீட்டா மே பிரவுன்.

5. Malar: Devi, switch off the lights when you leave the room.

Devi: Yeah. We have to save electricity.

Malar: Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.

Devi: Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

Malar: I have read some other countries are going to launch these types of illumination satellites near future.

Devi: Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

மலர்: தேவி, நீ அறையை விட்டு வெளியே செல்லும்முன் விளக்கை அணைத்துவிட்டுச் செல்

தேவி: ஆம். நாம் மின்சாரத்தைச் சேமிக்கவேண்டும்.

மலர்: இரவில் நம் வீதிகளை ஒளிரச் செய்வதற்காக, நாடு நிறைய மின்சாரத்தைச் செலவிடுகிறது.

தேவி: யாருக்குத் தெரியும். எதிர்காலத்தில் வீதிக்கு வெளிச்சம் தர செயற்கை நிலவையும் நட்சத்திரங்களையும் உருவாக்கலாம்.

மலர்: சில நாடுகள், செயற்கை நிலவையும் நட்சத்திரங்களையும் உருவாக்கப் போவதாக நான் படித்திருக்கிறேன்.

தேவி: மகிழ்ச்சியான செய்தி. நாமும் இது போல செயற்கை நிலவை உருவாக்கினால் மின்தடையால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கலாம்.

6. Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Raamayana, Mahabhartha and other ancient puranas . There are more songs in the play with dialogues improvised by the aritists on the spot. Fifteen to twenty atcors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

கூத்து

தெருக்கூத்து என்பது தெருக்களில் நடத்தும் கலை நிகழ்ச்சி கிராமப்புற கலைஞர்கள் நடத்துவர். இராமாயணம் , மகாபாரதம் கதைகள் இடம்பெறும். இருபது முதல் முப்பது நடிகர்கள் குழுவாக இருப்பர். கிராமப்புறத்தில் சொந்தக் குரலில் பாடுவர். இவை பிரபலம்.

7. Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamil.

மருத நிலமும் விவசாயமும்

சங்க காலத்தமிழர் நிலத்தினை ஐவகையாகப் பிரித்தனர். அதில் மருதநிலமானது விவசாயத்திற்கு ஏற்றததும் வளமானதும் ஆகும். இங்கு விவசாயிகள், விவசாயம் செய்ய சூரிய ஒளி, பருவ மழை , மண்வளம் ஆகியவற்றை நம்பி இருக்கின்றனர். இயற்கையின் இக்கூறுகளில் சங்ககாலத் தமிழர், சூரிய ஒளிக்கு முதன்மை கொடுத்தனர்.

8. Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the Street of the city, ‘’He is helped whom God helps”. The second beggar used to cry, “He is helped who the king helps”. This was repeater by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him . The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thinking God he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar’s behavior, the Emperor summoned him to his presence and asked him, “What have you done with the loaf of bread that I had send you lately? “The man replied, “I sold it to my friend, because it was heavy and did not seem well baked’’ Then the Emperor said, “Truly he whom God helps is helped Indeed, “and turned the beggar out of his palace.

முன்பு ஒரு நாள் ரோம் நகரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். முதல் பிச்சைக்காரன் கடவுள் எப்படியாவது யார் மூலமாவது எனக்கு உதவுவார் என்று கண்ணீர் விட்டான். இரண்டாம் பிச்சைக்காரன் மன்னனைப் புகழ்ந்து பாடினால் மன்னன் காப்பான் என்றான். தினமும் இருவரும் இப்படியே சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ரோம் அரசர் தன்னைப் பற்றிப் பேசிப் புகழ்ந்து எப்படியாவது தான் பாதுகாப்பேன் என்று நம்புகிற பிச்சைக்காரனுக்கு உதவ விரும்பினார். நீளமான ரொட்டிப் பொட்டலத்தில், ரொட்டித் துண்டுகள் நடுவே சில பொற்காசுகளை வைத்து கொடுத்தான். இரண்டாம் பிச்சைக்காரன் ரொட்டித்துண்டு பொட்டலம் கனமாக இருக்கிறது; விற்றால் பணம் சம்பாதிக்கலாம் என்று முதல் பிச்சைக்காரனான நண்பனிடம் விற்று விடுகிறான். இப்படியே ரொட்டித் துண்டை தினமும் விற்கிறான். அதனை வாங்கும் முதலாம் பிச்சைக்காரன் ரொட்டித் துண்டை வெட்டி பார்த்தால் தினமும் பொற்காசுகள் மின்னின. தினமும் கடவுளுக்கு நன்றி சொல்லி பொற்காசுகளை எடுத்து வைத்து சேர்த்து வைத்தான். பிச்சை எடுப்பதை நிறுத்தி விடுகிறான். இரண்டாம் பிச்சைக்காரன் தொடர்ந்து வீதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டே இருக்கிறான். மன்னன் அவனை அழைத்து நான் கொடுத்த ரொட்டிப் பொட்டலங்களை என்ன செய்தாய் என்று கேட்டார். அது எடுத்துச் செல்ல கனமாக இருந்தபடியால் என் பிச்சைக்கார நண்பனிடம் அதனை விற்று விட்டேன் என்றான். மன்னர் தனக்குள் நினைத்துக் கொண்டார். “கடவுள் தன்னைத் தேடுபவர்களுக்கு உண்மையிலே யார் மூலமாவது உதவுகிறார்” இரண்டாம் பிச்சைக்காரனிடம் திரும்பி, சரி! நீ போகலாம் என்று அரண்மனையில் இருந்து வெளியேறச் சொன்னார்.

9. Education is what remains after one has forgotten what one has learned in School.

– Albert Einstein

ஒருவன் பள்ளியில் கற்றவற்றுள் மறந்துவிட்டவைபோக எஞ்சியிருப்பதே கல்வியாகும்.- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

10. Tomorrow is often the busiest day of the week. – Spanish proverb

    வாரத்தின் நாள்களுள் நாளை என்பதே மிகவும் பரபரப்பான நாள். – ஸ்பானிஷ் பழமொழி.

11. It is during our darkest moments that we must focus to see light. – Aristotle

    வாழ்வின் மிக இருண்ட தருணத்தில்தான் நாம் வெளிச்சத்தைக் காணக் கவனம் செலுத்த வேண்டும். – அரிஸ்டாட்டில்.

12. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts.

    - Winston Churchill.

    வெற்றி என்பது இறுதி அன்று. தோல்வி என்பது அழிவு அன்று; தொடர்ந்து முயலும் துணிவே சிறப்பானது. – வின்ஸ்டன் சர்ச்சில்.

**1. வாழ்த்து மடல் எழுதுக.**

**மாநில அளவில் நடைபெற்ற' மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**மாநில அளவில் நடைபெற்ற' மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி முதல் பரிசு பெற்ற நண்பனைப் பாராட்டிக் படித்தளிக்கும் வாழ்த்துமடல்!

குன்னம்,
11.05.2019.

அன்பு நண்பனே!

முதலில் உமக்கு எம் வாழ்த்துகள்!

சென்ற வாரம் நடந்த மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி முதல் பரிசு பெற்றமமையைக் கண்டு வியந்தேன். பாராட்டுகள்!

பள்ளியில் நடைபெறும் கட்டுரைப் போட்டியிலேயே பொருள் பொதிந்த உன் கட்டுரையும், அதில் உன் மொழிநடையையும் பற்றி நம் ஆசிரியர்கள் வியந்ததை கூறியதை எண்ணி இப்போதும் நான் நினைத்துப் பார்த்து மகிழ்கிறேன்.

உன் கையெழுத்து உன் தலையெழுத்தை மாற்றும் என்று முன்பு நான் நினைத்ததை இந்த ஒரு நிகழ்விலேயே நிரூபித்து விட்டாய்!

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதையும் நீ மெய்ப்பித்துவிட்டாய்!

நீ உன் முயற்சிக்கு தகுந்த பரிசினை, இப்போது பெற்றுள்ளதைப் போலவே இன்னும் பல நிலைகளில், பல பரிசுகளைப் பெற நான் மனதார வாழ்த்துகிறேன்.

உன் இக்கட்டுரைப் பணி தொடரட்டும்!

என்றும் அன்புடன்
நிறைமதி.

**2. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் உரை எழுதுக.**

- அன்பும் பண்பும் நிறைந்த ஆன்றோர், சான்றோர் அனைவருக்கும் வணக்கம்.
- கம்பராமாயண பாடல்கள் சந்தநயம் மிக்கவை.

- கம்பனுக்கு நிகர் கம்பனே ஆவார்.
- ”தாதுகுசோலை தோறும் எனத் தொடங்கும் பாடலில் ,இயற்கை காட்சிகளைக் கலை நிகழ்வாகக் காட்டுகிறான் கம்பன்.
- “வெய்யோன் ஒளி எனத் தொடங்கும் பாடலில் , இராமனின் மாநிற மேனியை **மை,மரகதம்,கார்மேகம்,நீலக்கடல்** என புகழ்ந்து இறுதியில் “**ஐயோ”** என்னவென்று புகழ முடியாமல் புகழ்ந்து வியக்கிறான் கம்பன். மேலும்,
- “உறங்குகின்ற கும்பகன்ன”எனத் தொடங்கும் பாடலில் , தூங்கும் கும்பகர்னனை எழுப்புவதிலும் சந்தநயம் மிகுந்து சிறக்கிறான் கம்பன்.

**3. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் “உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் “ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியர்க்கு கடிதம் எழுதுக.**

அனுப்புநர்

10024,
24, மேட்டு தெரு,
கீழ்மாம்பட்டு.

பெறுநர்

ஆசிரியர்,
தினமணி அலுவலகம்,
சென்னை – 6000005.

ஐயா ,

வணக்கம்.

பொருள்: பொங்கல் இதழில் எம் கட்டுரை வெளியிட வேண்டுதல் – சார்பு.

**********

உழவுத் தொழிலின் மேன்மையையும் அவசியத்தையும் வலியுறுத்தி ”உழவுதொழிலுக்கு வந்தனை செய்வோம்” என்ற கட்டுரையை நான் எழுதியுள்ளேன். அக்கட்டுரையைத் தங்கள் பொங்கல் மலரில் வெளியிட பணிவுடன் வேண்டுகிறேன்.

நன்றி .

இடம்: கீழ்மாம்பட்டு,
நாள்: 25/11/2019.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
10024.

உறை மேல் முகவரி

பெறுநர்:

ஆசிரியர்,
தினமணி அலுவலகம்,
சென்னை – 6000005.

**4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக .**

**மகளிர் நாள்விழா**

**இடம்: பள்ளிக் கலையரங்கம் நாள்:08.03.2019.**

**கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.**

அனைவருக்கும் வணக்கம்.

இன்று 08.03.2019 - திங்கள் கிழமை,

நேற்று நம் பள்ளியில் நடந்த மகளிர் நாள்விழா பற்றிய அறிக்கை

- மகளிர் நாள் விழாவாகிய நேற்று, பள்ளி கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடியிருந்தனர்.
- தலைமை ஆசிரியர் மா. முத்து அவர்கள் வரவேற்றார்.
- இதழாளர் கலையரசி சிறப்புரையாற்றினார்.
- சக ஆசிரியர்கள் வாழ்த்துரை வழங்கினர்.
- மாணவ தலைவர் நன்றியுரை வழங்கினார்.
- நாட்டுப் பண்ணோடு நிகழ்வு இனிதாக நிறைவுற்றது.

நன்றி.

**5. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவணம் செய்யும்படி மின்வாரிய அலுவலகத்துக்குக் கடிதம் எழுதுக.**

அனுப்புனர்

அஅஅ,
காந்திநகர் ,
பேரணி, விழுப்புரம் மாவட்டம் .

பெறுநர்

மின்வாரிய அலுவலர்,
மின் வாரிய அலுவலகம் ,
விழுப்புரம் மாவட்டம் .

ஐயா,

வணக்கம்.

பொருள்: மின்விளக்குப் பழுதுபார்க்க ஆவணம் செய்ய வேண்டுதல் – சார்பு.

***********

எங்கள் ஊரில் தெரு மின்விளக்குகள் சில நாட்களாக எரியாமல் பழுதடைந்துள்ளன. எங்கும் ஒரே இருள் மயமாக உள்ளது. இருள் சூழ்ந்து இருப்பதால் சிறியவர் முதல் பெரியவர் வரை நடந்து செல்ல சிரமப்படுகின்றனர். மேலும் சமூக விரோதச் செயல்கள் நடைபெற ஏதுவாக உள்ளது. எனவே, பழுதுபட்ட மின்விளக்குகளைச் சரிசெய்து விளக்குகள் எரிய ஆவண செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடம் : பேரணி, இப்படிக்கு,

நாள் : 09.11.2019. தங்கள் உண்மையுள்ள,

அ அ அ.

உறைமேல் முகவரி

பெறுநர்

மின்வாரிய அலுவலர்,
மின் வாரிய அலுவலகம் ,
விழுப்புரம் மாவட்டம்.

**6. உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கி தருக.**

- அன்பார்ந்த மாணவர்களே! நாட்டு நலப்பணித் திட்ட தொடக்க விழாவில் உமக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமை கொள்கிறேன்.
- மாணவப் பருவத்திலே உங்களுக்கு நாட்டுப்பற்று சமூக அக்கறை தொண்டுள்ளம் ஆகியவற்றை வளர்ப்பதற்கே நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடத்தப்படுகிறது.
- உங்கள் பள்ளியில் பயிலும் மற்ற மாணவர்களுக்குக் கிடைக்காத பெரிய வாய்ப்பு இங்கு கூடி இருக்கின்ற நீங்கள் பெற்றுள்ளீர்கள் அதற்காக உங்களை வாழ்த்துகிறேன். எத்தனையோ மாணவர்கள் எப்படியெல்லாமோ பொழுதைப் போக்கி கொண்டிருக்க நீங்கள் பயனுள்ள நற்செயலைப் பாங்குடன் செய்ய வந்திருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.
- சமுதாயத்தின் விடிவிளக்குகளாய் சமூக அக்கறை கொண்ட ஆர்வலர்களாய் மனிதநேயம் மிக்கவர்களாய் மாறுவீர்கள் என்பதில் ஐயமில்லை.
- இந்த நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடைபெறும் நாட்கள் முழுவதும் முழு மனதுடன் செயல்பட்டு இச்சமுதாயத்தின் செயல்வீரர்களாய் நிவீர் திகழ வாழ்த்தி பாராட்டி மகிழ்கிறேன்.

நன்றி.

**7. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் , விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.**

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் , விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம்.

விடுநர்

நிறைமதி,
25, பாரதியார் தெரு,
குன்னம், விழுப்புரம் மாவட்டம்.

பெறுநர்

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
விழுப்புரம்.

மதிப்பிற்குரியீர்,

வணக்கம்.

பொருள் : உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் , விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து புகார் அளித்தல் – சார்பு.

**************

நேற்று நாங்கள் உறவினரைக் காண்பதற்காகத் திண்டிவனம் சென்றிருந்தோம். அங்கு நாங்கள் XXXXX என்ற பெயர் கொண்ட உணவு விடுதியில் மதிய உணவு உண்டோம். அவ்வுணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவானது தரமற்றதாகவும் விலைக்கூடுதலாகவும் இருந்தது.

அதைப் பற்றி விடுதி உரிமையாளரிடம் கேட்டபோது சாலையோர உணவு விடுதியில் உணவு இப்படித்தான் இருக்கும் என்று சாதாரணமாகக் கூறினார்.

எனவே தாங்கள், அவ்வுணவு விடுதியைச் சோதனை செய்து, எங்களைப் போன்று பயணம் செய்வோர் பாதிப்படையாத வண்ணம் காக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இடம் : திண்டிவனம், இப்படிக்கு,

நாள் : 05.03.2019. தங்கள் உண்மையுள்ள,

நிறைமதி.

இணைப்பு – உணவுக் கட்டணத்தொகை ரசீது.

உறைமேல் முகவரி

பெறுநர்:

உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்பு ஆணையர் அலுவலகம்,
விழுப்புரம்.

**8. பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடுவிழாவிற்கு வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் ' பசுமைப் பாதுகாப்பு படை' சார்பாக நன்றியுரை**

- எங்கள் பள்ளியில் பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழாவிற்கு வருகைத்தந்திருக்கும் அனைவருக்கும் முதற்கண் அன்புகலந்த வணக்கம்.
- "மரம் இயற்கையின் வரம்" என்பதை உணர்ந்து, பல வேலைகளுக்கு மத்தியிலும் இங்கு வந்து மரக்கன்றுகளை நட்டு சிறப்பித்த ஊர்ப்பொதுமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
- இவ்விழா இனிதே நடைபெற எங்களை வழிநடத்திய தலைமையாசிரியருக்கு பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
- இவ்விழாவினைச் சிறப்பிப்பதற்கு வருகைத் தந்து, சிறப்புரையாற்றிய பெற்றோர் – ஆசிரியர் கழகத்தினருக்குப் பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
- இப்பள்ளியின் இருபால் ஆசிரியப் பெருமக்களுக்கும் , கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவ நணபர்களுக்கும், அதை அமைதியாக கண்டுகளித்த மாணவ நண்பர்களுக்கும் பசுமைப் பாதுகாப்பு படையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவருக்கும் நன்றி!

**9. மலர்ந்தும் மலராத பாதிமலர் போல்**
**வளரும் விழி வண்ணமே – வந்து**
**விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**நதியில் விளையாடி கொடியில் தலைசீவி**
**நடந்த இளந் தென்றலே – வளர்**
**பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு**

**பொலிந்த தமிழ் மன்றமே. - கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.**

- மலர்ந்து மலராத பாதி மலர்போல என்ற இப்பாடலில், இனிய தென்றல் காற்றானது மணமிக்க மலர்களில் உள்ள வாசனை உட்கொண்டு உலா வருவதோடு, நதியில் விளையாடி அதன் குளிர்ச்சியைப் பெற்று பூங்கொடியில் தலைசீவி அதன் மலரில் உள்ளத் தேனை நுகர்ந்து பல மலை முகடுகளில் நடந்து வரும் என்று தென்றல் காற்றின் பெருமையைக் கண்ணதாசன் அழகுறப் பாடுகிறார்.
- மேலும் இப்பாடலில், தன் தங்கையை அண்ணன் மலர்ந்து மலராத பாதி மலராகவும், விடிந்தும் விடியாத காலைப் பொழுதாகவும், விளைந்த கலை அன்னமாகவும் நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலாகவும், பொதிகை மலையில் தோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமாகவும் காண்பதாகப் பாடுகிறார்.
- இப்பாடல் அண்ணன் தங்கையின் உண்மையான அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தும் இனிய பாடலாக அமைந்துள்ளது.
- பாசத்தின் வெளிப்பாடு கவிதையாகப் பிறந்துள்ளது.


**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**

1.



எந்திரங்களை அடக்கி ஆண்டவன்
இன்று, எந்திரமாய் இயங்குகிறான்.
மாட்டிற்கு பூட்டிய மூக்கனாங்கயிறு
இன்று,
மனிதனுக்குப் பூட்டிவிட்டது திறன்பேசி.

2.



**மரங்களை வெட்டிவிட்டு**
**மரம் பற்றி பாடம் படித்தால்**
**பயனொன்றுமில்லை...**
**மரம், மனிதனை வளப்படுத்தும்**
**மரம் நட்டு வளம் பெறுவோம்.**

3.



- ❖ இந்தப்படம் கருப்பு வெள்ளை நிறமுடையது
- ❖ இந்தப்படம் அழகாக உள்ளது
- ❖ இந்த படம் சிந்தனையைத்தூண்டுகிறது
- ❖ இந்தப்படம் கற்பனை ஆற்றலை வளர்க்கிறது.
- ❖ இந்தப்படம் நாட்டுபுறக்கலையை வளர்க்கிறது
- ❖ இந்தப்படம் இயல், இசை, நாடக, உத்தியைக்கொண்டது.

4.




- ❖ இருநாட்டு மன்னர்கள் போர் செய்கின்றனர்
- ❖ காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர்.
- ❖ மன்னின் நாட்டாசைக்காகத் வாலாலும் வேலாலும் தன் இன்னுயிரை மாய்த்துக்கொள்ள புறப்படுகின்றனர்.
- ❖ அன்று ஆயுதத்தால் அழிந்(த்)தனர்; இன்று அறிவியலால் அழி(க்)கின்றனர்.

5.



- ❖ இந்தப்படம் அழகாக உள்ளது
- ❖ இந்த படம் சிந்தனையை தூண்டுகிறது
- ❖ இந்தப்படம் கற்பனை ஆற்றலை வளர்கிறது
- ❖ இந்தப்படம் இயற்கையாக உள்ளது
- ❖ உழவுத் தொழிலை நினைவூட்டுகிறது.

- ❖ உழவர் வாழ்க!
- ❖ உழவுத் தொழில் வளர்க!

6.



அன்று வள்ளல் பேகன் கொடுக்கின்ற போது மடைமைத்தன்மையோடு இருந்தானாம். இன்று முகிலன் தெருவோர பிச்சைக்காரனுக்குச் சொற்பகாசு கொடுப்பதையும் படம் (செல்பி) எடுத்து படம் காட்டுகிறான்..

அன்று வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியாக்கூடாது என்று நினைத்தனர். இன்று விளம்பரத்திற்காகவே கொடுப்பது (கொடுப்பவர்) போல் நடிக்கின்றனர்.

7.



- ❖ செல்வத்தின் பயன் இல்லாதோர்க்கும் இயலாதோர்க்கும் கொடுத்தலே.
- ❖ கொடுக்காவிடினும் கொடுப்பவனையும் கெடுக்காதே!
- ❖ அன்று வள்ளல்கள் தகுதி உடையவன், முன் வந்தவன், தெரிந்தவன் முதலியவற்றைப் பார்த்து கொடுக்கவில்லை.
- ❖ இன்று சொற்ப காசுக்கெல்லாம் பாத்திரம் அறிய பார்க்கின்றனர்.

8.



உலகை உற்றுநோக்கும் போதும்

சிந்திக்கும் போதும்

அறிவுப்பூட்டை திறக்காத மனிதா!

ஏட்டைப் புரட்டும்போதுமட்டும்

ஏன் திறக்கிறாய் ?
மூடப்பட்ட உன் அறிவுப்பூட்டு
சுயச்சிந்தனையையும் அனுபவத்தையும் பெறத் தவறிவிட்டது!
இவையிரண்டும்  இல்லாத ஏட்டுக்கல்வி
கலப்பை இல்லாத ஏர்ப்போன்றது
என்பதை மட்டும் மறந்துவிடாதே!

9.



தனி மனித ஒழுக்கமின்மையாலும்  சுயநலத்தாலும்,
காற்றை மாசுப்படுத்தி,
போதாத குறைக்கு
நெகிழி பொருள்களால் மரத்தையும் அழித்து,
அறிவியலின் வேகத்தால்
இயற்கையாய் இருந்ததையெல்லாம் தொலைத்து,
சொற்பக் காற்றுக்காகத்  தொப்பையைப் போலவே
இயற்கை காற்றுருளையை எப்போதும் சுமக்கிறான்.

10.



நாய் நன்றியுள்ளது.
கொடுப்பவரை எப்போதும் மறக்காது.
ஏழைகள்தான் உயிரினங்களுக்கு உதவ நினைக்கின்றனர்.
இருப்பவர்கள் யாருக்குமே கொடுப்பதில்லை.
இந்த பொருளில்லாத சிறுமிதான் உண்மையான பணக்காரி.
கொடுப்பதற்குப் பணம் அவசியமில்லை; குணம்தான் தேவை.

11.



**கவிதையைத் தொடர்க.**

**தண்ணீர் நிறைந்த குளம்**

**தவித்தபடி வெளிநீட்டும் கை**

**கரையில் கைபேசி படமெடுத்தபடி**

அழிக்கத்துடிக்கும் காலன் கையில்,

சுயநலக் கலாச்சாரம்  பையில்

அழிகின்றது  மனித நேயம்.

1. **தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாகக் நீங்கள் செய்ய விரும்பவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.**

பிறந்தநாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்
எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.

1. எங்கள் ஊரில் கரகாட்டம் நிகழ்த்த முனைவேன்
2. எங்கள்; பள்ளியில் புலியாட்டம் நிகழ்த்த முனைவேன்
3. ஒயிலாட்டதில் இருபாலருக்கும் வாய்ப்பு அளிப்பேன்.
4. எங்கள் பள்ளியில் தெருக்கூத்து நடத்துவேன்
5. “தப்பு ஆட்டம்” அறிமுகம் செய்வேன்

2. **பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின்  நயத்தை விளக்குக.**

| **மெய்கீர்த்தி பாடல்** | | **நயம்** |
|---|---|---|
| ❖ யானைகள் பிணிக்கப்படும் | - | மக்கள் பிணிப்பதில்லை |
| ❖ சிலம்புகள் புலம்பும் | - | மக்கள் புலம்பல் இல்லை |
| ❖ மாங்காய் வடுப்படும் | - | மக்கள் வடுப்படுவதில்லை |
| ❖ வண்டுகள் கள் உண்ணும் | - | மக்கள் கள் உண்பதில்லை |
| ❖ புனல் அடைக்கப்படும் | - | மக்கள் அடைக்கபடுவதில்ல |

1. **நூலக உறுப்பினர் படிவம்**

விழுப்புரம் மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய/கிளை/ஊர்ப்புற நூலகம் மயிலம்

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்: 1105 உறுப்பினர் எண்: 052016

1. பெயர் : முகிலன்
2. தந்தை பெயர் : எழிலரசன்
3. பிறந்த தேதி : 16.10.2005
4. வயது : 14
5. படிப்பு : பத்தாம் வகுப்பு
6. தொலைப்பேசி எண் : 8778115678
7. அஞ்சல் முகவரி : 27, பாரதித் தெரு, குன்னம்,

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) வானூர், விழுப்புரம் மாவட்டம்,
604304.

நான் மயிலம் நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ 500/- சந்தா தொகை ரூ 200/- ஆக மொத்தம் ரூ 700/- ரொக்கமாகச் செலுத்துகிறேன்.

நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : மயிலம், தங்கள் உண்மையுள்ள

நாள் : 14/11/2019.

திரு/ திருமதி/ செல்வி/ செல்வன் முகிலன் அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவலக முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

2. **மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

**சேர்க்கை எண் :** **தேதி :** **வகுப்பும் பிரிவும்:**

1. மாணவ / மாணவியின் பெயர் : தமிழரசன்
2. பிறந்த தேதி : 16/10/2005
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் : எழிலரசன்
5. வீட்டு முகவரி : 278, பாரதித் தெரு, குன்னம்,
   வானூர், விழுப்புரம்.
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு: பத்தாம் வகுப்பு ( 10 )
7. பயின்ற மொழி : தமிழ்
8. இறுதியாகப் படித்த பள்ளியின்
   முகவரி : அரசு உயர்நிலைப் பள்ளி,
   குன்னம்.

9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : 482

| தேர்வின் பெயர் | பதிவெண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வு | 142841 மார்ச்- 2019 | தமிழ் | 98 |
| | | ஆங்கிலம் | 94 |
| | | கணக்கு | 90 |
| | | அறிவியல் | 100 |
| | | சமூக அறிவியல் | 100 |
| | | மொத்தம் | 482 |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம், இணைக்கப்பட்டுள்ளது.

11. தாய்மொழி : தமிழ்

12. சேர விரும்பும் பாடப்பிரிவும்
பயிற்று மொழியும் : கணிதம் – உயிரியல், தமிழ்

மாணவ/மாணவியின் கையெழுத்து

**3. பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்**

1. மாணவ / மாணவியின் பெயர் : தமிழரசன்
2. பாலினம் : ஆண்
3. பிறந்த தேதி : 16/10/2005
4. தேசிய இனம் : இந்தியன்
5. பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் : எழிலரசன்
6. வீட்டு முகவரி : 278, பாரதித் தெரு, குன்னம்,
வானூர், விழுப்புரம்.
7. தொலைப்பேசி/அலைப்பேசி எண் : 8778115678
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் : 482
9. தாய்மொழி : தமிழ்
10. பயின்ற மொழிகள் : தமிழ்,ஆங்கிலம்.
11. தட்டச்சு : இளநிலை தட்டச்சு ( ஆங்கிலம்)
12. கணினி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் கணிப்பொறி உதவியாளர் பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

**4. தமிழ்நாடு விளையாட்டு மேம்பட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | | |
|---|---|---|
| 1. மாணவ / மாணவியின் பெயர் | : | தமிழரசன் |
| 2. பாலினம் | : | ஆண் |
| 3. பிறந்த தேதி | : | 16/10/2005, 14 |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. பெற்றோர்/ பாதுகாவலர் பெயர் | : | எழிலரசன் |
| 6. இரத்த வகை | : | O+ |
| 7. உயரம் மற்றும் எடை | : | 152 செ.மீ, 50 கி.கி. |
| 8. வீட்டு முகவரி | : | 278, பாரதித் தெரு, குன்னம், வானூர், விழுப்புரம். |
| 9. தொலைப்பேசி/அலைப்பேசி எண் | : | 8778115678 |
| 10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு | : | பத்தாம் வகுப்பு ( 10 ) |
| 11. பள்ளியின் முகவரி | : | அரசு உயர்நிலைப் பள்ளி, குன்னம். |
| 12. சேர விரும்பும் விளையாட்டு | : | பூப்பந்து விளையாட்டு |

சேர்க்கை எண் : மாணவரின் கையொப்பம்

இடம் : குன்னம்,

நாள் : 15/11/2019.

பெற்றோர் / பாதுகாவலரின் கையொப்பம்

## பகுதி – V

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.**

காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கு இடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவாயினும், தமிழ்மட்டும் அதில் தலைச்சிறந்தது.

**பயிர்வகைச் சொற்கள்**

தமிழ்சொல்வளத்தைப் பலத்துறைகளிலும் காணலாம். ஆயினும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைத் தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி எனப் பல சொற்களில் தமிழர்கள் வழங்குகின்றனர். தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்குக் கவை, கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு எனப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**இலை, கொழுந்துகளின் பெயர்கள்**

தாவரங்களின் வகைகளுக்கும் பிரிவுகளுக்கும் ஏற்ப இலை, தாள், தோகை, ஓலை என்று பெயரிட்டு வழங்கினர். காய்ந்த இலையை சருகு எனவும் காய்ந்த தாளையும் தோகையையும் சண்டு என்றும் வழங்கினர்.

மேலும், தாவரங்களின் நுனிப்பகுதியை துளிர், தளிர், முறி, கொழுந்து, குருத்து, கொழுந்தாடை என்றும் வழங்கினர்.

**பூ, பிஞ்சு, குலை**

பூவின் பல்வேறு நிலைகளை அரும்பு, போது, மலர், வீ, செம்மல் முதலியப்பெயரால் வழங்கினர். பிஞ்சினை, பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக்குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல் முதலிய பெயரால் வழங்கினர். மேலும், குலைகளை கொத்து, குலை, தாறு, கதிர், அலகு, சீப்பு, குரல் முதலிய பெயரால் வழங்கினர்.

**கெட்டுபோன காய்கனி, பழத்தோல், மற்றும் மணிவகை**

கெட்டுபோன காய்கனியைச் சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு முதலிய பெயரால் அழைப்பர். அதுபோலவே பழஙகளின் மேல் தோலையும் தொலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்பை முதலிய பெயரால் அழைப்பர். மணி வகைகளை, கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை முதலிய பெயரால் அழைப்பர்.

**இளம் பயறு வகை**

தாவரத்தின் இளம் பயறு வகையினை நாற்று, கன்று, குருத்து, பிள்ளை, குட்டி, மடலி, வடலி, பைங்கூழ் முதலிய பெயரால் அழைப்பர்.

2. **மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

❖ சுந்தரனார், தாம் இயற்றிய மனோன்மணியத்தில் கடலை ஆடையாக உடுத்திய பூமித்தாய், பாரத கண்டத்தை அழகிய முகமாகவும், தக்காணத்தை நெற்றியாகவும், தமிழகத்தை அந்த நெற்றியில் வைத்த திலகமாகவும், அந்தத் திலகத்தின் மணமாகத் தமிழையும் உருவகப்படுத்திப் தமிழ்த்தாயின் சிறப்பைப் பாடியுள்ளார்.
❖ பெருஞ்சித்திரனார் தமிழை, கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நின்று, நிலைத்து மண்ணுலகம் போற்ற வாழும் பேரரசி என்கிறார். முன்னைக்கும் முன்னையாய் முகிழ்த்த தமிழ் என்றார்.
❖ சுந்தரனார் அன்னைத் தமிழின் சீரிளமையைத் திறம் வியந்து வாழ்த்துத்துகிறார்.
❖ பெருஞ்சித்திரனாரோ தமிழை, முன்னும் நினைவால் முடி தாழ வணங்கி வாழ்த்துவதாகக் கூறுகிறார்.
❖ இருவருமே தமிழ்த்தாயின் பெருமைகளைக் காலந்தோறும் உணர்ந்து போற்றியுள்ளனர். தமிழன்னைக்கு அணிகலன்களைப் பூட்டி அழகு பார்த்துள்ளனர்.

3. **ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிபடுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

**விருந்தோம்பல்**

தமிழரின் தொன்மை, வீரம் , கொடை முதலான பண்புகளில் ஒன்றாகும் விருந்தோம்பல் பண்பு. நமது பண்பாட்டின் அடையாளமாகவும் கணவரும் மனைவியும் ஆற்ற வேண்டிய கடமையாகவும் விருந்தோம்பல் பண்பு பண்டைய காலத்தில் கருதப்பட்டது.

**இலக்கியத்தில் விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது விருந்தினரை உபசரித்து பாதுகாத்தல் ஆகும். போக்குவரத்து குறைந்திருந்த அக்காலத்தில் வணிகமுறையாக வருபவர்களுக்குப் பசியை நீக்க உணவு கொடுத்து உபசரிப்பது விருந்து. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் இந்நான்கு நிலத்திற்கும் உரிய உணவு முறைகளும் உபசரிப்பு முறைகளும் இக்காலத்தில் மாற்றம் பெற்றுள்ளன. முன்னோர், புதியவர்களுக்கு உணவு வழங்குவதைக் கொள்கையாக கொண்டிருந்தனர். வள்ளுவரும்

இன்முகத்தோடு பரிமாற வேண்டும் என்பார். மணிமேகலையும் அறத்திற்கு எல்லாம் அறமாவது விருந்தோம்பல் என்கிறது. பத்துப்பாட்டில் 81 இடங்களில் விருந்து பற்றி பேசப்படுகிறது.

**விருந்தோம்பும் முறைகள்**

விருந்தினரை முக மலர்ச்சியுடன் வரவேற்றல், உபசரித்தல், வாயில் வரை சென்று வழியனுப்புதல்வரை பல்வேறு நெறிமுறைகளைக் கடைப்பிடித்துள்ளனர் நம் முன்னோர்கள். வள்ளல்கள், தம்மை நாடி வருபவரைத் தெய்வமாகக் கருதி கடமைகளைச் செய்திருக்கிறார்கள். முரசுக் கட்டிலில் தூங்கிய மோசிக்கீரனாரைத் தகடூர் எறிந்த இரும்பொறை கவரி வீசிப் பணிவிடை செய்துள்ளான். அதியமான், அவ்வைக்கு நெல்லிக்கனி கொடுத்து நெடுநாள் பாதுகாத்துள்ளான். அரசர்கள், வள்ளல்கள் மட்டுமல்லாமல் மக்களும் விருந்தினரைப் போற்றி பாராட்டியுள்ளனர்.

**இன்றைய நிலையில் விருந்தோம்பல்**

தற்போது வணிகம் கருதியோ பல்வேறு பணிகள் கருதியோ வெளியிடங்களுக்கும் வெளிநாட்டிற்கும் செல்பவருக்கு உணவகங்கள், தங்குமிடங்கள், சுற்றுலா விடுதிகள் போன்றவை இருப்பதால் விருந்து உபசரிக்க வேண்டிய தேவையில்லை.

**4. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்ந்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

- பாண்டிய நாட்டை ஆண்ட குசேல பாண்டியன், கல்வியறிவு மிக்கவன் ' எனக் கற்றோர் கூறக் கேட்ட இடைக்காடனார், சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க தம் கவிதையை அப்பாண்டியன் முன் பாடிக்காட்டினார்.
- மன்னன், சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலவரை அவமதித்தான்.
- இடைக்காடனார், திருஆலவாயில் உறையும் இறைவன் முன் சென்று வணங்கி, “தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்பமலர் மாலையை
- அணிந்த பாண்டியன், முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன் அவன் சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் என் புலமையை அவமதித்தான்.
- அவன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவமாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான் எனச் சினத்தோடு கூறினார்.
- இவ்வாறு உரைத்த இடைக்காடனார் கூற்றிற்குச் செவிசாய்த்து, இடைக்காடனாருக்கும் அவர் நண்பராகிய கபிலருக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்க நினைத்த இறைவன், தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியுடன் வையை ஆற்றின் தெற்கே ஒரு திருகோயிலை உருவாக்கி அங்குச் சென்று தங்கினார்.
- இதனை அறிந்த மன்னன் யான் என்ன குற்றம் செய்தேன் ஏன் இங்கு எழுந்தருளினீர் என வருந்தினான்.
- இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றத்தைத் தவிர, வேறு எந்த குற்றமும் இல்லை என்றார்.

- தன் தவற்றை உணர்ந்த பாண்டிய மன்னன், இடைக்காடனாருக்கு மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்திச் சிறப்புச் செய்தான்.

**5. சிலபதிக்கார மருவூர்ப்பார்க்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக:**

**மருவூர்ப்பாக்க வணிக வீதிகளில்**

- பூ,நறுமண பொருட்கள் விற்றனர்.
- பட்டு,பருத்தி நூல் ,பவளம்.முத்து விற்றனர்..
- தானியகடைகள் இருந்தன.
- ஏழு இசைகளை இசைத்தனர்.
- இறைச்சி விற்றனர்.
- உப்பு விற்றனர்.
- எண்ணெய் விற்றனர்.
- ஓவியர்,சிற்பிகள் இருந்தனர்.
- கைத்தொழில் பலரும் செய்தனர்.

**இக்கால வணிக வளாகம்**

- தரைதளம் ,மேல்தளம் போன்றவற்றில் வணிகம் செயல்படுகிறது
- அங்காடிகளில் அனைத்து வகை பொருட்களும் விற்கின்றனர்.
- இணையத்திலும் வணிகம் நடைபெறுகிறது.

**ஒப்பீடு**

இக்கால வணிகம் முற்கால வணிகத்தைவிட மேம்பட்டுள்ளது.

**6. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைக் கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.**

- மொழிபெயர்ப்பு, இசையமைப்பு, மகிழுந்து ஒட்டுதல் முதலிய மனித வேலைகளை செய்யச் செயற்கை நுண்ணறிவு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- கட்டுரை எழுத, கவிதை பாட, மனிதனால் இயலாத செயல்களை செய்ய, ஆட்கள் இல்லாத வணிக கடைகள் நடத்த பயன்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், மனிதர்கள் மேல் பாசம் பொழியுமா அன்புடன் அக்கறை கொள்ளுமா என்ற கேள்விகளையும் எழும்பவே செய்கிறது.

**செயற்கை நுண்ணறிவு புரட்சி**

- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கருவிகள் சந்தைப் பொருளாக விற்பனை செய்யப்பட்டாலும் அவை, சமுதாய பயன்பாட்டிற்கு உகந்ததாக இருப்பதையும் மறுக்க முடியாது.
- அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைக் கண்காணிப்புக் கருவி திருப்புவதும், போக்குவரத்து போக்குவரத்து நெரிசலை திறன் பேசியினால் வரைபடமாக அறிய உதவுவதும், திறன்பேசியின் நாம் சொல்லும் ஒளியை வாங்கி சரியாக சொல்லிக் காட்டுவதும், மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுவதும், கண் அறுவை மருத்துவம் செய்வதும், சமைப்பதும், புள்ளிகளை வைத்து படம் வரைவதும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினால் ஏற்பட்ட புரட்சி என்றே கூறலாம்.

**முன்னேற்றத்திற்கு உதவும் செயற்கை நுண்ணறிவு**

- செயற்கை நுண்ணறிவு என்பது மனிதகுலத்தின் ஒவ்வொரு செயலுக்கும் மெய்க்காப்பாளராக அமையும்.
- ஆதரவற்றோருக்கு ஆதரவளிக்கும். சந்தை இல்லாமல் பொருளோ பொருள் இல்லாமல் வாழ்வு இல்லை. இவ்வகையில் மனிதகுலம் அர்த்தமான வாழ்வு வாழ செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.
- உயர்வான பனிமலைகள், மாளிகைகள், அடுக்ககங்கள் என அனைத்திலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆட்சிசெய்யும்.
- வீட்டிலும் வெளியிலும் அலுவலகங்களிலும் ஆலயங்களிலும் மக்களின் பாதுகாப்புக்கு உதவும்.
- பயண நேரத்தை குறைப்பது, எரிபொருள் மிச்சப்படுத்துவது என மக்களுக்கு உதவிகரமாக இருக்கும்

**பாசம் காட்டுமா செயற்கை நுண்ணறிவு**

- மனித அன்பையும் பாசத்தையும் காட்ட தெரியாததனால்தான் அதனைச் செயற்கை நுண்ணறிவு என்கிறோம்.
- குழந்தைகளையும் முதியோர்களையும் பேணவும் பாசம் காட்ட தெரியாத ரோபோக்களுக்கு அவற்றை கற்றுக்கொடுக்க செயற்கை நுண்ணறிவு உதவும்.

**7. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க .**

- பேரன்பிற்குரிய அவையோர் அனை வருக்கும் வணக்கம்! இன்று இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ் மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்…….
- ஐம்பெரும் பூதங்கள் எவ்வாறு தோன்றின என்பது விரிவாக ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பேசப்பட்டுள்ளது. இச்செய்தி பிற சமய நூல்களின் கூற்றுகளோடும் வளர்ந்துள்ள அறிவியல் ஆய்வுகளின் முடிவுகளோடும் பெரிதும் பொருந்தி வருகின்றன
- அதாவது ஒன்றுக்கொன்று மாறிவரும் இயல்புடைய திங்களும் ஞாயிறும் அறிந்து, விண்ணுலகு வெறும் பாழாகிய பின்னர், அதுவும் கெட்டு ஒன்றுமில்லாமல் சிதைந்து ஒடுங்கிச் சில கழியும் அவ்வூழிகளின் பின்னர் அந்த தோற்றத்தின் பேரொலி ஊழி கழிந்தது.
- தொடர்ந்து வானம் தோன்றி முதல் பூத ஊழியும் அவ்வானத்தினின்று தோன்றிய காற்று ஊழியும் அந்தக் காற்றினின்று தோன்றி ஒளிவீசிய தீ பூதத்தின் ஊழியும் அத்தீயினின்று பனியும் மழையுமாய் தோன்றிய நீர்ப் பூதத்தின் ஊழியும் கழிந்த பின்னர் நீரினுள் மூழ்கி மூழ்கி நெடுங்காலம் கழிந்த பின்னே, நிலமாகிய பூதம் அவ்வெள்ளத்தின் ஊடே பீடுபெற்று எண்ணிறந்த காலம் கழித்து பின்னர் இந்நிலத்தின் உயிர்கள் தோன்றின என்று பரிபாடலில் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உலகும் உயிரினங்களும் உருவானதாக சுட்டிக் காட்டியுள்ளது.

**8. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெ ளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனை க் கதை ஒன்று எழுதுக.**

- ❖ மாலை நான்கு மணியிருக்கும் விண்கலம் செலுத்தும் இடத்தில் ஒரே பரபரப்பு. ஆறுமணிக்கு விண்கலம் விண்ணை நோக்கி புறப்பட இருக்கிறது. பொருத்தப்பட்ட நாற்சக்கர நாற்காலியில் ஓர் அசைவற்ற உருவம் வந்து கொண்டிருந்தது. அவரின் கண்களும் அந்த சக்கர நாற்காலியை பார்த்துக்கொண்டிருந்தன.
- ❖ விண்கலத்தில் பயணம் செய்பவர்களின் பட்டியலில் இஸ்ரோவில் விஞ்ஞானி மார்ட்டினும் இடம் பெற்றிருந்தார். விஞ்ஞானிகள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர். சக்கர நாற்காலியும் விண்கலம் அருகில் வந்து சேர்ந்தது. நாற்காலியில் அசைவற்று அமர்ந்திருப்பவர் ஸ்டீபன் ஹாக்கிங் அவரோடு பயணம். அவரால் பேச முடியாது எப்படியிருக்குமோ பயணம் என ஒவ்வொருவரும் தத்தம் எண்ணத்தை ஓடவிட்டு இருந்தனர்.
- ❖ மனிதர்களை ஏற்றிக் கொண்ட விண்கலம், அடைக்கப்பட்டது. அது புறப்பட தயாரானது. விண்வெளி உடை அணிந்திருந்த எல்லோரும் தங்கள் அடையாளத்தை மாற்றி ஒரே உருவத்தில் இருந்தனர். வெப்பத்தை கக்கிக்கொண்டு விண்ணில் சீறிப் பாய்கின்றன விண்கலத்தில் புவியீர்ப்பு மையம் வரை சாதாரணமாக இருந்தது. அதைத் தாண்டிய போது எடை குறையும் உணர்வு எல்லோரிடத்திலும் ஏற்படுத்துகிறது.
- ❖ செயலற்ற உறுப்புகளைக் கொண்ட ஸ்டீபன் ஹாக்கிங் பார்க்கிறார். அவரும் சக்கர நாற்காலியில் ஒட்டி போயிருந்தார் நாற்காலி மட்டும் பறந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் விஞ்ஞானி மார்ட்டின் அவரை நெருங்கி தொட்டார். ஸ்டீபனின் உணர்வு எந்த அளவிற்கு உள்ளது என்பதை அறிய சோதனை முறையில் தொட்டுப் பார்த்தார். உடனே கணினியில் நான் என்ன கவர்ச்சி நடிகையா தொட்டுப் பார்ப்பதற்கு என தட்டச்சு செய்து காட்டினார். எல்லோருக்கும் அவரை பார்த்து சிரித்தனர் அந்த அளவுக்கு நகைச்சுவை உணர்வு கொண்டவர் அவர்.
- ❖ கருந்துளையினுள் செல்லும் எதுவும் தப்பித்து வர முடியாதாமே. ஆமாம். ஆனால், கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். கருந்துளை என்பது எப்போதும் கருப்பாக இருக்குமா? உண்மையில் கருத்துளை கருப்பாக இருப்பதில்லை. ஒரு கட்டத்தில் அதில் இருந்து கதிர்வீச்சு அணுத்துகள்கள் கசியத் தொடங்கி இறுதியில் வெடித்து மறைந்துவிடும். இப்படி பல வினாக்களுக்கு தெளிவான விளக்கம் அளித்தார்.
- ❖ புவியீர்ப்பு வட்டத்திற்கு மேலே செல்லச்செல்ல எடையற்ற தன்மையை எல்லோரும் உணர்ந்தனர். ஓ.. அதோ வின்ஸ்லோ பறந்து தலைகுப்புற வருகிறார். வாங்க…. ஒருவரோடு ஒருவர் நெருங்கி கைகோர்ப்போம் என முயற்சி செய்தனர். அதோ… கப்பில் இருந்து காப்பி மிதந்து வருகிறது. விடுங்கள் நான்பருகிக்கொள்கிறேன். நெருங்கி உரிஞ்ச காப்பி வாயின் வழியே செல்ல விளையாட்டு காட்டியது.
- ❖ விண்கலம் பூமியின் சுற்றுவட்டப் பாதையில் சென்ற போது சில படங்கள் எடுத்துக் கொண்டனர். எல்லோருக்கும் பூமிக்கு திரும்ப நினைத்தனர். அதனால் விண்கலம் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டது. ஸ்டீபன் ஹாக்கிங் பயணத்தை மேற்கொண்டதன் நோக்கம் திரும்பி பூமிக்கு வந்தபின்தான் தெரியவந்தது.

❖ பூஜ்ஜிய ஈர்ப்பு விசை பயணத்தை மேற்கொண்டு எடையற்ற தன்மையை உணர்வதற்கே அவர் பயணப்பட்டிருக்கிறார். அவரோடு பயணம் செய்தது ஒரு மேதையோடு பயணித்த, புதிய அனுபவத்தை தந்தது என்று இஸ்ரோ விஞ்ஞானி மார்ட்டின் குறிப்பிட்டிருக்கிறார்.

9. **நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழ் ஒன்றில் தலையங்கம் எழுதுக.**

**முன்னுரை:**

மனத்திற்கு இன்பம் தருவன நிகழ்கலைகள் .

**நிகழ்கலை வடிவங்கள்:**

ஆடல்கள் , பாடல்கள் ,கதைகள் பழமொழிகள் விடுகதைகள் போன்றவை.

**நிகழும் இடங்கள்:**

தெரு,தெருகோடி,முச்சந்தி போன்றவை.

**ஒப்பனைகள்:**

ஆடை,அணிகலன்கள்,முக்கிய இடம்பெறும்.

**சிறப்பும் பழமையும்:**

அனைவராலும் விரும்பப்படும் கலை வாழ்வில் பிரிக்க முடியாத பண்பாட்டு கூறாகும்.

**அருகுதல்:**

தொழில்நுட்ப வளர்ச்சி ,திரைப்படம் ,தொடர் நாடகம் முக்கிய காரணமாகும்.

**மீளவழிகள்:**

கலைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**முடிவுரை:**

ஊடகம் உதவி செய்தால் நிகழ்கலைகள் தலைநிமிரும் . பண்பாடு உலகமறியும்.

10. **சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவை என்பதற்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.**

**அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை**

இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கம் கூடாது. நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தரும். இன்றைய சூழலில் நாமும் எதையும் எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும்.

**அரசியல் அறம்**

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. இன்று ஆட்சி செய்யும் அரசும் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வழிவகை செய்தல் வேண்டும்.

**போர் அறம்**

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். இன்று நாடுகளுக்கிடையே நடைபெறும் நேரடி மற்றும் மறைமுக போரில் அறம் பின்பற்றப்படுவதில்லை தன் கொள்கைக்காக மனித உயிர்கள் கொள்ளப்படுகின்றன இவை தவிர்க்கப்பட வேண்டும்.

**கொடை அறம்**

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. இன்று உறவினர்களுக்குக் கூட கொடுக்கும் தன்மை குறைந்துவிட்டது. தம்மால் இயன்றவற்றை மற்றவர்களுக்கு கொடுக்கும் குணத்தை வளர்த்துக் கொள்வது அவசியம்.

**உதவி**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இன்று பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை வெகுவாகவே குறைந்து விட்டது. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனைக உருவாக்குவதற்கும் உதவுகிறது.

**11. சங்க இலக்கியங்கள் கூறும் தமிழரின் கொடைத்திறம் பற்றிய கருத்துக்களை எழுதுக.**

**முன்னுரை**

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. தன் மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவது தான் உண்மையான மகிழ்ச்சி.

**செல்வத்தின் பயன்**

தான்பெற்ற செல்வத்தின் பயன் மற்றவருக்கு கொடுப்பதுதான் என்கிறார் நக்கீரர்.

'செல்வத்தின் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே' (புறநானூறு)

**கொடையின் சிறப்பு**

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது. கடையெழு வள்ளல்களின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்தரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன. பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே உள்ளது. அரியனவற்றை தயங்காது கொடுத்தலும் அதனால் ஏற்படும் இழப்புக்கு வருந்தாமல் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாக கூறப்படுகின்றன.

வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்" "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

**கொடையில் சிறந்தோர்**

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும் அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார். பேகன் மறுமை நோக்கி கொடுக்காதவன் என்கிறார் பரணர். தன்னை நாடிவந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது, தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தியதாகப் பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். எல்லாவற்றையும் கொடுப்பவன் என்று மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாராட்டுகிறார்.

**அக இலக்கியத்தில் கொடை**

புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

வள்ளல்கள் மட்டுமன்றிப் புலவர்களும் ஈந்து மகிந்ததை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது .

12. **அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பெருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதை கொண்டு விவரிக்க.**

**அன்னமய்யாவின் கண்களில் வாலிபன்**

அந்த வாலிபன் தற்செயலாக அந்தப் பக்கம் வந்த அன்னமய்யாவின் கண்களில் பட்டான். அருகில் சென்று பார்த்தபோதுதான் அவன் ஒரு வாலிபன் என்று தெரிந்தது. கால்களை நீட்டி புளிய மரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அவனை நெருங்கி போய் பார்த்தான் அன்னமய்யா. பசியால் வாடிப்போன அந்த முகத்தில் தெரிந்த ஏக்கப்பார்வை கவனிக்கக் கூடியதாக இருந்தது. அன்னமய்யாவைப் பார்த்ததும் அவன் ஒரு சிறு புன்னகை காட்டினான். தன்னைப் பார்த்து ஒரு புன்னகை காட்டிய அந்த வாலிப மனிதரிடம் போய், அருகில் நின்று வாய் திறக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான்.

**மயக்கம் தெளிவித்த மனிதநேயம்**

வாலிபன் குடிக்க தண்ணீர் கிடைக்குமா என்று அவனைக் கேட்பது போல பார்த்தான். அதைப் புரிந்துகொண்ட அன்னமய்யா, ஒரு வேப்பமரத்தின் அடியில் இருந்த மண் கலயங்களில் ஒரு களையத்தை எடுத்தான். அந்த களையத்தில் கஞ்சி நிரப்பப்பட்டிருந்தது. அந்த கஞ்சியை எடுத்து சிரட்டையில் ஊற்றி கொடுத்தான். கஞ்சியை உறிஞ்சி குடித்தாள் வாலிபன். கண்கள் சொருகின. தொண்டை வழியாகக் கஞ்சி இறங்கும் சுகத்தை முகம் சொல்லியது. கலயத்தில் இருந்த கஞ்சியைச் சிரட்டை வழியாக மடக்கி மடக்கி உறிஞ்சி குடித்தான். அவன் உயிர் ஊற்று பொங்கி நிறைந்தது. அப்படியே அந்த வேப்பமரத்தின் நிழலிலேயே தூங்கிவிட்டான்.

**கண் விழிக்கக் காத்திருந்த அன்னமய்யா**

நீச்சு தண்ணீர் குடித்த மனநிறைவோடு மரத்தின் நிழலில் தூங்கிய வாலிபனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டதோ அதைவிட மேலான ஒரு நிறைவு அன்னமய்யாவிற்கு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்ததும் அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பது போல அவனை ஒரு தடவை பிரியத்தோடு பார்த்து காத்திருந்தான் அன்னமய்யா. சிறிது நேரத்துக்குப்பின் உறக்கம் களைந்து வாலிபனிடமிருந்து நன்றி கலந்த புன்னகை வெளிப்பட்டது.

**அன்னம் வழங்கி அன்னமய்யா**

அன்னமய்யா, அந்த வாலிபரை அழைத்துக் கொண்டு தன்னுடைய நண்பன் சுப்பையாவின் புஞ்சை நிலத்துக்கு சென்றான். அங்கு அருகு எடுத்துக் கொண்டிருந்தவர்கள் மணி என்கின்ற அந்த வாலிபனை வரவேற்று அமரச் செய்தார்கள். எல்லோரும் சாப்பிடுவதற்கு தயாரானார்கள். வாலிபனின் கையில் ஒரு கால் உருண்டை கம்மஞ்சோறு வைத்தனர். கடுமையான பசியால் அவன் அரை உருண்டைவரை சாப்பிட்டு முடித்தான். அனைவரும் ஓய்வெடுத்துக்கொண்டே ஊர் கதைகளைப் பேச, மணி என்ற அந்த வாலிபனும் திரும்பவும் படுத்து அமைதியாக கண்களை மூடி உறங்கினான்.

**அன்னமய்யா பெயர் பொருத்தம்**

பலரும் சென்றுவரும் அந்த பாதையில் அன்னமய்யா மட்டுமே அவனைப் பார்த்து இறக்கப்பட்டு அவனுக்கு உணவு கொடுத்து, உயிரைக் கொடுத்தான். வாலிபன் உறங்கத் தொடங்கும்முன் அன்னமய்யாவின் பெயரைக் கேட்டு தெரிந்துக் கொண்டான். அந்த பெயரை மனதில் திரும்பத் திரும்பச் சொல்லி பார்த்தான். அன்னமிட்ட கைகளுக்குச் சொந்தக்காரரின் பெயர் அன்னமய்யா! என்ன ஒரு பொருத்தம் என்று நினைத்துக்கொண்டான்.

**13. ‘கற்கை நன்றே கற்கை நன்றே**

**பிச்சை புகினும் கற்கை நன்றே’ என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கரையைப் பற்றிய உங்கள் கருத்துகளை விவரிக்க.**

**புதிய நம்பிக்கை**

**முன்னுரை:**

பருத்திக்காட்டில் வேலைசெய்யும் கருப்பர் இனத்தவராகிய பாட்ஸி, சாம் இணையர் படிப்பறிவற்றவர்கள் ஆவார்கள். இவர்களின் குடும்பத்தில் முதல் கல்வியறிவு பெற்றவர் இளைய மகள் மேரியே ஆவாள். மேரி கல்வி கற்பதற்கான சூழல் ஏற்பட்ட நிகழ்வை இக்கதையில் காணலாம்.

**பருத்திக்காட்டில் மேரி:**

பருத்திக் காட்டில் தன் பதினொரு வயதுவரை பருத்திப் பயிரிடும் பருவம், பருத்திச் செடி வளரும் விதம், அறுவடைக் காலம் முதலியவற்றை மட்டுமே அறிந்து வளர்ந்தவள் மேரி. செடி வளர்ப்பதில் கவனத்தோடு இருக்கும் மேரி, அவ்வப்போது தன் குடும்பத்துடனும் மகிழ்ச்சியாக இருப்பாள்.

**மேரியின் மனவருத்தம்:**

ஒருநாள் தன் அம்மாவுடன் வெள்ளையர்கள் வசிக்கும் வீட்டிற்குச் சென்றிருந்தாள். அங்குள்ள குழந்தைகள் இவளை விளையாட அழைத்தனர். இவள் அவர்கள் வசிக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளாகத் தொட்டுப்பார்த்து மனம் மகிழ்ந்தாள். இவள் அதே முனைப்புடன் அருகிலிருந்த ஒரு புத்தகத்தைத் தொட்டபோது ஒரு குழந்தை, நீ அதை எடுக்கக்கூடாது; உன்னால் படிக்க முடியாது என்று கூறி, அப்புத்தகத்தை தட்டிவிட்டாள்.

**புதிய நம்பிக்கை**

முதல் முறையாக தன் படிப்பு பற்றி, தன் பெற்றோரிடம் பேசிய மேரி, அது கிடைப்பது அரிது என்று உணர்ந்தபோது மிகவும் மனவருத்தமுற்றாள். இருப்பினும் வெள்ளைக் குழந்தைக் கூறிய அச்சொற்களால் தன் இயல்பான செயல்பாடுகளைச் செய்யாமல் வருத்தத்தோடு இருந்தாள். ஒருநாள் மிஸ் வில்சன் என்ற ஆசிரியர் ஒருவர் பருத்திக்காட்டுக்கு வந்து மேரியைப் பள்ளிக்கு வரச்சொல்லி அழைத்தபோது மிகவும் மன மகிழ்ச்சியுடன் பள்ளிக்குச் சென்று தன் படிப்பை கவனத்துடன் படித்து முடித்தாள். மீண்டும் மிஸ் வில்சன் உதவியுடன் மேற்படிப்பு படிக்க வாய்ப்பு கிடைத்தபோது அந்த ஊரே அவளை இரயில் நிலையம் வரைச் சென்று வழிஅனுப்பிவைத்தது.

**முடிவுரை**

தனக்கு படிப்பு கிடைக்காததன் பின்னணியை உணர்ந்த மேரி தன்னைப்போன்ற கருப்பர் இனத்து குழந்தைகள் படிப்பதற்காக ஒரு பள்ளியைக் கட்டி அவர்களுக்கு புதிய நம்பிக்கையை உருவாக்கினாள்.

**14. “பாய்ச்சல்” கதை உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக .**

- ❖ பாய்ச்சல் – கலை நுட்பத்தை உணர்த்துகிறது.
- ❖ தெருக்களில் தினந்தோறும் ஆட்டம் ஆடுவர்.
- ❖ ஒருநாள் அனுமார் வேடம்.
- ❖ அனுமார் சைகைகள் அனைத்தும் இடம்பெற்றன.
- ❖ பார்த்தவருக்கு மகிழ்ச்சி.
- ❖ தானும் அவ்வாறே ஆடினார்.
- ❖ உண்மைக் கலைஞனின் உழைப்பு வெற்றி பெற்றது.

- ❖ கலைஞன் “ வேறு கலைஞனை உருவாக்குவதே கலையை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்த உதவும் என்பதை பாய்ச்சல் காட்டுகிறது.

**15. “மங்கையராய்ப் பிறப்பதற்கே” என்ற கூற்றிற்கு ஒப்பான பெண்மணிகளின் வாழ்க்கை நிகழ்வுகளை சொந்த நடையில் எழுதுக.**

**முன்னுரை:**

“மங்கையராய்ப் பிறப்பது தவம்” அவ்வாறான தவப்புதல்விகளைக் காண்போம்.

**எம் எஸ் சுப்புலட்சுமி**

தன் இசைத்திறனால் அனைவரையும் திரும்பி பார்க்க வைத்தவர்.

**பால சரஸ்வதி**

பரதநாட்டியம் ஆன்மிக பட்டறிவை வளர்க்கும் என்றவர் “ஜன கன மன” நம் நாட்டு பாடலுக்கு ஆடியவர்.

**ராஜம் கிருஷ்ணன்**

புதினத்தை புதிய பார்வையில் பார்த்தவர். சமூகச்சிக்கல்கள் இவரது கதைகரு.

**கிருஷ்ணம்மாள்**

இந்திய விடுதலைக்காக பூதான இயக்கத்தில் இணைந்தார்.

**சின்னப்பிள்ளை**

படிக்காத இவர் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவினார்.

முடிவுரை

“பெண்கள் நாட்டின் கண்கள்” என்பதற்கு இவர்களே சான்றுகளாகும்.

**1. பாநயம் பாராட்டுக.**

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**
**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!**
**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!**
**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!**

**- க. நமச்சிவாயர்.**

**(வினாவிற்கு தகுந்தாற்போல் நயங்களைத் தெரிவு செய்து எழுதுக)**

| பொருளடக்கம் | |
|---|---|
| முன்னுரை | |
| திரண்டகருத்து, | மையக்கருத்து |
| மோனைத்தொடை, | எதுகைத்தொடை |
| இயைபுத்தொடை, | முரண் தொடை |
| சொல்நயம், | அணிநயம் |
| சந்த நயம், | சுவை நயம் |
| கற்பனை நயம், | தலைப்பு |
| முடிவுரை | |

**முன்னுரை**

"ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே

உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே" – முதலிய பொருள் சுவை மிக்க வரிகளை உடைய இப்பாடலின் நயத்தினை இப்போது காண்போம்.

**திரண்ட கருத்து** **செந்தமிழ் மொழியே!**

தேனைக்காட்டிலும் இனிமையான செந்தமிழ் மொழியே! தென்னாடாகிய தமிழ்நாடு உலகம்முழுதும் தெரியுமாறு திகழும் தென்மொழி மொழியே! என் உடலைக் காட்டிலும் ஒளிர்கின்ற ஒளிபொருந்திய சிறப்புமிகு தமிழே! நல்லுணர்வால் உணரப்படும் மொழியே! வானைவிட ஓங்கிய வள்ளல் தன்மை பொருந்திய மொழியே! மாந்தருக்கு இரு கண்களாகாக் கருதப்படும் மொழியே! என்றும் தனித்து நின்று அரசாலும் தனித்தமிழ் மொழியே! உன்னை வாழ்த்துகிறேன்.

**மையக்கருத்து**

செந்தமிழ் மொழியின் சிறப்புகளை கா. நமச்சிவாயர் அழகாக எடுத்துரைக்கிறார்.

**மோனைத் தொடை**

அடிதோறும் சீர்தோறும் முதலாம் எழுத்து ஒன்றி வருவது மோனைத்தொடை ஆகும்.

| அடி மோனை | சீர்மோனை |
|---|---|
| - | **தே**னினும் – **தெ**ன்னாடு- **தி**கழுந்தென்<br>**ஒ**ளிர்வுறும்- **ஒ**ண்டமிழ் - **ஒ**ளிர்தமிழ்<br>**வா**னினும்- **வ**ண்டமிழ் - **வ**யங்குநன்<br>**தா**னனி- **த**னித்தமிழ் |

**எதுகைத் தொடை**

அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத்தொடை ஆகும்.

| அடி எதுகை | சீர் எதுகை |
|---|---|
| தே**னி**னும்<br>ஊ**னி**னும்<br>வா**னி**னும்<br>தா**ன**னி | உ**ண**ர்வினுக் - கு**ண**ர்வதாய் |

**இயைபுத் தொடை**

அடிதோறும் சீர்தோறும் இறுதி எழுத்து அல்லது சொல் ஒன்றி வருவது இயைபுத்தொடை ஆகும்.

| அடி இயைபு | சீர் இயைபு |
|---|---|
| **மொழியே** என்னும் சொல் அடியியைபாக வந்துள்ளது. | **மொழியே** என்னும் சொல் சீரியைபாகவும் வந்துள்ளது. |

**சொல்நயம்**

ஆசிரியர் இப்பாடலை எளிய, இனிய, கலைச்சொற்களைக் கொண்டு சொல்நயம் தோன்ற எழுதியுள்ளார்.

**அணி நயம்**

`ஆசிரியர் இப்பாடலை இயல்புநவிற்சி அணியால் அழகுற எழுதியுள்ளார்.

**சந்த நயம்**

பாவின் ஓசையும் தாளமுமே சந்தமாகும். அவ்வகையில் ஆசிரியர் இப்பாடலை அகவலோசைத் தோன்றும் படி சந்தநயதோடு எழுதியுள்ளார்.

**சுவை நயம்**

ஆசிரியர் இப்பாடலை பெருமிதசுவைத் தோன்ற எழுதியுள்ளார்.

**முடிவுரை**

ஆசிரியர் இப்படலை மோனை நயம், எதுகை நயம், இயைபு நயம், அணிநயம், சந்த நயம், சுவை நயம் முதலிய நயங்கள் தோன்ற அழகுற பாடியுள்ளார்.

**கட்டுரை - குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.**

1. **தமிழ் இலக்கியவளம் - கல்வி மொழி- பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்- அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை**

அறிவு என்பது பொதுவுடைமை. அது இந்த மொழிக்கே உரியது என்று கூறிவிட முடியாது. அவ்வகையில் பலமொழிகளில் காணப்படுகின்ற அறிவுக்களஞ்சியங்களாகிய இலக்கியங்களை மொழிபெயர்த்து தமிழுக்கு அழகு சேர்ப்பது குறித்து இக்கட்டுரையில் காண்போம்!

**தமிழ் இலக்கியவளம்**

உலகின் முதல் மனிதன் பேசிய மொழி தமிழ். அது இன்றளவும் செம்மையாக விளங்கி வருகிறது. அதற்கு அதன் இலக்கிய வளமே காரணமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கால இலக்கியங்கள் வரையில் தமிழில் எண்ணிக்கையில் அடங்கா இலக்கியங்கள் உள்ளன.

**பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்**

ஒரு மொழியில் தோன்றிய இலக்கியங்கள் அம்மொழியில் மட்டும் இருந்துவிடின் சிறப்பில்லை. அவ்விலக்கியங்கள் பல்வேறு நாட்டு மக்களையும் சென்றடையும்போதுதான் மேலும் அது சிறப்படைகிறது. ஜெர்மன் மொழியில், மொழி பெயர்ப்பின் மூலம் அறிமுகமான ஷேக்ஸ்பியர் இந்நாட்டு படைப்பாளர்களைப் போலவே கொண்டாடப்படுகிறார். நேரடி மொழிபெயர்ப்பாக பிரெஞ்சு, ஜெர்மனி, அமெரிக்கா, லத்தீன் முதலான நாடுகளில் நூல்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன

**கல்வி மொழி**

மொழிபெயர்ப்பை ஒரு கல்வியாக ஆக்குவதன் மூலம், அனைத்து உலக அறிவையும் நாம் எளிதாக பெறமுடியும். பல அறிவுத் துறைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வெளிநாட்டவரை எதிர்பார்க்காமல் நமக்கு நாமே வேண்டிய அனைத்தையும் தமிழ் மொழியின் சொல் வளத்தைக் கொண்டு உருவாக்கிக் கொள்ள முடியும். மனிதவளத்தை முழுமையாக பயன்படுத்த முடியும்.

வேலைவாய்ப்பு தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இனம், மொழி எல்லைகளை கடந்து ஓர் உலக தன்மையை பெறமுடியும். பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் பிற மொழிகளின் இலக்கியங்களை மொழி பெயர்ப்பின் மூலம் எளிதில் பெற முடியும்.

**அறிவியல் கருத்துகள்**

ஒரு சிறு நாட்டில் உள்ள ஒருவர் ஒரு புதிய அறிவியல் கண்டுப்பிடிப்பை நிகழ்த்துவார். அது மனித குலத்திற்கு அவசியமான ஒன்றாக மாறும். அது பிறமொழிகளுக்கு மொழிபெயர்க்கும்போதுதான் எல்லோருக்கும் பயனளிக்கும். அவ்வகையில் இன்று மொழிபெயர்ப்பின் மூலம் எண்ணிலடங்கா அறிவியல் கருத்துக்கள் தமிழ்மொழியில் காணப்படுகின்றன.

**பிறதுறைக் கருத்துகள்**

மொழிபெயர்ப்பு மனிதர்களையும் நாடுகளையும் காலங்களையும் இணைக்கின்ற நெடுஞ்சாலையாக இருக்கிறது. காலத்தால், இடத்தால், மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது. இன்றைக்கு பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. திரைப்படங்கள், தொலைக்காட்சி தொடர்கள் ஆகியன வேற்று மொழி மாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழிபேசும் மக்களிடமும் சென்றடைகிறது. உலகமொழி பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

**தமிழக்குச் செழுமை**

தமிழ் இன்று செழுமையான மொழியாக இருபதற்குக் காரணம் அது கணினி மொழியாக உள்ளதும் மொழிப்பெயர்ப்புகள் மிகுதியாக உள்ளதுமே காரணங்கள் ஆகும்.

**முடிவுரை**

இன்று மொழிபெயர்ப்புக் கலையானது செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் வகையில் அமைந்து நம் தமிழருக்கும் அது பெருமை சேர்க்கிறது.

**2. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகள் கொண்டு கட்டுரையாக்குக.**

**(முன்னுரை - இனிய காட்சி – பல்துறை அரங்குகள் – விளையாட்டு அரங்குகள் – உணவு அரங்குகள் – விளையாட்டு பொருட்கள்)**

**முன்னுரை:**

எங்கள் ஊர் திருவக்கரை. அங்குள்ள வக்கிரகாளியம்மன் பௌர்ணமி சிறப்பு பூசையையொட்டி ஒருவாரம் அரசு பொருட்காட்சி நடைபெறும்.

**இனிய காட்சி :**

வக்கிரகாளியின் முகப்பு வாயிலில் பொருட்காட்சி அமைக்கப்பட்டது . குடும்பத்தோடு காலையில் சென்றோம்.

**பல்துறை அரங்குகள்** :

பல்துறை அரங்குகள் வண்ண ஒளிவிளக்குடன் அமைக்கப்பட்டு இருந்தது.

**விளையாட்டு அரங்குகள்**:

விளையாட்டு அரங்குகளில் , விளையாட்டு பொருட்கள் வாங்கினோம்.

**முடிவுரை**:

பொருட்காட்சியை கண்டு மகிழ்ந்தோம். நீங்கா நினைவுகள் மனத்தில் மலர்ந்தது.

**3. குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்த்தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும் . எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குச் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை அணிவித்து சிற்றிலக்கியங்களையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.**

**முன்னுரை**

அன்னை மொழியே! அழகாய் அமைந்த செந்தமிழே! என்றும் எழில்சேர் கன்னியாய் திகழும் உனக்கு பேரிலக்கியத்துடன் சிற்றிலக்கியமும் படைத்தோர் பலர்! உமக்கு பெருமை சேர்க்கும் அச்சிற்றிலக்கியங்களுள் சிலவற்றை இக்கட்டுரையில் காண்போம்!

**பிள்ளைத்தமிழ்**

போற்றுவதற்குத் தகுதிவாய்ந்த கடவுளரையோ, மன்னரையோ, மக்களுள் சிலரையோ பாட்டுடைத்தலைவராகக் கொண்டு, அவர்களைக் குழந்தையாகப் பாவித்து அவர்களின் மீது பத்து பருவங்கள் அமைத்து பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். தமிழில் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், பாவேந்தர் பிள்ளைத்தமிழ் முதலியன சிறந்த பிள்ளைத்தமிழ் நூல்களாகும்.

**சதகம்**

நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் சதகம் ஆகும். திருச்சதகம், அறப்பளீசுவர சதகம் முதலிய சதகங்களைத் தமிழுக்குச் சமைத்துள்ளனர்.

**பரணி**

போரிலே ஆயிரம் யானைப்படை வீரர்களைக் கொன்றவனுக்குப் பாடுவது பரணி ஆகும். இது தோற்ற நாட்டின் பெயராலோ மன்னனின் பெயராலோ பாடப்படும்.

பரணி இலக்கியங்களுள் கலிங்கத்துப்பரணி காலத்தால் முற்பட்டது.

**கலம்பகம்**

கலம் + பகம் = கலம்பகம், (கலம் – பன்னிரண்டு; பகம் – ஆறு) பதினெட்டு உறுப்புகளைக் கொண்டு பாடப்படுவது கலம்பகம் ஆகும். நந்திக்கலம்பகம் காலத்தால் முற்பட்டது.

**உலா**

பவனி வரும் (உலா) பாட்டுடைத் தலைவனைப் பற்றியும் எழுவகை மகளிரும் அவன்மீது காதல் கொள்வதையும் பாடுவது உலா ஆகும். உலா பாடுவதில் ஒட்டக்கூத்தர் சிறந்தவர்.

**அந்தாதி**

அந்தம் ஆதியாகத் தொடுப்பது அந்தாதி ஆகும். அதாவது, ஒரு பாடலின் ஒரு அடியின் இறுதி அடுத்த அடியின் தொடக்கமாக அமைவது அந்தாதி ஆகும்.

**முடிவுரை**

தமிழ்மொழியை அன்னையாகப் பாவித்து, அத்தமிழன்னைக்குப் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை அணிவித்து

சிற்றிலக்கியங்களையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் தமிழ்ச்சான்றோர்கள். அவ்வழியில் நாமும் சென்று தமிழ்ப்பயிரைப் பேணி வளர்ப்போம்!

### 4. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் (01.07.1961 – 01.02.2003)

**முன்னுரை**

விண்வெளிக்கு பயணம் சென்ற இந்திய பெண்மணி என்ற பெருமைக்குரிய கல்பனா சாவ்லாவின் பெருமைப் பற்றியும் அவரின் சாதனைகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்!

**பிறப்பும் கல்வியும்**

கல்பனா சாவ்லா அவர்கள் இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் 01.07.1961 ஆம் ஆண்டு பனாரஸ்லால் சாவ்லாவுக்கும் சன்யோகிதா தேவிக்கும் மகளாகப் பிறந்தார்.

தன் ஆரம்பக்கல்வியை தன் சொந்த ஊரான கர்னல் அரசு பள்ளில் முடித்த அவர், 1982 ஆம் ஆண்டு சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் விமான ஊர்தி துறையில் இளங்கலைப் பொறியியல் பட்டப் படிப்பை முடித்தார். பின்னர்,1984 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் விண்வெளி பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதன் பின்னர் 1988 ஆம் ஆண்டு விண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

**முதல் விண்வெளிப்பயணம்**

1995 ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சி குழுவில் சேர்ந்த அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் கொலம்பியா விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் -87 ல் பயணம் செய்து 372 மணிநேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து பூமிக்குத் திரும்பினார்.

**கொலம்பியா விண்கல நிகழ்வு**

16.01.2003 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் -107ல் விண்வெளிக்குப் புறப்பட்டார். 16 நாள்கள் ஆய்வை முடித்து பூமிக்கு திரும்பும்போது பூமிக்கு மிக அருகில் விண்கலம் வெடித்ததில் உயிரிழந்தார்.

**முடிவுரை**

விண்வெளி பயணம் மேற்கொண்ட கல்பனா சாவ்லா அவர்கள் இந்தியாவுக்கு பெருமையைத் தேடித்தந்ததோடு பெண்கள் இனத்திற்கே ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்தார். அத்தகைய வீரப்பெண்மணியை நாம் போற்றி மகிழ்வோம்!

### 5. பள்ளி ஆண்டு விழா மலருக்காக நான் நூலகத்தில் படித்த ஒரு கவிதை நூலுக்கு மதிப்புரை

**நூலின் தலைப்பு**

மு.மேத்தா எழுதிய கண்ணீர் பூக்கள்

**நூலின் மையப்பொருள்**

இன்றைய சூழலில் மனிதனின் ஏக்கங்களும் மனதில் ஏற்படும் தாக்கங்களும் நூலின் மையப்பொருள்களாக அமைந்துள்ளன.

**மொழிநடை**

இலக்கண விதிமுறைகளை அதிகம் பயன்படுத்தாமல் சாதாரன பாமரனும் படித்து பொருள் புரிந்துகொள்ளும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது.

**வெளிப்படுத்தும் கருத்து**

இக்கவிதை நூலில் வாழ்வியலின் நடைமுறை உண்மைகள் அப்படியே படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. போரில்லா உலகம், ஆசையைக் குறைத்தல், அனைவரும் சமம், பெண்மையைப் போற்றுதல், அன்பு காட்டுதல் முதலிய பலக் கருத்துகள் இக்கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

**நூலின் நயம்**

மோனை, எதுகை, இயைபு, முரண், ஆகிய நயங்கள் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

"பங்களா தேசத்துப் பாதையில் நின்றொரு
பாடகன் பாடுகின்றேன்."

**நூல் கட்டமைப்பு**

இந்நூல் 28 கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத் தொகுப்பு ஆகும். இதில் உள்ள ஒவ்வொரு கவிதையும் ஒரு வாழ்வியல் எதார்த்தத்தை எடுத்தியம்புகிறது.

**சிறப்புக்கூறு**

இக்கவிதைத் தொகுப்பானது முப்பதாவது பதிப்பாகும். இது முப்பது முறை பதிக்கப்பட்டதைவிட வேறொரு சிறப்பு வேண்டுமா?

**நூல் ஆசிரியர்**

` கண்ணீர்ப் பூக்கள் கவிதை நூலின் ஆசிரியர் மு.மேத்தா ஆவார்.

**உருவாக்கம்**

- **முனைவர். க.அரிகிருஷ்ணன்,** தமிழாசிரியர்,
  அரசு மேல்நிலைப் பள்ளி, இரட்டணை.
- **திரு.இரா.பாரதிராஜா,** தமிழாசிரியர்,
  அரசு மேல்நிலைப் பள்ளி, பேரணி.
- **திரு. அ.சரவணன்,** தமிழாசிரியர்,
  அரசு உயர்நிலைப் பள்ளி, குன்னம்.
- **திரு. ம.முருகன்,** தமிழாசிரியர்,
  அரசு உயர்நிலைப் பள்ளி, கீழ்மாம்பட்டு.